Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

மார்ச். 26 - ஏப். 01, 2009

ரூபா 30.00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 807

## இளந்திரையனைப் புலனாய்வுப் பிரிவு கொன்றது ஏன்?






## மலையகத்தில் போஷாக்கின்றி அவதியுறும் கர்ப்பிணிகள்!



## புதுமாத்தளனில் புலிகள் வெட்டும் பொறிக்கிடங்கு!

## இடம்பெயர்ந்த மாணவர்களின் பிரச்சினைகள்



கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## இறப்பு - பிறப்பு செய்யும் முறை

**இந்துமதக்** கொள்கையின்படி மனிதப் பிறவி எடுத்தவர்கள் தாம் செய்த வினைப்பயன் நல்வினையோ, தீவினையோ அனுபவித்தே ஆக வேண்டும். நல்வினையை அதிகமாகச் செய்த ஆன்மாக்கள் பூமியில் இன்ப துன்பங்களை அனுபவித்து முடிந்த பின், தூய உடம்பை விட்டு சூக்கும உடம்புடன் பூதசாரமாகிய தேவசரீரத்தை எடுத்துக் கொண்டு, மேல் உலகங்களில் இருந்து இன்பத்தை அனுபவிக்கும். முடிந்த பின் எஞ்சிய வினைகளின் பயன்களை அனுபவிக்க சூக்கும உடம்புடன் பூமியில் தூல தேகத்தை எடுத்து மனிதராய்ப் பிறக்கும்.

தீவினையை அதிகமாகச் செய்தவர்கள் பூமியில் அனுபவம் முடிந்த பின் சூக்கும உடம்புடன் நரக உலகங்களில் போய் பூத சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்து, துன்பம் அனுபவித்து, முடிவில் சூக்கும தேகத்துடன் பூமியில் தோன்றி தூல தேகத்தை எடுத்து தாவரத்திலிருந்து பிறவிகளை எடுத்து, எடுத்து உயர்ந்து மனிதப் பிறவியை எடுத்து வினைகளைச் செய்து வினைப் பயன்களை அனுபவிக்கும். மேற்கூறியபடியின்றி பூமியில் இருந்து தூய உடம்பை விட்டவுடன், சூக்கும தேகத்துடன் வேறொரு யோனி வாய்ப்பட்டு பூமியிலேயே பிறப்பதுமுண்டு. அல்லது சூக்கும தேகத்துடன் பிறவியை எடாமல் பூமியில் சில காலமிருப்பதுமுண்டு. அல்லது சந்திர உலகத்தில் சில காலமிருக்கும் அல்லது பைசாச வடிவமாய்ச் சிலகாலம் திரியும் என்றும் இந்துமத தத்துவ நூல்கள் கூறுகின்றன.

-அ. அரசரெத்தினம், சேனையூர்



## ஏழைகளுக்குக் கொடுங்கள் உங்களுக்கும் இறைவன் கொடுப்பான்!

**சிலர்** செல்வர். ஆனாலோ, அவர்களின் குடும்பச் செல்வம் பெருகினாலோ அவர்களைக் கண்டு நிலைகுலையாதே! ஏனெனில் சாகும் போது அவர்கள் எதையும் எடுத்துப் போவதில்லை. அவர்களது செல்வமும் அவர்கள் பின் செல்வதில்லை.

(திருப்பாடல் 49-16-17)

சிலர் திடீரென பணக்காரர்களானதும் தாங்கள் வாழ்ந்த நிலையை மறந்து ஏதோ வானத்திலிருந்து குதித்து வந்தவர்களாகவும், பிறரை அசட்டை செய்து மதிக்காமலும் ஏன் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தாயைக்கூட புறம்பாகத் தள்ளிவிடுவோர் ஏராளம். செல்வம் நிலையற்றது. வெயிலேற கரைந்து போகும் பனியைப் போன்றது. எவ்வளவு தான் பணமிருந்தாலும் நாம் செத்து ஆறடி குழிக்குள்தான் அடக்கப்படுவோம். சாவு நாம் நினையாத நேரம் வருமென்பதையும், இவ்வுலகிலிருந்து நாம் எதையும் கொண்டு போகவே முடியாது. உங்களிடமுள்ள செல்வத்தை கஷ்டப்படும் ஏழைகளுக்குக் கொடுத்து உதவி செய்யுங்கள். உங்களிடம் தூய்மையான உள்ளம் இருப்பின் இது நிச்சயம் நடக்கும். இறைமகன் யேசுவும் நிச்சயம் இப்படியானவர்கட்கு தனது இராட்சியத்திலும் இடங்கொடுக்காமல் விடார்.

டீ. ஏ. ஜே. அருள்சாமி, இராஜவெல்ல.

## மனிதர்களிடையே சமாதானம் செய்தல்!

**இருவருக்கிடையிலோ** பலருக்கிடையிலோ ஏற்பட்டிருக்கும் பிளவையும், பூசலையும் அகற்றிச் சமரசம் செய்து வைப்பது மிகச் சிறந்த செயலாகும். இதுபற்றி அல்லாஹ் கூறுகின்றான்:-

''மேலும் விசுவாசிகளிலிருந்து இரு சாரார் சண்டையிட்டுக் கொண்டார்களானால், அப்பொழுது அவ்விருவர் மத்தியிலும் சமரசத்தை உண்டாக்குங்கள்''

மீண்டும் கூறுகின்றான் :- ''உண்மை விசுவாசிகளெல்லாம் சகோதரர்களாவர். ஆகவே, உங்களின் இரு சகோதரர்கள் மத்தியில் சமரசமாக்கி வையுங்கள். மேலும் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அருள் புரியப்படலாம்''

அத்தியாயம் : 49 வசனங்கள்: 9, 10.

''மனிதர்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து அவர்களிடையே சமரசம் செய்து வையுங்கள். அவர்களிடையே ஏற்படும் பிணக்கானது மார்க்கத்தையே மழுங்கடித்து விடும்'' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் :- ஹஜ்ரத் அபூதர்தாஉ (ரலி), திர்மிதி, அபூதாவூத்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை-07.

## கவிதைப் போட்டி இல.804



பாராட்டுக்குரியது

### ஓடிவிட்டார்களா?

களத்தில் பலிகொடுக்க
பயிற்சிக்குத் தொங்க
விட்டவர்கள்
படைகண்டு ஓடி
விட்டார்களா?
இறக்கிவிட
யாரும் இன்றி கலங்கிடும்
பிள்ளைகளே
காப்பாற்றப்படுவீர்கள்
கருணை உள்ளவர்களால்!

-ரகுமான் தம்பி,
புத்தளம்.




## கவிதைப் போட்டி இல.807



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.03.2009

கவிதைப் போட்டி இல. 807
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.

### உடற்பயிற்சி!

பாவிகள்
களமுனையில்
பலிகொடுக்கும்
அழிகையில் - கண்மணிகளே
ஏன் இந்த அழுகையும்,
கலக்கமும்!
நம்பியிருங்கள்
எதிர்காலம்
உங்களுக்காய்க்
காத்திருக்கின்றது...!

-செ.ஜெயசோதி,
வெள்ளவத்தை.

### இரை!

யார் என்ன தான்
சொன்னாலும்
சுதந்திரமாய்
சுற்றித் திரிந்து
பள்ளிப் படிப்பை பயில
வேண்டிய சிறார்களைக்
கட்டாய ஆயுதப்
பயிற்சிக்கு இரையாக்கும்
கைங்கரியம்
அரங்கேறிக் கொண்டுதான்
இருக்கிறது!!

-ஜாவித்-பாத்திமா ஹனா,
ஏறாவூர்-03.

### அச்சம் வேண்டாம்!

தம்பிமார்களே!
அழாதீர்கள்
(துப்பாக்கிர) வைக்கும்!
விமானக்குண்டு மழைக்கும்
இனிப் பயந்து
தொங்க வேண்டியதில்லை!
இரண்டிற்கும் ஓய்வு
காலம் நெருங்கிவிட்டது!!

-மீராமுகைதீன் - ஹாலீத்,
ஏறாவூர்-03ஏ.

### காயம்!

பட்டதையா என் மேனியில் காயம்
விட்டதையா என் வம்சம் கண்ணீர்
பட்டு விடுமோ என் எதிர்காலம் - என
ஏங்குதையா இளம் தளிர்கள்!

-ஜெ.லாவன்யா,
வவுனியா.

### விடிவு

அந்தரத்தில்
தொங்குகின்ற சிறார்களின்
எதிர்காலத்திற்கு...
இனிமேல்தான் விடிவு!
சிறுவர்களின்
நல்லெதிர் காலத்தினை
முளையிலேயே
கிள்ள நினைத்தவர்கள்
எல்லாம் கூண்டோடு
சாய்க்கப்படுகிறார்கள்!

-இர்ஷானா-நிஷால்தீன்,
பிறைந்துறைச்சேனை.

### பங்கர் நாயகர்!

அப்பாவிப் பாலகரை
அந்தரத்தில்
தவிக்க விட்டு விட்டு
பங்கருக்குள் - சொகுசுடன்
பதுங்கி வாழ்ந்த
பங்கர் நாயகர்
பறந்ததெங்கே?

-சோலைக்குயில் ஹஸனி,
கல்முனை-07.

### போர்ப்பரிசு!

பசி தீர்க்க
ஆகாரம் கேட்டதற்கு
உயிர் போக்க
ஆயுதம் தந்தார்கள்!
தங்கி வாழ
இடம் கேட்டதற்குத்
தொங்க வைத்து
இடர் தருகிறார்கள்!

-அபூசஊத், கொச்சிக்கடை.

### ஆறு முகம்!

இதுவென்ன
சிறுவர்களுக்கான
பயிற்சியா
இல்லை
அரக்கப் பெருந்தகைகளின்
சித்திரவதையா...?!

-பாண்டியூர், ஏ.பி.என்.
நவநீதன்.

### ஏன் இந்தச் சோதனை!

சிந்திக்க வைக்கும்
பிஞ்சு நெஞ்சங்களை
கொன்றொழிக்க
இந்தச் சோதனை?...

-பெரோஜ் எம் பஸ்மீர்,
கல்முனை.

## உங்கள் பக்கம்

### மஞ்சந்தொடுவாய் உபதபாலகத்தின் அவலநிலை தொடருமா?

**மட்டக்களப்பு** மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமாக விளங்கும் மஞ்சந்தொடுவாயில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த உப தபாலகத்தை மீளமைப்புச் செய்து தருமாறு இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேற்படி தபாலகமானது இற்றைக்கு முப்பது வருடங்களாக, இட வசதியற்ற ஒரு அறையிலேயே இயங்கி வருகின்றது. நாளாந்தம் ஐநூறுக்கு மேற்பட்ட தபால்கள் போடப்படுவதுடன் விநியோகமும் செய்யப்பட்டும் வருகின்றன. இருந்த போதும் காலத்திற்கு ஏற்ற விதத்தில் மேற்படி தபாலகம் புனரமைப்பு செய்யப்படாது தொடர்ந்தும் இட நெருக்கடியான கட்டடத்தில் இயங்கி வருவது வேதனைக்குரிய விடயமாகும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி தபாலகத்திற்குப் பல நூற்றுக்கணக்கான மக்கள் நாளாந்தம் வந்து போகின்றனர். ஆனால் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் தபாலகத்தின் வசதிகள் காணப்படவில்லை. இந்த மாவட்டத்தில் பல பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் பிரதிநிதித்துவம் செய்த போதும் குறித்த தபாலகம் இவ்வாறு கவனிப்பாரற்றுக் கிடப்பது வேதனைக்குரிய விடயமாகும். மேற்படி தபாலகத்தை இடவசதியான ஒரு தபாலகமாக மாற்றித் தருமாறு மேற்படி உரிய அதிகாரிகளிடமும், இக்கிராமவாசிகளின் சார்பாக, ''தினமுரசு உங்கள் பக்கம்'' வாயிலாக மிகவும் தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றேன்.

-யூ.எல்.ஏ.மஜீட்,
சாய்ந்தமருது-14.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் - உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 --2360903
தொலை நகல் (Fax):-011 - 2360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com


# வாசகர் சாலை

## இலக்கிய நயமே! கலக்கிடு நூலாய்!!

**தினமுரசில்** வரும் கற்பகன் எழுத்தாளரின் இலக்கிய நயம், கம்பன், வள்ளுவரிலிருந்து வாழும் வாலிபரை சுட்டு விரல் நீட்டுகின்றது. என் கணிப்பிலிது அறுநூறு வயதென்றெண்ணியதுண்மை., இலக்கிய காலங்கள் எத்தனை உண்டோ! அத்தனைக்கும் பொருத்தமான பொதுவான பயணமிது.

சுவாரசியம் என்னவெனின் பொல்லூண்டும் வயது தாண்டி ஈழத்து வாலியாய் வாழ்ந்த மகிமை.

அளவு கடந்த கற்பனை வளமும், சொற்பஞ்சமில்லாத வானத்து உயரமும் ஆட்டத்திற்கு ஆட்டம் ஓட்டத்துக்கு ஓட்டம். வளைவு (சுழிவு) நெளிவு அறத்துப் பால் காமத்துப் பால் யாவும் சேர்ந்த இலக்கிய புரியாணி.

இலக்கிய மீன் தொட்டியிலிது ஓடும் மீனையா இந்த நூற்றாண்டில் ஆயிரம் பக்கத்தில் தொள்ளாயிரத்தி தொண்ணூறு பக்கங்கள் வெள்ளையாய் நூல்கள் வெளிவரும் போது இலக்கியத் தாய் இதை ஏற்பார் என்றெழுதும் போது அவ்வார்த்தைக்கு மிகப் பொருத்தமான இலக்கியமே நூலாய் எழுந்திடு.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர்-01.

## எங்கள் பிரச்சினையில் உங்கள் கவனம்!

**உங்கள்** பிரச்சினை என்ன? என்று வாராவாரம் வாசகர்களிடையே வினாத் தொடுத்து எங்கள் உள்ளங்களை உறுத்திக் கொண்டிருக்கும் விடயங்களுக்கு முரசு முன்வைக்கும் ஆலோசனைகள் இதயத்திற்கு இதம் தருகிறது. உங்கள் பிரச்சினை என்ன? பகுதி மூலம் பற்பல கோணத்தில் பதில்தரும் முரசே! தொடரட்டும் எங்கள் பிரச்சினையில் உங்கள் கவனம்.

-எம்.சீ.கலீல்,
கல்முனை-05.

## நானிலமெங்கும் புகழைப் பரப்பும் தினமுரசே!

**உன் புகழ்** உலகமெங்கும் வெற்றி நடை போட எனது வாழ்த்துக்கள். நான் உன் வீரத்தையும், திறமையின் வளர்ச்சியையும் கண்டு பெருமிதம் கொள்கிறேன். எம் ஒவ்வொருவரின் உள்ளங்களையும் குளிர வைக்கும் இளையவர்களின் தேன்கிண்ணம், சிறுவர்களுக்கு வழிகாட்டும் பாப்பா முரசு, சிறப்புக் கல்விமுரசு அத்தனையும் இனிமையிலும் இனிமை... அதுமட்டுமன்றி ஒவ்வொன்றையும் அலசி ஆராய வைத்துச் சிந்திக்க வைக்கும் அரசியல் களம் மிகவும் அற்புதம்! உன் சேவை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்!

A.டொறின், கொழும்பு-05.


வவுனியா நலன்புரி முகாம்களில் மக்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ்

# யுத்த வலயப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மிக விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்

## வவுனியா முகாம்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் உறுதிமொழி

''இட நெருக்கடியான நிலையிலும், பல உடல் - உளத் துன்பங்களைச் சுமந்த நிலையிலும்தான் இந்த முகாம்களில் நீங்கள் வாழ்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். உங்களை இங்கே ஐந்து வருடங்களுக்குத் தடுத்து வைக்கப் போகிறார்களென்று சிலர் பொய்யான கதைகளைக் கட்டிவிடலாம். அது உண்மையல்ல. வன்முறைகள் இல்லாத சூழலும், மிதிவெடி அபாயம் இல்லாத நிலையும் ஏற்பட்டதும் உங்கள் சொந்த இடங்களில் நீங்கள் குடியமர்த்தப்படுவீர்கள். உங்கள் மீள்குடியேற்றத்துக்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்களிலிருந்து ஒரு வருடம் வரை செல்லும்'' என்று சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வவுனியாவில் இடம்பெயர்ந்த முகாம்களில் வாழும் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக வவுனியாவில் தங்கியிருக்கும் வட மாகாண செயலணிக் குழுவின் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்குள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கும், கதிர்காமர் நலன்புரிக் கிராமத்துக்கும் சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து உரையாடி-னார். மக்கள் தாம் எதிர்கொண்ட, எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நேர-டியாகவே அமைச்சருக்கு எடுத்து விளக்கினர். பல்வேறு திணைக்கள அதிகாரிகள் சகிதம் முகாம்களுக்குச் சென்ற அமைச்சர், உடனடியாகத் தீர்வு காணக் கூடிய பிரச்சினைகளுக்குத் தாமதமின்றி நிவாரணங்களைத் தேடிக் கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அங்கு அமைச்சர் உரையாற்றுகையில் கூறிய-தாவது:

நான் உங்களைச் சந்திக்க வருவதற்கு முன்னர் ஜனாதிபதியையும், அவரது விஷேட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே இங்கு வந்துள்ளேன். உங்களை நேரடியாகச் சந்தித்து உங்கள் பிரச்சினைகளைத் தெரிந்து கொண்டு மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்து உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

உங்கள் பிரதிநிதியாகவே நான் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றேன். தமிழ் மக்களின் பிரதிநிதியாகவே அரசாங்கம் என்னைப் பார்க்கிறது. உங்களை விரைவில் உங்கள் உங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றிய பின்னர் கல்வி, வேலைவாய்ப்பு, சுய தொழில், அபிவிருத்தி ஆகிய அனைத்துப் பிரச்சினைகளை விரைவாகக் கட்டம் கட்டமாகத் தீர்த்து வைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். . மீள்குடியேற்றத்துக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடையும் வரை இங்கே உங்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களை முதலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. முதியவர்களைப் பொறுப்பெடுப்பதற்கு யாராவது முன்வந்தால் அவர்களையும் அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. முதியவர்களைப் பொறுப்பேற்பதற்கு யாரும் இல்லாவிட்டால் அவர்களுக்கென முதியோர் இல்லமொன்றினை சமூக சேவைகள் அமைச்சு ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது. அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. வேலை இழந்தவர்கள் அல்லது வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்கள் என்னோடு தொடர்பு (தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## பிரபாகரன் தண்டிக்கப்பட வேண்டும்; ஏனையவர்களுக்கு மன்னிப்பு வேண்டும்

''பிரபாகரன் உட்பட புலித் தலைமை தண்டிக்கப்பட வேண்டும். தவறாக வழிநடத்தப்பட்ட ஏனைய இளைஞர், யுவதிகளுக்கு மன்னிப்பளித்துப் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும்'' என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யுத்தச் சூழல் பகுதிகளிலிருந்து தப்பிவந்து வவுனியா காமினி சிங்கள மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்போது திடீரென எழுந்த பொதுமகன் ஒருவர் ''நீங்கள் சொல்வது உண்மையிலேயே உங்கள் எதிர்பார்ப்பா?'' என்று கேள்வி எழுப்பினார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள 35 வன்னி மாணவர்களுக்கு உளவளத்துணை ஆலோசனை!

கிழக்குப் பல்கலைக்கழத்திலுள்ள சுமார் 35 மாணவ, மாணவிகளுக்கு உளவளத்துணை ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் அனைவரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ரவிந்திரன் சுதர்ஷனி என்ற மாணவி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டதையடுத்து யுத்த வலயப் பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளில் பல்கலைக்கழக நிர்வாகம் கூடிய கவனம் செலுத்தி வருகிறது. இந்த மாணவி ஏற்கனவே மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்திருக்கிறார். யுத்தச் சூழலால் இவர் பாதிக்கப்பட்டிருக்கவில்லையென நிர்வாகம் தெரிவித்தது.

இந்தப் பல்கலைக்கழக ஊழியரான பெண்மணியொருவரும், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மற்றொரு மாணவியும் கடந்த மாதம் தற்கொலை செய்து கொண்டனர். புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இந்த மாணவி தனது குடும்பத்தவருக்கு என்ன நடந்ததோ என்ற மனவேதனையால் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த எட்டு மாணவிகள் இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகின்றனரென்றும் இவர்களில் இருவர் தற்கொலை செய்து கொண்டனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இளந்திரையன் கொல்லப்படுவதற்கான ஆரம்பப் பிரச்சினை இதுதான்

''மன்னாரில் புலிக் கட்டுப்பாட்டிலிருந்த இடங்களை அரசாங்கத் துருப்புக்கள் இலகுவில் கைப்பற்றி விட்மாட்டாதென்று இளந்திரையன் நினைத்து வந்தார். அடம்பன் உட்பட முக்கிய இடங்கள் அனைத்தையும் படையினர் கைப்பற்றிய பின்னர் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் பிரயோசனமில்லையென்ற நிலைக்கு அவர் வந்துவிட்டார். இதனால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகளை மேற்கொள்வதே சிறந்ததென அவர் தனக்கு நெருக்கமான புலி இயக்க உறுப்பினர்களிடம் தெரிவித்தார். இதுவே ஆரம்பத்தில் அவருக்குப் பிரச்சினையாக அமைந்தது'' என்றார் எழிலன் என்ற புலி இயக்க உறுப்பினர். இவர் இப்பொழுது யுத்தக் கைதியாக இராணுவ பாதுகாப்பில் உள்ளார். படையினருக்கு அளித்த வாக்குமூலத்தில் இவர் அளித்த தகவல் இது. இதற்கு மேலதிகமாக இளந்திரையனைப் பற்றிய தகவல்கள் எதுவும் தனக்குத் தெரியாது என்றும் சொன்னார் அவர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் இளந்திரையனுக்குத் தொடர்புகள் இருந்ததா? இல்லையா? என்பது குறித்துத் தனக்கு எதுவும் திட்டவட்டமாகத் தெரியா-தெனத் தெரிவித்த அவர், சில வேளைகளில் விரக்தியடைந்த நிலையில் அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம் என்றும் சொன்னார். அவர் கைது செய்யப்பட்ட விடயமோ அல்லது கொல்லப்பட்ட விடயமோ தனக்குத் தெரியாதென்றும் சொன்னாராம் எழிலன்.

## கொடப்பிட்டிய ஜும்ஆ பள்ளிவாசல் தற்கொலைத் தாக்குதல்; 10 இலட்ச ரூபா சன்மானம் பெறும் நோக்கில் குண்டுதாரி பற்றிப் பொய்யான தகவல்கள்!

அக்குரஸ்ஸ, கொடப்பிட்டிய ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தியவர் தொடர்பாக இரு சிறுவர்கள் அளித்த தகவல்களில் உண்மை எதுவுமில்லையென்று மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். தற்கொலைக் குண்டுதாரியைத் தனக்குத் தெரியுமென்றும், மாத்தறை ஸ்ரீமதுர கட்டடத்தில் தாம் இருவருமே இரவுவே-ளைகளில் தங்கியிருக்கிறோமென்றும் 13 வயதான அசங்க பிரதீப் குமார என்ற சிறுவன் கூறியிருந்தான். மூன்று மாதங்களுக்கு முன்னர் தாயாரோடு கோபித்துக் கொண்டு தான் வீட்டை விட்டு ஓடி வந்ததாகவும் இந்தச் சிறுவன் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தான். அம்பலாங்கொடையைச் சேர்ந்த இந்தச் சிறுவன் மாத்தறையில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டான்.

தற்கொலைக் குண்டுதாரி பிச்சைக்காரன் வேடத்தில் நடமாடிய-தாக வெளிவந்த தகவல்களையடுத்து மாத்தறையில் பிச்சை எடுப்பதில் ஈடுபட்டிருந்த சுமார் இருபது பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த பத்தாம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## இந்தியத் தேர்தலுக்கு முன்னதாக வன்னி யுத்தம் முடிவுக்கு வரும்

இந்திய லோகசபைத் தேர்தல்களின் முதற் கட்டம் அடுத்த மாதம் நடைபெறுவதற்கு முன்னதாக வன்னி யுத்தம் முடிவுக்கு வந்து விடுமென்று களமுனையிலுள்ள இராணுவ அதி-காரியொருவர் தெரிவித்தார். ஐந்து கட்டங்களாக நடைபெறவிருக்கும் இத் தேர்தலின் முதற்கட்டம் அடுத்த மாதம் பதினாறாம் திகதி நடைபெறவிருக்கிறது. ஆளும் காங்கிரஸ் கூட்டணி அதன் எதிர்த்தரப்பான பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி ஆகிய இரு கூட்டணிகளுக்குப் புறம்பாக மாயாவதி - ஜெயலலிதாவின் கட்சிகளை உள்ளடக்கிய மூன்றாவது கூட்டணியொன்றும் களத்தில் நிற்கிறது. மாயாவதியின் அணியில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட நான்கு இடதுசாரிக் கட்சிகளும் வேறு சில பிராந்தியக் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. மாயாவதி அணியிலுள்ள எந்தவொரு கட்சியுமே தேசிய மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற கட்சி இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவின் ஒரு பகுதிக்குள் முடக்கப்பட்டுள்ள புலிகள் 25 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புக்குள்ளேயே உள்ளனரென்று படைத்தரப்புகள் தெரிவிக்கின்றன. குறைந்த நிலப்பரப்புக்குள் மக்கள் செறிந்து இருப்பதால் மிகக் கவனமாகவே யுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யுத்த வலயப் பகுதிக்குள் சிக்கியுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் பாதுகாப்புக் குறித்து உலக நாடுகளும், ஐ.நா. உட்படச் சர்வதேச சமூகம் அதிக அக்கறை காட்டி வருவதால் சகட்டு மேனிப் பாணியில் தாக்குதல் நடத்த முடியாத நிலையே நிலவுகிறது.

பிரபாகரன் யுத்த வலயப் பகுதியிலிருந்து வெளியேறி அடர்ந்த காட்டுப் பகுதியான சேமமடு அல்லது முரளிக்குளம் போன்ற இடங்களில் மறைந்திருக்கலாமெனக் களமுனை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புலிகள் இயக்கத்தில் இன்னமும் மரணப் பிடிவாதமாகப் போரிடக் கூடிய சுமார் எழுநூறு உறுப்பினர்களே இருக்கலாமெனவும் படை வட்டாரங்கள் கூறுகின்றன. எப்படியும் எதிர் வரும் தமிழ் - சிங்களப் புதுவருட தினத்துக்கு முன்னதாக வன்னி யுத்தம் முடிவுக்கு வருமென்று கூறும் படை வட்டாரங்கள் புலிகள் சண்டையிட முடியாத நிலைக்கு வரும்போது கூட்டுமொத்தமாகத் தற்கொலை செய்து கொள்ளும் நிலையே இருப்பதாகவும் எதிர்வு கூறுகின்றன.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 2-360903
தொலை நகல் (Fax):-011 2-360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com

## முரசம்

### அரசியல் அந்தஸ்தையும் புலிகள் இழந்து விட்டனர்!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

நிபந்தனைகளற்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்று புலிகள் அறிவித்துள்ளனர். யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு வலிந்த அறிவித்தல்கள் மூன்றை புலிகள் செய்துள்ளனர்.

புலிகளின் அறிவிப்புக்கள் எதையும் எவரும் கண்டு கொள்ளவில்லை. 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு சமாந்தரமாகக் கருதப்பட்ட புலிகளின் நிலை இன்று இல்லை. இதற்குக் காரணமும் புலிகளேயன்றி வேறுயாருமல்ல. சமாதானப் பேச்சுவார்த்தைகளை நிபந்தனைகள் விதித்தே குழப்பியடித்த புலிகள் இப்போது நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்பது அவர்களின் மோசமான பலவீனத்தைக் காட்டுகிறது.

இலங்கை அரசு புலிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. சர்வதேச சமூகமும் அரசின் நிலைப்பாட்டைக் கேள்விக்குட்படுத்தும் நிலையில் இல்லை. புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிட்டு வரவேண்டும் என்று கூறிவந்த அரசாங்கம் இப்போது பலாத்காரமாகத் தடுத்து வைத்திருக்கும் மக்களை முதலில் புலிகள் விடுவிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது. இலங்கையில் யுத்தம் காரணமாக உருவாகி இருக்கும் மனித அவலம் தொடர்பாக, சர்வதேச நாடுகள் கவனம் செலுத்திவரும் நிலையில் பொதுமக்களைப் புலிகள் விடுவிக்க வேண்டும் என்று இலங்கை அரசு கூறியிருக்கிறது. அரசின் இந்த அறிக்கை குறித்தும் புலிகள் தரப்பிலிருந்து எவ்வித பதிலும் வெளிவரவில்லை.

மக்களை விடுவிக்கப் புலிகள் விரும்பமாட்டார்கள். ஏனெனின் புலிகளின் தற்போதைய யுத்த தந்திரோபாயத்தில் தாம் ஏந்தியிருக்கும் ஆயுதங்களை விடவும், தம்மால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களே பெரும் ஆயுதங்களாக இருக்கின்றனர். இந்த மக்கள் மட்டும் அங்கு இல்லாவிட்டால் சரியாக பத்து நாட்களுக்குள் புலிகளின் தமிழீழ நாடகம் முடிவுக்கு வந்துவிடும்.

ஆகையால் புலிகள் தமது இறுதி மூச்சைச் சுவாசித்துக் கொண்டிருக்கும் தற்போதைய நிலையில் வலிந்து சமரசப் பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கையில் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர பேச்சு நடத்துவதாக இருந்தால் அதற்குப் புலிகளுடன் தான் பேச வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேச்சுவார்த்தையாக இருந்தால் அதில் சகல தமிழ் கட்சிகளின் பிரசன்னமும் தேவை என்று அன்று முதல் கூறப்பட்டு வந்தது. எவரும் கருத்தில் கொள்ளவில்லை. இன்று இலங்கை அரசும், உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஆகவே தற்போதைய நிலையில் புலிகள் தமிழ் மக்களின் பிரதான தரப்பு அல்ல. புலிகளுடன் பேச்சு நடத்துமளவுக்கு இலங்கை அரசு இயலாமையிலும் இல்லை. கதை முடியும் தறுவாயில் புலிகள் தம்மைச் சம பேச்சுவார்த்தை தரப்பாகவும், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகவும் சுய கற்பனை செய்து கொள்வதை இன்று சர்வதேசம் மிகத் தெளிவாகப் புரிந்தும், உணர்ந்தும் கொண்டுள்ளது.

தற்போதைய நாட்டுச் சூழலைப் புலிகள் பார்க்கும் மாயப் பார்வையைப் போல் தமிழ் மக்களும், இலங்கை அரசும், சர்வதேசமும் பார்க்கும் என்று புலிகள் நம்பினால் அது கடந்த காலங்களைப் போல் புலிகள் போடும் தப்புக்கணக்காகவே முடியும். தப்புக்கணக்குகளின் தந்தைகள் தக்க சன்மானம் பெறும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தமிழ்க் கூட்டமைப்பினரை ஜனாதிபதி அழைத்துள்ளார். இந்த அழைப்பை ஏற்று தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகள் தொடர்பில் நியாயமாகவே கலந்துரையாடினால் நன்மை உண்டு. அதை விடுத்து நடைமுறைக்குச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைத்து சந்திப்பை தவிர்ப்பதும், அல்லது சந்தித்துக் கலைவதும் அர்த்தமற்றதொன்றாகவே அமையும். வாய்ப்புக்களைத் தவறவிட்ட புலிகளின் கைப் பொம்மைகளும் அதையே செய்வார்கள். இத்தகையவர்களின் முகத் திரையை காலம் ஒருநாள் கிழித்துப் போடும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து சந்திக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இளந்திரையனைப் புலனாய்வுப் பிரிவு கொன்றது ஏன்?

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**மன்னாரில்** கடந்த வருடம் மே மாதம் இராணுவத்துக்கும் - புலிகளுக்குமிடையில் கடுமையான மோதல் இடம்பெற்றது. இந்த மோதலில் முப்பது இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனரென்றும், பெருந் தொகையான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினரென்றும், புலிகளின் அப்போதைய படைத்துறைப் பேச்சாளரான இராசையா இளந்திரையன் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியிருந்தார். புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் என்ற வகையில் இளந்திரையன் கடைசியாக வழங்கிய செய்தி இதுதான். இதற்குப் பின்னர் இளந்திரையனின் பெயர் மூடுமந்திரமாகப் போய்விட்டது. தானாகவே உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களுடன் தொடர்பு கொண்டு மிகச் சகஜமாக உரையாடுபவர் இளந்திரையன். திடீரென அவர் காணாமல் போன விடயம் ஊடகவியலாளர்கள் மத்தியில் எவ்வித சந்தேகங்களையும் அப்போது கிளப்பவில்லை. காரணம் புலிகளுக்கும், அரசாங்கப் படையினருக்குமிடையிலான மோதல் உக்கிரமாக நடைபெற்ற காலப் பகுதியாக அது இருந்ததால், இளந்திரையன் இடம்மாறியிருக்கலாமென நம்பப்பட்டது. அல்லது களமுனைக்குச் சென்றிருக்கலாமெனவும் கருதப்பட்டது. இருந்த போதிலும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் இளந்திரையனுடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை.



மன்னார், அடம்பன் மோதலில் கொல்லப்பட்ட புலிகளின் சடலங்கள்....

இளந்திரையனும், அவரது நெருங்கிய சகாக்கள் பலரும் சுட்டுக் கொல்லப்பட்டனரென்ற செய்தி கடந்த ஜனவரி மாதம் தான் முதன்முதலாக வெளியே கசியத் தொடங்கியது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தாரென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார். இதற்கான சில ஆதாரங்கள் புலிகளின் உளவுப் பிரிவினருக்குக் கிடைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அரசன் என்ற புலி இயக்கப் பெயர் கொண்ட ஒருவரே இளந்திரையன் பற்றிச் சில முக்கிய தகவல்களைப் புலித் தலைமையிடம் வழங்கியிருந்தார்.

கடந்த வருடம் நடுப் பகுதியில் இளந்திரையன் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். சில மாதங்களாக அவரின் நடவடிக்கைகளை அவதானித்து வந்த பின்னரே அவர் கைது செய்யப்பட்டார். முல்லைத்தீவில் புலிகளின் நிலத்துக்குக் கீழான சிறையில் சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாகச் சிறை வைக்கப்பட்ட பின்னரே அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். கிளிநொச்சியைக் கடந்த ஜனவரியில் அரச படைகள் கைப்பற்றுவதற்கு முன்னதாக இளந்திரையன் மீதான மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மேலும் பதினேழு புலி உறுப்பினர்களுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவருடன் இளந்திரையனுக்கு நெருங்கிய தொடர்புகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் நடமாட்டங்கள், செயற்பாடுகள் குறித்து மேற்படி அதிகாரிக்கு இவர் தகவல்களை வழங்கி வந்தாரெனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பில் ஆறுமுகத்தான் குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இளந்திரையன், 1970களின் பிற்பகுதியில் புலி இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டவர். கருணா அம்மான் கிழக்கில் புலிகளின் முக்கிய தளபதியாகச் செயற்பட்ட காலத்தில் அவரோடு நெருங்கிச் செயற்பட்டவர். ஜெயந்தன் படையணியைச் சேர்ந்த முக்கிய புள்ளிகளுடனும் நெருங்கிச் செயற்பட்டவர். 2004 ஆம் ஆண்டு கருணாவுக்கும், பிரபாகரனுக்குமிடையிலான மோதல் முற்றி வெடிப்பதற்கு முன்னதாக பிரபாகரனால் அழைக்கப்பட்ட குழுவில் ஒருவராக வன்னிக்குச் சென்றவர் இவர். கருணா அம்மான் உட்பட கிழக்கின் முக்கிய தலைவர்களைப் பேச்சுவார்த்தைக்கென வன்னிக்கு வருமாறு பிரபாகரன் அழைத்திருந்தார். கருணா கடைசிவரையும் வன்னிக்குச் செல்லவே இல்லை. கிழக்கிலிருந்து வன்னிக்குச் சென்ற ரமேஷ், தயாமோகன் ஆகியோரோடு இளந்திரையனும் சென்றிருந்தார். அப்போது சுமார் நாற்பதுக்கும் மேற்பட்டோர் கிழக்கிலிருந்து வன்னிக்குச் சென்று பிரபாகரனையும் சந்தித்திருந்தனர். கருணாவின் கையாளாக வன்னியிலிருந்து செயற்பட்டாரென்று வலுவான சந்தேகங்களும் புலித் தலைமைக்குப் பின்னர் ஏற்படத் தொடங்கியது. புலிகள் அடுத்தடுத்துத் தோல்விகளைச் சந்தித்து வந்தமைக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு இளந்திரையன் வழங்கிவந்த தகவல்களும் காரணமென்று கூறப்படுகின்றது.

வட அயர்லாந்தில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் பிரிவினைப் போராட்டம் நடத்திவந்த ஐரிஷ் குடியரசுப் படைக்குள் ஊடுருவிய பிரடி ஸ்காப்பட்டிக்கி என்ற இராணுவ உளவாளியைப் போலவே இளந்திரையனும் செயற்பட்டாரென்று கூறப்படுகின்றது. 'பட்டாக்கத்தி' என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட பிரடி, ஐரிஷ் குடியரசுப் படையின் உள்ளக பாதுகாப்புப் பிரிவின் தலைவராக உயர்ந்தார். ஐ.ஆர்.ஏ.யின் பெண் போராளியொருவர் கர்ப்பிணிக் கோலத்தில் குண்டை மறைத்துக் கொண்டு சென்று விமான நிலையத்தில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளார் என்ற தகவலை இவரே எம்-15 பிரிட்டிஷ் உளவுப் படைக்குத் தெரிவித்திருந்தார். அப்பெண் குடியிருந்த வீட்டை இரவு பகலாக அவதானித்து வந்த இராணுவ உளவாளிகள் அவர் பஸ்ஸில் ஏறி, விமான நிலையம் சென்று இறங்கும்வரை காத்திருந்து அவரைக் கைது செய்தனர். கைது செய்தது மட்டுமல்ல, அவரின் நடமாட்டங்களை அப்படியே படம் பிடித்துமிருந்தனர்.

'பட்டாக்கத்தி'யின் திறமையான உளவு நடவடிக்கைகள் தான் ஐ.ஆர்.ஏ. அமைப்பின் அரசியல் பிரிவை பேச்சுவார்த்தைக்குச் செல்ல உந்தித் தள்ளியது. இதே பாணியில்தான் 'மார்ஷல்' என்ற புலி இயக்கப் பெயருடன் செயற்பட்ட இளந்திரையனும் இலங்கை இராணுவத்துக்கு உளவுத் தகவல்களை வழங்கினாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

> **வட அயர்லாந்தில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் பிரிவினைப் போராட்டம் நடத்திவந்த ஐரிஷ் குடியரசுப் படைக்குள் ஊடுருவிய பிரடி ஸ்காப்பட்டிக்கி என்ற இராணுவ உளவாளியைப் போலவே இளந்திரையனும் செயற்பட்டாரென்று கூறப்படுகின்றது. 'பட்டாக்கத்தி' என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட பிரடி, ஐரிஷ் குடியரசுப் படையின் உள்ளக பாதுகாப்புப் பிரிவின் தலைவராக உயர்ந்தார். ஐ.ஆர்.ஏ.யின் பெண் போராளியொருவர் கர்ப்பிணிக் கோலத்தில் குண்டை மறைத்துக் கொண்டு சென்று விமான நிலையத்தில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளார் என்ற தகவலை இவரே எம்-15 பிரிட்டிஷ் உளவுப் படைக்குத் தெரிவித்திருந்தார். அப்பெண் குடியிருந்த வீட்டை இரவு பகலாக அவதானித்து வந்த இராணுவ உளவாளிகள் அவர் பஸ்ஸில் ஏறி, விமான நிலையம் சென்று இறங்கும்வரை காத்திருந்து அவரைக் கைது செய்தனர். கைது செய்தது மட்டுமல்ல, அவரின் நடமாட்டங்களை அப்படியே படம் பிடித்துமிருந்தனர்.**

புலிகளின் புலனாய்வுப் பிரிவு முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் உண்மையிருக்கிறது என்றே புலிகளுக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர். உளவாளியென்ற குற்றச்சாட்டின் பேரில் இளந்திரையன் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியைக் இந்திய செய்தி நிறுவனமான ஐ.ஏ.என்.எஸ். கடந்த பதின்மூன்றாம் திகதி வெளியிட்டிருந்தது. கடந்த ஜனவரியில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டாரென்றும் ஐ.ஏ.என்.எஸ். தெரிவித்திருந்தது. புலிச் சார்பு ஊடகங்களில் கூடக் கடந்த சில மாதங்களாக இளந்திரையன் தொடர்பான தகவல்கள் எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புலிகளின் படைத்துறைப் பேச்சாளராக இளந்திரையன் உலகுக்கு அறிமுகமானார். (தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## ஊரிலிருந்து....



"போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பியுங்கள்" இந்த வசனத்தை இரண்டு வருடங்களுக்கு முன்னோர் யாராவது சொல்லியிருந்தால் அவர்கள் புலிகளின் பாஷையில் துரோகிகள்.

அப்போதெல்லாம் மாவிலாறை மூடியதும், 40 ஆயிரம் சவப்பெட்டிகளை அனுப்ப வீராப்புப் பேசியதும்தான் வரலாறு. போதாக்குறைக்கு "சமாதானம் வேண்டாம் போருக்கு ஆணையிடு தலைவா" என்ற கோஷம் வேறு. இப்போது தமிழர்களை (புலிகளை) காப்பாற்றுங்கள் என்று ஒப்பாரி வைப்போர் அன்று முளையிலேயே கிள்ளியிருந்தால் இந்நிலை வந்திருக்குமா?

இதை ஊர்க்காரர் உலகத்தாரிடம் கேட்கிறார்கள்.

**புதுமாத்தளன்** பகுதி அடங்கலான 18 கிலோமீற்றர் நீளமான பகுதியே யுத்த சூனியப் பகுதியாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு அப்பாவிப் பொதுமக்களைச் சென்று பாதுகாப்பாக இருக்குமாறு அரசு அறிவித்துள்ளது. முதலில் இந்தப் பகுதிகளை நோக்கி மக்கள் சென்ற போது புலிகள் தடுத்தனர். எனினும் யுத்தம் நெருங்கியதைத் தொடர்ந்து மக்களின் இடம்பெயர்வை புலிகளால் தடுக்க முடியவில்லை. மன்னாரிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் ஓடத் தொடங்கிய மக்கள், சுமார் 7-8 முறைகளுக்கு மேலாக இடம்பெயர்ந்த அவலத்தின் முற்றுப்புள்ளியாக புதுமாத்தளன் பகுதியைச் சொல்லலாம். காரணம் அங்கிருந்து ஓட வேறு இடமில்லை. இனிமேல் கடல்தான் எல்லையாக அந்த மக்களுக்கு இருக்கின்றது.

இப்படியாக எத்தனை மக்கள் அங்கிருக்கிறார்கள் என்பது பற்றிய மிகச் சரியான புள்ளி விபரங்கள் எவருக்கும் தெரியாது. அங்கிருந்து வந்த மக்களைக் கேட்டால் சுமார் இரண்டு இலட்சம் பேர் அங்கு அகப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

# புதுமாத்தளனில் புலிகள் வெட்டும் பொறிக்கிடங்கு!

கப்பல் மூலமாக ICRCயின் வழித் துணையோடு வெளியே கொண்டுவரப்பட்டவர்கள். இவ்வாறு வந்து சேர்ந்தவர்களின் நிலை தொடர்பாகப் பார்ப்பதற்கு முன்னர், தற்போது புதுமாத்தளன் பகுதியில் உள்ள மக்களின் நிலையையும், அங்கு புலிகள் வெட்டியிருக்கும் பொறிக்கிடங்கையும் பார்க்க வேண்டியுள்ளது.

புதுமாத்தளனில் மக்களோடு மக்களாகப் புலிகளும் தஞ்சமடைந்துள்ளனர். அங்குள்ள மக்கள் தமது தற்காப்புக்காகப் பங்கர்களை அமைத்துள்ளனர். அங்கு புலிகளும் தமது பங்கர்களை அமைத்துள்ளனர். கடந்த மாதமளவில் அங்கு பதுங்கியிருப்பதற்கான பரபரப்பில் திரிந்த புலிகள் இப்போது புதுமாத்தளனிலிருந்து எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். யுத்த சூனியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட கடற்கரையை

மேற்கொள்கின்றனர். படைத்தரப்பு திருப்பித் தாக்கினால் அது மக்களுக்குப் பெரும் பாதிப்பைத் தரும் என்று அஞ்சப்படுகின்றது. எனினும் மக்களின் இந்த அச்சத்தைக் கவனத்தில் புலிகள் எடுக்கவில்லை.

தமது தாக்குதலின் உச்சக்கட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் படையினர் தடுமாறுவதாகவும், ஆகையாலேயே படையினரின் சமகால முன்னேற்ற நடவடிக்கை தடைப்பட்டிருப்பதாகவும் புலிகள் கூறுகின்றனர். அதேபோல் மேலும் படையினர் நெருங்கும் போது கடும் இழப்புக்களை எதிர்கொள்வார்கள். இப்போது பிரபாகரனே நேரடியாக யுத்தத்தைத் திட்டமிட்டு வழிநடத்துகின்றார். இதில் படையினருக்கு மரண அடி நிச்சயம். இத்தகையதொரு இறுதிச் சமரின் போது மக்கள் எமக்கு அரணாக இருக்கவேண்டும், போராட வேண்டும். தலைவர் அதைத்தான்

வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். புலிகளின் பொறிகள் தற்போதைய யுத்தத்தில் நுளம்புக்கு வலை விரிப்பது போல் தான் அமைந்துள்ளது. உதாரணத்துக்கு தற்போது தொடரும் சண்டையில் வன்னி விளாங்குளத்தைப் படையினர் கைப்பற்ற எத்தனித்த போதும், பிறகு அக்கராயன்குளத்தை படையினர் கைப்பற்ற எத்தனித்த போதும் புலிகள் பொறி வைத்ததாகச் சொன்னார்கள். கடைசியில் அந்தப் பொறியில் புலிகளே அகப்பட்டார்கள். இப்போது புதுமாத்தளனில் பொறிக் கிடங்கு பற்றி கூறுகின்றனர். புலிகளின் இத்தகைய கூற்றுக்கள் புலிகளின் ஆதரவுச் சக்திகளிடத்தில் நம்பிக்கையை இழக்கச் செய்யவிடாமல் பாதுகாக்கும் யுக்தியே தவிர, வேறு ஒன்றுமில்லை.

அத்தகையவர்கள் தாங்கள் புலம் பெயர்ந்து இருக்கும் நாடுகளிலும் சரி, இங்கே இலங்கையில் வாழும் தமது உறவுகளிடமும் சரி, "புலிகள் இன்னும் பலமாகவே




புதுமாத்தளன் பகுதியில் அவலப்படும் மக்களின் காட்சி...

அரசாங்கமோ சுமார் 78,000 பேர் அங்கு புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றது. புலிகளோ 35,0000 பேர் அங்கு அவலப்படுவதாகக் கூறுகின்றனர். ஆகவே சுயாதீனமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எப்படிப் பார்த்தாலும் ஒரு இலட்சம் பேர் அங்கு சிக்கியிருக்கக் கூடும் என்றும் சில மனிதாபிமான நிறுவனங்கள் கூறுகின்றன.

அங்கிருக்கும் அரச அதிகாரிகள் புலிகளின் அச்சுறுத்தல்களை மீறி அங்கிருந்து உண்மைத் தகவல்களைச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இதுவரை 52,000 பேருக்கும் அதிகமானவர்கள் புலிகளின் பிடியிலிருந்து வெளியேறியுள்ளனர். இவர்களில் 80 சதவீதமானவர்கள் புலிகளின் தாக்குதல்களையும் மீறி காட்டுவழியாகத் தப்பி வந்தவர்கள். ஏனையோர் காயங்கள் மற்றும் மருத்துவத் தேவைகள் காரணமாகக்

அண்டிய பகுதியின் வடக்குப் பக்கமும், தெற்குப் பக்கமும் புலிகளின் அரண்கள் பகுதியாக இதுநாள்வரை இருந்து வந்தன. இதில் வடக்கு எல்லையைப் படையினர் கடந்த மாதம் கைப்பற்றியுள்ள நிலையில் எல்லையிலிருந்த புலிகள் அரசு அறிவித்த 12 கிலோ மீற்றர் பரப்புக்குள் உள்வாங்கி இருந்து கொண்டு

*அலசுவது*

**மதியூகி**

தாக்குகின்றனர்.

இருதரப்புச் சண்டையில் ஏவப்படும் எறிகணைகள் விழுந்து வெடித்ததாலேயே அதிகமான மக்கள் பலியானார்கள், காயப்பட்டார்கள். இப்போது புலிகள் தமக்கு நடுவில் நின்று கொண்டு எறிகணை வீச்சை

எதிர்பார்க்கின்றார் என்றெல்லாம் புலிகள் கூறிவருகின்றனர்.

பிரபாகரனின் போராட்டமே தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்றதாக இருக்கும் போது, தற்போது மக்களுக்குள்ளிருந்து தாக்குதல் நடத்தும் பிரபாகரனின் திட்டம் வியப்புக்குரியதல்ல. மக்களுக்குக் கட்டாயப் பயிற்சி கொடுத்து பலிக்களம் அனுப்பியதைவிடக் கொடுமையானது. மக்களுக்குள் இருந்துகொண்டு தாக்குதல் நடத்துவதென்று வன்னியிலிருந்து வந்த மக்கள் கூறி அழுகின்றனர். ஒரு கண்ணை இழந்தவர்களையும், கையை, காலை இழந்தவர்களையும் வைத்தியசாலையில் வந்து கிடக்கும் மக்களைக் கண்டு அழுவதா அல்லது அவர்கள் சொல்லும் இந்தக் கதைகளைக் கேட்டு அழுவதா என்று எதுவும் தெரியவில்லை.

புலிகள் புதுமாத்தளனில் படையினருக்குப் பொறி

இருக்கின்றனர். இப்போதுதானே தலைவர் களத்தில் இறங்கியிருக்கின்றார்; இனித்தான் சிங்களப் படைக்கு சங்கு ஊதப்படப்போகிறது" என்றெல்லாம் தாம் விழுங்கிய வெறுமைகளை வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நம்பிக்கையெல்லாம் ஒரு இரவிலேயே கூட புலிகள் ஒரு மாயா ஜாலத்தை நிகழ்த்தி விடுவார்கள், வெற்றியின் கம்பத்தைப் பிடித்து விடுவார்கள் என்பதாகவே இருக்கின்றது. உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாத மனநோயாளிகளின் இத்தகைய பிடிவாதங்களை ஒன்றும் செய்ய முடியாது. இவர்கள் இப்போது மக்களுக்கு நடுவிலிருந்து கொண்டு புலிகள் தாக்குவதன் விளைவை விடுத்து படையினர் திருப்பித் தாக்க முடியாதபடி தலைவர் எப்படி வியூகம் அமைத்திருக்கின்றார் என்று பேசுகின்றனர். இவர்களுக்கு மக்கள் பற்றிய அக்கறையில்லை. *(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)*

## அதிரடி அய்யாத்துரை



**எனக்கும்** ஒரு மாதிரித் தானுங்கோ இருக்குது. என்னடா சங்கரியாரை விட்டால் உவருக்கு வேறு சங்கதி இல்லையோ எண்டு நினைப்பியள் எண்டு. நான் என்னங்கோ செய்யிறது. என்ர பாட்டில நான் போனாலும் சுப்பீட்டெல்லோ சொல்லினம்.

போனவாரமுங்கோ பூசாவில இருந்து ரிலீசான தம்பி ஒருவரைச் சந்திச்சனுங்கோ. முன்னம் உருண்டு திரண்டு இருந்தவன் இப்ப உடைஞ்சுபோய் நிண்டான். என்னடாப்பா ஆச்சுது எண்டு கேட்டதுக்கு, தான் பூசாவுக்குப் போன கதையைச் சொன்னானுங்கோ.

பெடியின்ர கதை ஓட்டத்தில சங்கரியின்ர தலைக்கறுப்பும் கிளம்புதுங்கோ. அண்மையில பூசா சிறைக்குப் போன சங்கரியாரின்ர பீச்சாங் கையில்லையுங்கோ மற்றக்கை, ஒருவர் கைதிகளைச் சந்திச்சுக் கதைச்சவராம். பெடியளுக்கும் கோபம் வந்து கேட்டாங்களாம். அவை இதை எண்டு வாறியள் உங்களாலை என்ன செய்ய முடியுது; ஒண்டும் ஏலாதெண்டால் சிறைக்கு என்ன படம் காட்டவே வாறியள் எண்டு கேட்டவங்களாம்.

உந்தக் கேள்வியில கொதிப்பான வலது கைட பேர்வழி, எடேய் தம்பிமார் இண்டையான் நாட்டு நடப்புல நீங்கள் வெளியாலை இருக்கிறதை விடவும் உள்ள இருக்கிறதுதான் நல்லது எண்டாராம். உதைக் கேட்ட பெடியள் உதைச் சொல்லவே வந்தனீ, போ... போ... வெளியாலை போ... உங்களைச் சந்தேகத்தில தான் பிடிச்சாங்கள். நீர் இனியும் நிண்டால் கொலைப் பழிபாகியபோடும் எண்டு, பண்பை மறந்து ஒருமையில கத்தினவங்களாம்.

சங்கரியாரின்ர வலக்கை நடுங்கிக் கொண்டு வந்தவராம். அடுத்த நாள் பூசா சிறைக்குப் போனதாகவும் அங்க தனக்கு நல்ல வரவேற்பு இருந்ததாகவும் ஊடகங்களுக்குச் செய்தி குடுத்தவராம். உந்தச் செய்தி அறிஞ்ச உள்ள இருக்கிறபெடியள் ரொம்பக் கடுப்பில இருக்கினமாமுங்கோ.

உதைச் சொல்லேக்க தேவமான அமைச்சரும், சங்கரியாரும் தென்னாபிரிக்கா போய் இருக்கேக்க அங்க இருக்கிற தமிழர்களைச் சந்திச்சினமுங்கோ அந்தச் சந்திப்பில "நான் தமிழனாக இருக்கிறதில வெட்கப்படுறன்" எண்டு வாழ்க்கையில முதல் தடவையாக வெட்கப்பட்ட சங்கரியாரை கடைசியாக தலதாமாளிகையில தான் போனமாசம் கண்டதும் ஞாபகம் வருகுதுங்கோ.

**போனவாரம்** வவுனியாவுக்குப் போயிருந்தேனுங்கோ. இடம்பெயர்ந்த மக்களையும் சந்திக்கிற வாய்ப்புக் கிடைச்சுதுங்கோ. அவையள் ரெண்டெழுத்தாரின்ர கதைகளைச் சொல்லி அழுகினமுங்கோ. தங்களை ஒரு மனிதப் பிறவியாகவே இயக்கம் நடத்தயில்லை எண்டதை நினைச்சால் அவமானமாக இருக்குதுங்கோ எண்டினம்.

சின்னப்பிள்ளைகளுக்கு பால்மா இல்லை எண்டினம். உடுப்பு இல்லை எண்டினம். மருந்து எடுக்கிறது கஷ்டம் எண்டினம். பச்சை அரிசிச் சோறு எல்லாருக்கும் ஒத்து வராது எண்டினம். உறவுகளோட தொடர்பு கொள்ள முடியவில்லை எண்டினம். சொந்த ஊருக்குப் போக முடிய வில்லையே எண்டினம். தொழில்வாய்ப்பு கேட்டிச் சினம். கல்விப் பிரச்சினை இருக்குதெண்டிச்சினம். உப்பிடி தேவைகள், பிரச்சினைகள் எண்டு பட்டியலை நீட்டிக் கொண்டு போகினமுங்கோ.

வெயிலுக்குள்ள பொலித்தீன் தறப்பாலும், தகர கொட்டில்களுமாக அந்தச்சனம் இருக்கிறதே ஒரு கொடுமையாக இருந்ததுங்கோ. முள்ளுக்கம்பி வேலி போட்டு வச்சிருக்கினம். படைத்தரப்பின்ர பாதுகாப்புக்குள்ள அவை பாதுகாப்பாக இருக்கினம் எண்டு சொல்லிக் கொள்ளினமுங்கோ.

ரெண்டெழுத்தார் தங்களை நடத்தினதோட ஒப்பிட்டாலுமோ, இவ்வாட்டில தாங்கள் பட்ட பாட்டோட ஒப்பிட்டாலுமோ உந்த நலன்புரி நிலையத்து வாழ்க்கை மேலானது தான் எண்டும் சொல்லினமுங்கோ.

வேலுப்பிள்ளையின்ர பெடியனாலை இந்த நிலைக்கு ஆளாகிட்டம். உதில இருந்து எங்களை வீணைக்கட்சித் தலைவர் தான் காப்பத்தவேணும். நாங்கள் உப்பிடிச் சொன்னம் எண்டு அவரிட்டையும் சொல்லுங்கோ எண்டும் சொல்லிச்சினமுங்கோ.

அவை அப்பிடிச் சொல்லேக்க எல்லாம் இழந்திட்டாலும் நம்பிக்கை மட்டும் இழக்க வில்லை எண்டு சொல்லுமாப் போலை இருந்திச்சுதுங்கோ. வெயிலிலதான் நிழலின்ர அருமை தெரியுமெண்டது மெத்தச் சரிதான் எண்டு வயசான ஒருவர் சொல்லுறாருங்கோ. அவரின்ர குடும்பம் வன்னியிலையாம் தரவர் கண் பார்வை குறைந்த வேலை வெறுனியாவிலையாமுங்கோ.

**கூத்தமைப்பு** உறுப்பினர்களுக்குள்ள ஒரு வழக்காடு மன்றமே நடந்து கொண்டிருக்குதுங்கோ. வரப்போகிற எலக்ஷனில கேக்கிறதோ இல்லையோ எண்டதில தொடங்கி ஆரோடை கேக்கிறது. ஆருக்கு வாய்ப்பு இருக்குது எண்ட வரைக்கும் விவாதம் காரசாரமாக நடக்குதாமுங்கோ.

குதிரைக்கஜேந்திரன் குதிரை ஓடி, பிறகு புலியோடி இப்ப சிங்கமும் ஒருக்கால் ஓடிப் பாத்தால் என்ன எண்ட ஒரு நினைப்பிலையும் வாதிடுறாராம்.

பேயோடு கூட்டுச் சேர்ந்தெண்டாலும் உரிமை கேக்கிறவையை அடக்குவன் எண்ட மாதிரி ஜே.ஆர். சொன்னவரெல்லோ.

அதுபோல வீணைக்கட்சிக்கு எதிராக கோதாவில குதிக்கிறதெண்டால் எந்தப் பேயோடையும் பேச்சுவார்த்தைக்குத் தயார் எண்டும் சில ஒற்றக்கால் குருப் சொல்லினமாமுங்கோ.

ஏன் எண்டால் ரெண்டெழுத்தார் எல்லாத்தையும் அழிச்சுப் போட்டினம். மற்றவையள் கொஞ்சப்பேர், எந்தப் புற்றில எந்தப் பாம்பு எண்டு தெரியாத மாதிரித் திரியினம். இன்னும் சிலபேர் அற்றஸ் இல்லாமத் திரியினம். உப்பிடிப் பாக்கேக்க வீணைக்கட்சிதான் தலையை நிமிர்த்தி நிக்குது எண்டது இண்டைக்குச் சனத்துக்குத் தெரியும். அதால மனம் போன போக்கில சனத்தைப் போக விடக்கூடாது எண்டு தலையைப் போட்டு பிச்சுக் கொள்ளினமாமுங்கோ. கடந்த காலத்தில இதை செய்த மக்கள் சேவைக்கு சனந்தானுங்கோ உவையின்ர முடியைப் பிடிச்சு கேக்கவேணும். கெடுகாலம் அவையே தங்கட முடியைப் பிச்சுக் கொள்ளினமுங்கோ. உதைத்தான் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" எண்டிச்சினமாக்கும்.

**திருவாணமலையில்** கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிறுமியின்ர கொலைக்குப் பின்னாலை புதுப்புது பூதமெல்லாம் கிளம்புதுங்கோ.

முதலில ஒருவன் தப்பி ஓடப்பாத்தான் அவனை காவல் துறையினர் சுட்டிச்சினம். பிறகு ஜனா எண்டவர் தனைனட் அடிச்சுத் தற்கொலை செய்தார் எண்டிச்சினம். பிறகு என்னடா எண்டு பாத்தால் ஜனாவின்ர சடலத்தை ஆரோ தோண்டி எடுத்து அதைக் கூண்டந் துண்டமாக வெட்டிப் போட்டிச்சினமாமுங்கோ.

உந்தக் கதையைச் சொல்லேக்க எனக்கு ஒரு ஞாபகம் வருகுதுங்கோ. மீன்பாடும் ஊரில ராஜன் சந்திமூர்த்தி எண்டவர் கொலை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட பின்னர் அவரின்ர சடலத்தைத் தோண்டி எடுத்து அதை எண்ணை ஊற்றி எரிச்சுப் போட்டாங்கள். ஆர் எண்டு கேட்டால் அதுவும் இதுவரை தெரியாத நபர் எண்டு கேஸை முடிச்சினம்.

உதில நான் என்ன திங் பண்ணுறன் எண்டால் கிழக்கில சடலங்கள் மேலேயும் பழி தீர்க்கிற ஒரு வகை மன நோயாளிகள் உருவாகியிருக்கினமே அதை எத்தனை பேர் யோசிச்சியளோ தெரியல்லையுங்கோ. உந்தக் கேஸில நடந்தது பற்றி வேண்டும் படலமா இல்லாட்டில் விசாரணைகளைத் திசை திருப்பும் சதியா எண்டதைப் பற்றியும் கொஞ்சம் திங் பண்ண வேணுமுங்கோ.


# அடக்கப்பட வேண்டியது கோபம்!

**இன்று** யாருக்குத்தான் கோபம் வரவில்லை? குழந்தைகள் கூட கோபம் கொள்கிறார்கள். கேட்கின்ற பொருட்களைப் பெற்றோர் வாங்கித்தரவில்லையென்றால், கீழே உருண்டு, புரண்டு அழுகிறார்கள். கோபத்தின் வெளிப்பாடான அந்த அழுகையின் மூலம் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

பெண்களைக் காட்டிலும் ஆண்கள்தான் அதிகம் கோபப்படுகிறார்கள். அதனால், உடல்நல பாதிப்புகளுக்கு அதிகம் ஆளாகுபவர்களும் அவர்கள்தான் என்கின்றன ஆய்வுகள்.

"ஆம்பிளை என்றால் கோபம் வரத்தான் செய்யும். கோபம் வரவில்லை என்றால் அவன் ஆம்பிளை இல்லை" என்று ஏற்படுகின்ற கோபத்திற்கு நியாயம் கற்பிக்கப்படுகின்றது.

ஆண்களுக்கு மட்டும்தான் கோபம் வர வேண்டுமா? ஏன்... பெண்களுக்குக் கோபம் வராதா? என்று சிலர் கேட்கலாம்.



நிச்சயம் எல்லோருக்கும் கோபம் வரத்தான் செய்யும். பொதுவாகத் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதில் ஆண்களை விட முன்னணியில் திகழும் பெண்கள், தமக்கு ஏற்படும் கோபத்தையும் கட்டுப்படுத்திக் கொள்வதில் ஓரளவு வெற்றி பெறுகிறார்கள். ஆனால் ஆண்கள் அவற்றை உடனடியாகவே வெளிப்படுத்திவிடுகிறார்கள்.

அதைவிட எமது சமுதாயச் சூழலும் இதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. பெண் என்றால் ஆணை எதிர்த்துப் பேசக்கூடாது, தலை குனிந்துதான் நடக்க வேண்டும், கணவனோ, தந்தையோ, சகோதரனோ என்ன சொல்கிறானோ, அதைத்தான் ஒரு வீட்டில் உள்ள பெண் கேட்டு நடக்க வேண்டும் என்ற வரையறைகள் காலம் காலமாகவே பின்பற்றப்பட்டு வருகின்றது.

இப்படிச் சொல்வதால் பெண்கள் கோபப்படமாட்டார்கள் என்று அர்த்தம் கிடையாது. அவர்களும் கட்டுப்பாட்டை இழந்து கோபப்படத்தான் செய்கிறார்கள். எனினும் ஆண்களையும், பெண்களையும் ஒப்பிடும்போது ஆண்தான் அதிகம் கோபப்படுகிறான்.

யாராக இருந்தாலும் எந்த அளவுக்கு எமது கோபத்தை வெளிப்படுத்துகிறோமோ, அதே அளவான எதிர்விளைவு நிச்சயம் உண்டு. அதனால் சில வேளைகளில் விபரீதங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

கோபப்படும்போது வாழ்நாள் சதவீதம் குறைவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். உண்மை இப்படி இருக்கும்போது நாம் ஏன் கோபப்பட வேண்டும்? ஏன் . . . அடுத்தவர்களையும் கோபப்படுத்த வேண்டும்?

பணியாளர்களிடம் கோபப்பட்டால்தான் வேலை வாங்க முடியும் என்று சிலர் கருதுவார்கள். அப்படிக் கருதுபவர்கள் நாளடைவில் தங்கள் மனைவி உள்ளிட்ட குடும்பத்தினரிடமும் கோபப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். கூடவே, பிரச்சினைகளையும் தேடிக் கொள்கிறார்கள்.

**—எஸ்.ஷபா**

கோபம் இல்லாமல் அன்பாலும் வேலை வாங்க முடியும். அந்த அன்பால்தான் எதையும் சாதிக்க முடியும். இந்த உண்மையைப் புரிந்துகொண்டால், கோபத்திற்கு நிரந்தரமாக குட்-பாய் சொல்லி விடலாம்! கோபம் வரும் போது கத்தவேண்டும், அல்லது எதையாவது உடைக்க வேண்டும், அல்லது யாரின் மீதாவது எரிந்து விழவேண்டும் என்ற எண்ணங்கள் கூடவே தோன்றும். அப்படியான சந்தர்ப்பங்களில் ஒன்றில் இருந்து பத்து வரை மனதினால் எண்ணிக் கொள்ளுங்கள். அல்லது நிசப்தமான ஒரு இடத்தில் அமர்ந்து சற்று நேரம் அமைதியாக இருங்கள்.

இப்படிச் செய்தீர்களாயின், நாளடைவில் உங்களுக்கு ஏற்படும் கோபம் தானாகவே அடங்கிவிடும். மற்றவர்கள் உங்கள் மீது அதிக அக்கறையும், அன்பும் வைப்பார்கள். உங்களை அறியாமலேயே நீங்கள் சுகதேகியான மனிதராக மாறமுடியும். உங்களைச் சுற்றி நிறைய நண்பர்கள், உறவினர்கள் நிறைந்திருப்பார்கள். கோபத்தைக் கட்டுப்படுத்தினால் கோட்டையையே அடையலாம்...

## கோபத்தின் விளைவு!

ஜெர்மனியைச் சேர்ந்த அந்த ஓவியன் கடுமையாக உழைக்கக்கூடியவன். பகல் எல்லாம் உழைத்துவிட்டு இரவில்தான் வீடு திரும்புவான். இரவு வீட்டுக்கு வந்ததும் தூங்கிவிடமாட்டான். ஐரோப்பாவின் வரைபடத்தைத் தனக்கு முன்பாக வைத்துக்கொண்டு அதையே நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருப்பான். ஒருநாள் இதைக் கவனித்துவிட்டாள் அந்த வீட்டு உரிமையாளரின் பெண். மறுநாள் காலையில், "ஏன் இரவில் வெகுநேரம் வரை தூங்காமல் விழித்திருக்கிறாய்? ஐரோப்பா கண்டத்தையே உனக்கு கீழ் கொண்டு வருவதுபோல் பார்த்துக் கொண்டிருக்கிறாயா?" என்று கிண்டல் செய்தாள்.

அந்த ஆண் மகனுக்குள் லேசாகக் கோபம் எட்டிப்பார்த்தது. ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. "ஆமாம்! ஐரோப்பா கண்டத்தையே எனக்குக் கீழ் கொண்டுவரப் போகிறேன்" என்று உறுதியாகச் சொன்னான். அப்படிச்சொன்ன அந்த ஓவியன், ஐரோப்பிய கண்டத்தையே நடுநடுங்க வைத்தான். பல ஐரோப்பிய நாடுகளைத் தனக்குக் கீழ் கொண்டு வந்தான். ஆம் அவன் தான் ஹிட்லர்.


ஒருவனிடம் கோபம் மட்டும் இருந்தால் நிதானம் இருக்காது, விவேகமும் வராது. குறிக்கோளுடன் செயல்பட்டால்தான் கோபத்தை வெல்ல முடியும். நினைத்ததைச் சாதிக்க முடியும். ஹிட்லரிடம் கோபமும் இருந்தது, விவேகமும் இருந்தது, தந்திரமும் இருந்தது, கூடவே குறிக்கோளும் இருந்தது. அதனால்தான் அவரால் ஒரு நாட்டுக்கே சர்வாதிகாரியாக முடிந்தது. பல நாடுகளையும் தனக்குக் கீழ் கொண்டுவர முடிந்தது. அதே ஹிட்லரிடம் கோப உணர்ச்சிகள் அதிகமானதால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். உலக நாடுகள் பலவற்றுக்கும் எதிரியானார். கடைசியில், வேறு வழியின்றி எதிரிகளுக்குப் பயந்து தற்கொலையும் செய்து கொண்டார்.


## சிங்கப்பூரில்
### தங்குமிடவசதி

சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்கவும் திருமணத்திற்கும் குடும்பத்தோடு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இலவச போக்குவரத்து வசதி, வழிகாட்டி (Guide) வசதி. மேலதிக விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாக

அப்புலிங்கம் கைத்தொலைபேசி:- 0065 - 97514941

**LINGAM WEDDING SERVICES**
50 A, JALAN LIMBOK, SINGAPORE 548730.


## நெத்தியடி

**அதிகாரப்** பகிர்வின் ஊடாக ஈழத்தை உருவாக்கும் பாதையில் அரசு பயணம். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

பேமசிறிமானகே எம்.பி. - ஜே.வி.பி.

**புலிகள் ஈழக் கோரிக்கையை விட்டாலும், ஈழத்தை விடாது பற்றிப் பிடித்து உச்சிக்கு ஏற நினைக்கிறதோ ஜே.வி.பி.?**
**மக்கள்.**

**மக்கள்** சேவையாக இருக்க வேண்டிய அரசியல், குறுக்கு வழியில் பெரும் பணம் பண்ணுவதற்கான முழு நேரத் தொழிலாக்கப்பட்டிருக்கிறது!

பத்திரிகைக் கருத்து.

**பண பலத்தினாலும் அடாவடித்தனங்களாலும் தேர்தலில் வெற்றியடைந்து அரசியலுக்கு வருபவர்கள் எமக்குச் சேவை செய்வார்களா?**
**மக்கள்.**

**மோதல்** நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் குறித்து நான் கவலையடைகின்றேன். பொதுமக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் செஞ்சிலுவைக் குழு இறங்காது!

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் போல் கஸ்டெலா.

**எங்களைப் போல நீங்களும் கவலையடைகிறீர்கள் என்றால் வன்னி மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு யாரிடம் இருக்கிறதோ?**
**மக்கள்.**

**இன** நல்லுறவுக்கு எடுத்துக்காட்டான கொழும்பை ஆசியாவிலேயே அழகிய பிரதேசமாக்க வேண்டும்.

திலங்க சுமதிபால - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி.

**புளூமெண்டால் குப்பை மேட்டின் இரவு அழகு கொழும்பின் அழகுதானே? என்கிறார்கள் சிலர். அது போன்றதோ இன நல்லுறவும்?**
**மக்கள்.**

**அரச** ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சேறு பூசுவதற்காகக் கூடுதலான நேரத்தையும், கூடுதல் பக்கங்களையும் ஒதுக்கி வருகிறது.

சுயந்த கருணாதிலக - ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர்.

**எவ்வளவு நேரத்தை ஒதுக்கி எப்படிச் சொன்னாலும் ஐ.தே.க. தலைவருக்கு மண்டைக்குள் ஏறுதில்லையே?**
**மக்கள்.**

**வேற்றுக்கிரக** வாசிகள் இருக்கக்கூடும்!

இஸ்ரோ விஞ்ஞானிகள்.

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வை அவர்களாவது கொண்டுவருவார்களோ?**
**மக்கள்.**

**வெளிநாட்டு** உணவுப் பொருட்களின் இறக்குமதி எதிர்காலத்தில் முற்றாக நிறுத்தப்படும்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

**"வெளிநாட்டு அப்பிளில் தான் சத்து அதிகம்" என்று இது வரை சொன்னதை, இனி எப்படி மாற்றிச் சொல்லப் போகிறீர்களோ?**
**மக்கள்.**




வளமுடன் வாழ மலையாள மாந்திரீகத்துறையில் உண்மை, உறுதி, உத்தரவாதத்துடன் வாழ்வில் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாக என்னால் நிரூபித்துக்காட்டும் மலையாள மாந்திரீக சக்தி என்றால் அது என்னிடம் மட்டுமே!

என்னிடம் பரிகாரம் செய்த வாடிக்கையாளர்கள் என்னுடனேயே! அவர்களில் வாழ்த்துக்கூறும் ஒருவர்-
பல்லாண்டுகாலம் பரணியிலே சாதனைகள் பல படைத்து லட்ச லட்ச மக்களின் மனதில் குடிகொண்டு வாழ்ந்துவரும் உங்களையும், காயத்திரி பீட மந்திரங்களின் வெற்றியினையும் வளர்ச்சியையும் கண்டு மெய்சிலிர்த்துபோனேன் உங்களின் ஆசீர்வாதத்துடன் உங்களிடத்தில் மட்டுமே! என் பிரச்சனைக்குத் தீர்வு கண்டேன்.

மற்றும் உங்கள் குறைகளுக்கு வெளிநாட்டில் நிரந்தர வசிப்பிடம் வேண்டுமா? வெளிநாடு செல்ல தங்கு தடைகளா? திருமணம் நடக்கவில்லை என்ற தித்திப்பா? காதல் கை கூடவில்லையா? குழந்தைப்பேறுகிட்ட எந்தத்தெய்வத்தின் அனுக்கிரகம் தேவை வாழ்வில் சோகமா வீட்டிலோ வியாபாரஸ்தலத்திலோ திருடு போகாமல் காவல் செய்துகொள்ள வேண்டுமா? அன்னிய உறவின் ஆதரவுதேவையா? உறவினர் சொந்தப்பிணக்கா? கல்வியில் மந்தமா சித்தி பெற வேண்டுமா? குடிபோதையால் குடும்பத்தில் தடுமாற்றமா? ஒரே நாளில் கணவன் மனைவி ஸ்திரி புருஷ வசியமா? ஆண்மைக் குறைவால் தித்திப்பா? சொல்லியும் சொல்ல முடியாத நோய்களா? தலைமுடி உதிர்கிறதா? இன்னும் உங்கள் குறை நிறைகளுக்கு என்னை சந்தித்தால் உண்மையின் சக்தி உண்மையிலேயே விளங்கும் இதற்குக்காரணம் எனது 48 வருடகால உண்மையான சேவையே அது மட்டுமா! 15 காண்ட அடிப்படையில் ஒவ்வொருவரின் ஜனன ஜிபிதாவை வாழ்க்கை சித்திரமாக 331 பக்கம் கொண்ட 15 காண்ட அடிப்படையில் ஒருவரின் ஜாதகத்தை ஆணிவேறு அக்குவேறாக தெரிந்துகொள்ள ரூபா 2700/= தபால் செலவு 350/= மட்டுமே.

வெளிநாட்டவர்களுக்கு விஷேட சலுகை உண்டு E-mail: drpksamy@sltnet.lk Web: www.drpksamy.com

அருள் ஞானசித்தர் தேசபந்து, கௌரவ பேராசிரியர், ஜோதிட கலாநிதி P.K.SAMY(J.D.G.A.N) JP ஐயா
ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO - 13. 011 2470615, 011 2342463, 011 2342464, Fax.0094-11-2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம், இல 33,கண்டி வீதி, நுவரெலியா ராஜா: 0775590800,0522235097

அவசர யுகத்தில் மகிமை தரும் இரத்தினக்கல் உங்களுக்கு என் இறைஞான சித்தால் பொருத்தமான இரத்தினக்கற்களைபெற உங்கள் ஜாதகத்துடன் வாருங்கள். கூரை வீட்டில் வாழ்பவர்கள் கூட மாடி வீட்டில் வாழக்கூடிய தகுதியை வாலையமாக ஏற்படுத்தும் உங்கள் மாதிகைக்கு தக்கவாறு என்னால் சிபார்சு செய்யும் 22 கரட் தங்க மோதிரத்துடன் வழங்கப்படும் இரத்தினக்கற்களுக்கு கரண்டிக்காட் என்னால் வழங்கப்படும். E-mail: drpksamy@sltnet.lk

# இறுதிக் கட்டத்தில் புலிகள்!




**முல்லைத்தீவு** மாவட்டத்தில் புலிகள் வசம் கடைசியாக மிஞ்சியிருக்கும் அவர்களின் செயற்பாட்டுப் பகுதிகள் இராணுவத்தினரின் முன்னேற்றம் காரணமாக மேலும் குறைவடைந்துள்ளன. இந்த நிலையில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்கள், அப்பகுதிகளிலிருந்து தப்பிச் செல்வதற்காக ஆயுதபாணியான புலி உறுப்பினர்களை இப்போது வெளிப்படையாகவே தாக்குகிறார்கள்.

அரசாங்கத்தினால் பாதுகாப்பு வலயமாகப் பிரிக்கப்பட்டுள்ள பதினேழு சதுர கிலோ மீற்றர்கள் சிறிய நிலப்பரப்புக்குள் 55 ஆயிரத்துக்கும் 65 ஆயிரத்துக்குமிடையிலான மக்கள் சிக்கியுள்ளனரென்று கூறப்படுகிறது. இந்தப் பிரதேசத்துக்குள் முடக்கப்பட்டு, நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டதால், ஆத்திரமுற்றிருக்கும் மக்கள் கூட்டம் ஆக்ரோஷம் கொண்டுள்ளது. இதனால் தப்பிச் செல்வதற்காக ஆயுதபாணியான புலி உறுப்பினர்களைக் கொல்லவும் தயாராக உள்ளது.

பாதுகாப்பு வலயமென எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட பகுதிக்குள் உள்ள புதுமாத்தளன் பிரதேசத்தில் கடந்த வாரம் ஆண்களையும், பெண்களையும் பலாத்காரமாகக் கொண்டு செல்ல முயற்சித்த புலி உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று மக்களின் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் பல புலி இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமுற்றனர். இந்தப் புலி இயக்க உறுப்பினர்கள் பயணித்த வாகனங்களையும் மக்கள் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

இளம் பெண்ணொருத்தியை அவளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பலாத்காரமாகப் பிடித்துச் செல்லப் புலிகள் முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தப் பெண்ணைப் புலிகள் இழுத்துச் செல்ல முற்பட்டபோது ஏற்பட்ட இழுபறியில் அவள் அநேகமாக நிர்வாணமாகக் கூடிய நிலை ஏற்பட்டதாகப் புதுமாத்தளன் பகுதியிலிருந்து தப்பிவந்த மக்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் அப்பகுதியிலிருந்த மக்களையும் இளம் பெண்ணின் உறவினர்களையும் ஆத்திரப்பட வைத்தது. இதன் பின்னரே புலி இயக்க உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். இச்சம்பவத்தினால் ஆத்திரமுற்ற மக்கள், புலிகள் வந்த ஆறு வாகனங்களை தீ வைத்துக் கொளுத்தினர். அதன் பின்னர் அங்கிருந்த புலிகளின் அலுவலகமொன்றினைச் சுற்றி வளைத்த மக்கள் அதனையும் எரித்தனர்.

பின்னர் பதிலடி கொடுக்கும் முகமாக புலி இயக்க உறுப்பினர்களைக் கொண்ட ஆயுத பாணிகளான குழுவொன்று அங்கு வந்து நிராயுதபாணிகளான மக்களைக் கண்மண் தெரியாதபடி தாக்கியது. அப்பகுதியில் பணிபுரிந்த மனிதாபிமான முகவராண்மை நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் கண் முன்னால் இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் காயமடைந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற இவ்வாறான முதல் சம்பவம் இதுவல்ல. கடந்த சில வாரங்களாகத் தப்பிச் செல்ல முயன்ற மக்களைத் தடுக்க முயன்ற புலிகளைக் கோபம் கொண்ட மக்கள் தாக்கிக் காயப்படுத்தியதோடு, பலரைக் கொன்றனர். கடந்த வாரம் மட்டும் புலி இயக்கப் பொலிஸார் நால்வர் குத்திக் கொல்லப்பட்டனர்.

கடல் மார்க்கமாகவும், தரைவழிப் பாதை மூலமாகவும் கடந்த வாரம் 5000 இற்கு மேற்பட்ட மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். இத்துடன் இராணுவ பாதுகாப்பைத் தேடி வந்த மக்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தையும் தாண்டிவிட்டது.

கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்லும் மக்கள் மீது திட்டமிட்டுத் தாக்குதல்கள் நடத்துவதன் மூலம் புலிகள் மக்கள் வெளியேறுவதைத் தடுக்க முயன்றனர். புதுமாத்தளன் பகுதியிலிருந்து 35 வள்ளங்கள் மூலம் தப்பிச் செல்ல முயன்ற 643 மக்கள் மீது தாக்குதல் நடத்திக் கொல்லவும் முயற்சி எடுக்கப்பட்டது. புலிகள் நான்கு படகுகளில் வந்து மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து இத்தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் அப்பகுதிக்குச் சமீபமாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அம்மக்களைப் பாதுகாத்து, அவர்களைப் பருத்தித்துறைக்குக் கொண்டு சென்றனர்.

வடக்கில் இராணுவ நடவடிக்கையின் கடைசிக் கட்டத்தில் ஈடுபட்டுவரும் துருப்புகள், இரணபாலைச் சந்தியை மார்ச் பதினாறாம் திகதி கைப்பற்றின. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பகுதியில் இரணபாலைச் சந்தி கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒன்றாகும். இதனைக் கைப்பற்றியதன் மூலம் இராணுவம் மிகவும் முக்கியத்துவம் மிக்க கட்டத்தை எட்டியது. அரசாங்கம் பிரகடனப்படுத்திய யுத்த சூனியப் பகுதிக்குள் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்கள் தப்பிச் செல்வதற்கான பாதுகாப்பான ஒரு வழியைப் படையினரின் இந்த வெற்றி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புலிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் இராணுவம் தொடர்ந்து முன்னேறி இரணபாலை கிழக்கில் தமது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொண்டது. புலிகளின் கடைசிக் கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதி இரணபாலைச் சந்தியாகும். இந்தச் சந்தி படையினரிடம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து அதனை மீளக் கைப்பற்றுவதற்காகப் புலிகள் அலையலையாகத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி, பொட்டு அம்மான் உட்பட அநேகமாக சகல புலித் தலைவர்களுமே இந்தப் பகுதிக்கு வந்து சென்றதாக மக்கள் படையினரிடம் தெரிவித்தனர். கடல் முனையில் இருக்கும் மக்களின் பாதுகாப்பு வலயத்தைத் தனியாக்கி, ஏனைய புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான விநியோக மார்க்கங்களைத் துண்டிப்பதே இராணுவத்தின் முக்கிய நோக்கமாகும். புலிகளுக்கான சகல விநியோகமும் இப்போது பாதுகாப்பு வலயத்துக்கூடாகவே வருகிறது.

மக்களுக்கென அனுப்பி வைக்கப்படும் பொருட்களைப் புலிகள் பலாத்காரமாகக் கொண்டு செல்வதால் பாதுகாப்பு வலயத்தில் மக்களுக்கு உணவு கிடைப்பதில்லையென அவர்கள் புகார் தெரிவிக்கின்றனர். புதுமாத்தளன் பகுதிக்கு உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்ததுமே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இருக்கத்தக்கதாக அவற்றில் பெரும் பகுதியை புலிகள் பலாத்காரமாக எடுத்துச் செல்கின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் எட்டாவது செயலணிப் படையைச் சேர்ந்த துருப்புகள் நந்திக் கடல் ஏரியின் வட பகுதி எல்லையை நோக்கிக் கடந்த பதினெட்டாம் திகதி முன்னேறியது. இந்தப் படையணி புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஏ-35 வீதிக்கு (முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு) சமாந்தரமாக மேலும் 750 மீற்றர்கள் முன்னேறியுள்ளது. புலிகள் இரணபாலைப் பகுதியில் கவனம் செலுத்திக் கொண்டிருந்ததால் இந்தப் பகுதியில் எதிர்பாராத தாக்குதல் எதனையும் நடத்தவில்லை.

இதேவேளை 53 ஆவது படையணியும் புதுக்குடியிருப்பிலிருந்து எட்டாவது செயலணிப் படையைச் சந்திக்கும் நோக்கில் ஏ-35 வீதிக்குச் சமாந்தரமாக நகர்ந்து கொண்டிருந்தது. கடந்த பதினாறாம் திகதி இராணுவத்தினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தப் புலிகள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. புதுக்குடியிருப்புக்கு மேற்காக விஷேட படையணித் துருப்புகளை இலக்கு வைத்து, இராணுவ சார்ஜன்டின் சீருடையணிந்த புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியொருவர் பந்தோபஸ்துப் படையினரின் பாதுகாப்பு நிலையை ஊடுருவ முனைந்தபோது தன்னைத் தானே வெடிக்க வைத்துக் கொண்டார்.

மேலும் மேலும் வந்து கொண்டிருந்த இடம்பெயர்ந்த மக்களை வரவேற்பதற்குப் படையினர் தயாராகிக் கொண்டிருந்த போது திடீரென இராணுவ சார்ஜன்டின் சீருடையில் ஒருவர் வருவதை அவதானித்தனர். கைகளை உயர்த்துமாறு சந்தேக நபரிடம் உத்தரவிட்ட படையினர், அவர் தொடர்ந்து முன்னேறுவதற்கு முன்னதாகவே அவரை இனங்கண்டு கொண்டனர். படையினர் அவரைத் தாக்குவதற்குத் தயாரான போது, இராணுவ சார்ஜன்ட் போல உடையணிந்திருந்த அந்தப் புலி உறுப்பினர் தனது தற்கொலை அங்கியை வெடிக்க வைத்து ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்திலிருந்து 50 - 75 மீற்றர்களுக்கு அப்பால் ஏனையவர்கள் இருந்ததால் எவருமே காயமடையவில்லை.

சாலை முன்னரங்கப் பகுதியில் 55 ஆவது படையணி கடும் மோதலுக்குப் பின்னர் மேலும் இரண்டு மண் அணைக்கட்டுகளைக் கைப்பற்றியது. இராணுவத்துக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தப் புலிகள் முனைந்தனர். புலிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பபா என்றழைக்கப்படும் எட்டு மோட்டார் ஏவுகணைகளை இரணபாலைக்குக் கிழக்கே கடும் மோதலுக்குப் பின்னர் கடந்த பதினேழாம் திகதி படையினர் கைப்பற்றினர். கடந்த இரண்டு வாரங்களில் பெருந்தொகையான புலி இயக்கத் தலைவர்கள் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் காயமுற்றனர்.

புலி இயக்கத் தலைவர் பிரபாகரன், முல்லைத்தீவு மாவட்டத்திலிருக்கும் புலிப் பகுதிக்குள் இன்னமும் இருப்பதாக களமுனைத் துருப்புகள் உறுதி செய்கின்றன. நிலத்துக்குக் கீழான பங்கரொன்றுக்குள், ஒன்று அல்லது இரண்டு நெருங்கிய நம்பிக்கைக்குரியவர்களுடன் இருக்கிறாரென நம்பகமான வட்டாரங்கள் நம்புகின்றன. இப்பகுதியில் பிரபாகரன் இருப்பதாக மக்கள் தெரிவித்ததாக அவர்கள் கூறுகின்றனர். அவருக்கு அங்கு வானொலித் தொலைத்தொடர்புகள் இல்லையென்ற போதிலும், அவர் நேரடியாக யுத்தத்துக்குத் தலைமை தாங்குவதாகத் தெரியவருகிறது. எனினும் புலி இயக்கத் தலைவர்களோ, உறுப்பினர்களோ தப்பிச் செல்லாதபடி சகல கடல் மார்க்கங்களும் கடற்படையினரால் தடுக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு யுத்த நிலை தொடர்பாக சுனில் ஜயசிறி என்ற இராணுவ ஆய்வாளர் எழுதிய இந்தக் கட்டுரை கடந்த 20 ஆம் திகதிய 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இப்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மேலும் சுருங்கியுள்ளது. அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

# செல்வந்த நாடுகளையே உலுக்கும் மோசமான பொருளாதார நெருக்கடி!

**உலகளவில்** பொருளாதார நெருக்கடிநிலை என்றுமில்லாதவாறு மிக மோசமாகத் தலைவிரித்தாடுகிறது. இப்பொருளாதார நெருக்கடி வளர்முக நாடுகளை விட, பொருளாதார ஸ்திர நிலை, பொருளாதார தன்னிறைவு கண்ட செல்வந்த நாடுகளையே அதிகம் பாதித்து இந்த நாடுகளில் மிகப்பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. பல்வேறு நாடுகளின் அரசுகள் இப்பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் திணறி வருகிறது.

உலகப் பொருளாதார வளர்ச்சியின் நடுநாயகமான அமெரிக்கா தொடக்கம் கைத்தொழில் வர்த்தக பொருளாதாரத் துறையில் கொடிகட்டிப் பறந்த ஜப்பான் வரை பொருளாதாரச் சரிவுக்கு விதிவிலக்காகவில்லை. மிக மோசமான வேலையில்லாத் திண்டாட்டம்; நாணய மதிப்பிறக்கம், நிதி நிறுவனங்களின் வீழ்ச்சி என்பன நாளும் தொடர்கதையாகி வருகிறது. வீழ்ச்சி கண்டுவரும் பொருளாதாரச் சரிவைத் தடுத்து நிறுத்தப் பல்வேறு நாடுகளின் அரசுகள் பல திட்டங்களை, வியூகங்களை வகுத்தாலும் இச்செல்வந்த நாடுகள் உடனடியாக இப்பொருளாதார வீழ்ச்சியிலிருந்து அண்மைக் காலத்திற்குள் வெளியே வருவதற்கு வாய்ப்பில்லையென பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஈழப்போராட்டத்தில் இரத்த சாட்சியங்கள் இவ்வாரம் பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த வாரம் சாட்சியங்கள் தொடரும்...

செல்வந்த நாடுகளில் கண்டுவரும் பொருளாதார நெருக்கடி, வளர்முக நாடுகளையும் பல்வேறு வழிகளிலும் பாதித்து வருவதுடன், வளர்முக நாடுகளில் இருந்து தொழிலுக்காகச் சென்றுள்ளவர்களையும் பல்வேறு வழிகளிலும் பாதித்து வருகிறது. வளர்முக, ஏழை நாடுகளிலிருந்து தொழிலுக்காகச் சென்ற ஆயிரக்கணக்கானோர் தற்போது வேலை இழந்துள்ளனர். பல நிறுவனங்கள் வெளிநாட்டுத் தொழிலாளர்களுடன் மேற்கொண்ட ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்புக்களை இரத்துச் செய்துவிட்டன.

இந்த நெருக்கடி தோற்றுவித்துள்ள விளைவுகளில் பிரதானமானது வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மீதான கசப்புணர்வு சொந்த நாட்டு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது எனலாம். தங்கள் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களைத் தவிர, வெளிநாட்டவர்களுக்கு வேலை வழங்க வேண்டாம் என்ற கோரிக்கை தற்போது வலுப்பெற்று வருகிறது. செல்வந்த நாட்டு மக்களின் மனோநிலை இந்தளவு மாறிவிட்டதற்கு உதாரணமாக அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு சான்றாகவுள்ளது.

வேலையில் உள்ள வெளிநாட்டவர்களையும், வேலையிழந்துள்ள வெளிநாட்டு குடியேற்றவாசிகளையும் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமென ஐரோப்பாவைச் சேர்ந்த பல்வேறு நாட்டு மக்கள் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி நாட்டு மக்களே இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர். 79 சதவீத இத்தாலியர்களும், 78 சதவீத பிரித்தானியர்களும், 71 சதவீத ஸ்பெயின் காரர்களும், 67 சதவீத ஜெர்மனியரும், 51 சதவீத பிரெஞ்சுக்காரர்களும் இப்படி கருத்துத் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் மோசமான வேலையில்லாத் திண்டாட்டம் தலைதூக்கியுள்ளது. அமெரிக்காவில் 60 இலட்சம் பேரும், பிரித்தானியாவில் 20 இலட்சம் பேரும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் உள்ளனர். பிரிட்டனில் உள்ள வேலைவாய்ப்புக்கள் பிரித்தானிய மக்களுக்கே என பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிரவுண் தற்போது வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். இந்த நாடுகளில் வெளிநாட்டு குடியேற்றவாசிகள், தொழிலாளர்களுக்கெதிராக வளர்ந்துவரும் இந்த உணர்வானது இன ஒதுக்கல், வன்முறை, பாராபட்சம் போன்றவற்றை முட்டும் அபாயத்தை அடைந்துள்ளது.

பலநாடுகள் வெளிநாட்டுக் குடியேற்றவாசிகள், தொழிலாளர்களுக்கு கதவடைப்புச் செய்ய ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விசா வழங்கும் முறைகளில் இறுக்கமான கட்டுப்பாடுகளைப் பல நாடுகள் ஏற்கனவே அறிவித்துவிட்டன. கனடாவில் பிரஜா உரிமை பெறுவதற்கு ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகள் தெரிந்திருப்பது அவசியம் என கனடா அறிவித்துள்ளது. அமெரிக்காவும், பிரித்தானியாவும் இந்த நடைமுறையை ஏலவே பின்பற்றத் தொடங்கிவிட்டது. வருடாந்தம் இரண்டரை இலட்சம் பேர் புதிய குடியேற்றவாசிகளாக கனடாவுக்குள் வருவதாக கனடா தெரிவித்துள்ளது. ஸ்பெயினில் கடந்த பத்தாண்டுகளுக்குள் 50 இலட்சம் பேர் குடியேறியுள்ளதாக ஸ்பெயின் தெரிவித்துள்ளது. சுவிட்சர்லாந்திலும் இதுதான் நிலை.


உலகளவில் ஏற்பட்டுள்ள இந்த நிதி நெருக்கடியில் வளர்முக நாடுகளும் மோசமான தாக்கத்தை சந்திக்குமென உலக வங்கி எச்சரித்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் முழு உலகமுமே தற்போது காலடி எடுத்து வைக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள பொருளாதார நிபுணர்கள், மொத்தமாகவுள்ள 116 வளர்முக நாடுகளில் 94 நாடுகள் மோசமாக பாதிக்கப்படுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியா, இலங்கை நாடுகளும் இதில் உள்ளடங்கியுள்ளது.

ஜப்பான், மலேசியா, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையைச் சேர்ந்த பலர் வேலையிழந்து நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊரோடி

# மனித நேயர் மார்டின் லூதர் கிங்



**ஏனெனில்,** தென் மாநிலங்களில் உள்ளது போன்ற இனவெறி வடமாநிலங்களில் கிடையாது. கறுப்பர்- வெள்ளையர் உறவு மிகவும் சாதாரணமாக இருந்தது. இருப்பினும், கறுப்பர்கள் மிக மிக மோசமாக மனிதாபிமானம் இல்லாமல் நடத்தும் நிலைமை ஏற்படாமல் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்தது.

பாதிரியாராகப் பணிபுரிய வருமாறு மார்டின் லூதர் கிங்கிற்கு கறுப்பின மக்களுக்கான இரண்டு திருச்சபைகளிலிருந்து அழைப்பு வந்தது. லூதர் கிங் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கினார். "தான் பிறந்து வளர்ந்த அமெரிக்காவின் தென் பகுதியில் இனவெறி தலைதூக்கி வெறியாட்டம் ஆடிய பொழுதும் கூட, தான் அங்கே சென்று பணியாற்றுவதே நல்லது என்று முடிவிற்கு வந்தார். பத்திரமான, பாதுகாப்பான வாழ்வு கிடைக்கும் என்பதற்காக வடமாநிலங்களுக்குச் செல்ல நினைப்பது கறுப்பின மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகம்" என்று நினைத்தார்.

எனவே, தான் பிறந்த ஊருக்கே தன் மனைவியுடன் மீண்டும் சென்றார். அங்கு அவர் மாண்ட் கோமரி நகரில் டெக்ஸ்டர் அவின்யூ என்ற இடத்தில் உள்ள பாப்டிசத் திருச்சபையில் பாதிரியாராக நியமனம் செய்யப்பட்டார்.

கறுப்பர்களுக்குச் சமநீதி கிடைக்க சாத்வீக முறையில் அவர்களைத் திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். லூதர் கிங் இடைவிடாமல் உழைத்து, பிரசாரம் செய்து தன்னுடைய இருபத்தேழாம் வயதிலேயே மிகவும் பிரபலமானவராகப் புகழ்பெற்று விளங்கினார்.

அமெரிக்கா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, தீவிரமாக இன ஒதுக்கல் கொடுமைகளை எதிர்த்து முழக்கம் செய்தார்.

1959-ஆம் ஆண்டு முதல் இனவெறிக் கொடுமைகளை எதிர்க்கும் இயக்கப் பணிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கினார். எனவே, லூதர் கிங் டெக்ஸ்டர் அவின்யூ பாதிரியார் பணியிலிருந்து விடுபட்டு, அட்லாண்டா நகரிலுள்ள பாப்டிசத் திருச்சபைக்கு வந்து தனது தந்தையாருடன் பணியாற்றத் தொடங்கினார்.

அதே சமயத்தில் லூதர் கிங்கும் அவரது மனைவியான காரெட்டாவும் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அமெரிக்கக் கறுப்பின மக்கள் படும் இன்னல்களை நெஞ்சம் நெகிழ்ந்து, அப்பகுதி மக்களிடம் விரிவாக எடுத்துக் கூறினர்.

"தான் பிறந்து வளர்ந்த அமெரிக்காவின் தென் பகுதியில் இனவெறி தலைதூக்கி வெறியாட்டம் ஆடிய பொழுதும் கூட, தான் அங்கே சென்று பணியாற்றுவதே நல்லது என்று முடிவிற்கு வந்தார். பத்திரமான, பாதுகாப்பான வாழ்வு கிடைக்கும் என்பதற்காக வடமாநிலங்களுக்குச் செல்ல நினைப்பது கறுப்பின மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகம்" என்று நினைத்தார்.

## கிளர்ந்தது கிளர்ச்சி

ஒரு மாலை நேரம், நகரப்பேருந்து ஒன்று பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக நின்றது. அந்த நிறுத்தத்தில் நான்கு வெள்ளையர்கள் அந்தப் பேருந்தில் ஏறினர். அவர்களுக்கு உட்கார இடம் கிடைக்கவில்லை. பேருந்தை நிறுத்திவிட்டு, ஓட்டுநர் உள்ளே வந்தார். அமர்ந்து பயணம் செய்த கறுப்பர்களான நான்கு பயணிகளை நோக்கி விரலை அசைத்தார்.

"நீங்கள் எழுந்து நின்று கொண்டு வெள்ளையர்கள் உட்கார இடம் தர வேண்டும்" -என்று அதிகாரத் தொனியில் ஓட்டுநர் கூறினார். உடனே, மூன்று நீக்ரோக்கள் எழுந்து இடம் கொடுத்தனர். ஒரு கறுப்பின பெண்மணி மட்டும் எழுந்திருக்க முடியாது என்று தலையை ஆட்டினார். ஓட்டுநருக்கு கடுங்கோபம் பொங்கி வழிந்தது.

மிகுந்த எரிச்சலுடன், "எழுந்திருக்க போகிறாயா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்மணி, "நான் பகல் முழுவதும் வேலை செய்து மிகவும் களைத்துப் போயிருக்கிறேன். என்னால் எழுந்திருக்க இயலாது" என்று கூறினாள்.

நன்றி:- ஆச்சா


இதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த ஓட்டுநர் "மரியாதையாக எழுந்திருக்கப் போகிறாயா? காவல் நிலையத்துக்குச் செல்லவா?" என்று கேட்டார்.

அப்பெண்மணி சிறிதும் பயப்படாமல், 'நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள். நான் எழுந்திருக்கப் போவதில்லை' என்று உறுதிபடக் கூறினாள். உடனே பேருந்தை காவல் நிலையம் முன்பு கொண்டு போய் நிறுத்தினார். காவலர்கள் ஓடி வந்து பேருந்திற்குள் நுழைந்து அந்தக் கறுப்பின பெண்ணை தரதரவென்று இழுத்துச் சென்றனர். அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாக அந்தப் பெண்ணான ரோஸா பார்க்ஸ் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

இந்தக் காட்சிகளைக் கண்ட கறுப்பின பயணிகளின் குருதி கொதித்தது. அங்கு பெருமளவில் கூட்டம் சேர்ந்து விட்டது. அவர்களுடைய ஆத்திரம் ஆவேசக்கூச்சலாக மாறியது.

அந்தக் கூட்டத்தில் நின்ற ஒருவர் "இந்த அக்கிரமங்களுக்கு முடிவு கட்டியே ஆக வேண்டும்" என்று கத்தினார். மேலும், அவர் "நாம் எல்லோரும் ஓரிடத்தில் ஒன்று கூடி விவாதித்து உறுதியான முடிவு எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். கூட்டத்தினர் ஆரவாரத்துடன் அவர் கூறிய கருத்தை வரவேற்றனர்.

அப்போது ஒருவர் "நாம் எல்லோரும் நகரத்தை



விட்டு வெகுதூரத்தில் உள்ள பாழடைந்துபோன வீடுகளில் அங்குமிங்குமாகச் சிதறி வாழ்கிறோம். கூட்டம் நடந்த இடம் ஏது? நமக்கு யார் கொடுப்பார்கள் ?" என்று கேட்டார்.

அப்போது கூட்டத்தின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த ஒரு நீக்ரோ இளைஞன், "நண்பர்களே! உங்களின் மறுப்பு ஏதும் இல்லையென்றால் நான் பாதிரியாராக இருக்கும் தேவாலயத்தில் கூட்டத்தை நடத்திவிடுவோம்" என்று கூறினான். (தொடரும்)

# தோல்வியில் துவளும் புலிகள் நிலைப்பாடுகளை மாற்றுகிறார்கள்!

**கடந்த** வாரத்திற்குள் புலிகளின் தரப்பில் பேசவல்ல அதன் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன் தெரிவித்துள்ள இரு கருத்துக்கள் புலித்தலைமை சந்தித்துள்ள இராணுவத் தோல்வியை அப்பட்டமாக வெளிப்படுத்தக் கூடியதாகவுள்ளது. ஒன்று இந்தியாவின் நண்பர்கள்தான் புலிகள் என்பதும், இரண்டாவதாக நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு புலிகள் தயாராகவிருப்பதாகவும் நடேசன் தெரிவித்துள்ளார்.

இந்தியா தொடர்பான கருத்தை இந்திய ஊடகமொன்றிற்கு அளித்த நேர்காணலிலும் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்குத் தயார் என்பதை இலண்டன் பத்திரிகையொன்றுக்கு அளித்த செவ்வியிலும் நடேசன் வெளிப்படுத்தியுள்ளதைப் பார்க்கும் போது, மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் தத்தளித்து இருப்பவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, எந்தப் பற்றுக் கேடாவது கிடைக்காதா என அங்கலாய்ப்பதை ஒத்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அரசியல் ரீதியான வழிமுறைகளை முற்றாக நிராகரித்து இராணுவ வழிமுறைகளில் முழு நம்பிக்கை கொண்டிருந்த புலித்தலைமை தங்களது இராணுவத் தோல்வியின் இறுதிக் கட்டத்திற்குள் மூச்சுத் திணறிக் கொண்டு; அரசியல் ரீதியான வழிமுறைகளின் ஊடாகத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தற்போது பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகிறது. சர்வதேச சமூகத்தின் ஆதரவைத் திரட்டி தங்களைச்சுற்றி வளைத்துள்ள இலங்கை இராணுவத்தை மோதல் தவிர்ப்பிற்கு கொண்டு வந்து



நடேசன்

தப்பிக் கொள்வதே புலித் தலைமையின் இன்றைய பிரதான நோக்கமாகவுள்ளது.

இந்த அரசியல் வழிமுறைக்குக் கருவியாகத்தான் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் மக்களைத் தொடர்ந்தும் பணயக் கைதியாக வைத்திருப்பதும், போரின் இடைக்குள் அவர்களைச் சிக்க வைத்து அவர்களின் மரணத்திலும் துன்பத்திலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பதே புலித் தலைமையின் கபடத் திட்டமாக இருந்து வருகிறது. வன்னிக்குள் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்றும் அவர்களுக்கு உணவு, மருந்து வகைகள் இல்லையென்றும் ஆகவே உடனடியாக இலங்கை அரசு முன்னெடுத்து வரும் போரை நிறுத்த வேண்டும் என்பதுவே புலிகள் நடாத்தும் அரசியல் பிரசாரத்தின் சாராம்சமாகவுள்ளது.

இந்த அரசியலுக்குப் புலம்பெயர் நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களை ஊர்வலம், பேரணியெனத் திரட்டி சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதன் ஊடாக யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்த புலித் தலைமை கடந்த பல மாதங்களாக எடுத்த முயற்சி தோல்வி கண்டதையடுத்து புலித்தலைமையே இப்போது நேரடியாக விசயத்திற்கு வந்துள்ளது. அதுதான் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்குத் தாம் தயார் என்பது.

பலருக்கு புலித் தலைமையின் இந்த அறிவிப்பு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடும். ஏனெனில் இந்தப் புலித் தலை மைதான் யுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக மீறியதும், கடந்த கால யுத்த நிறுத்தம் தமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விட்டதாகவும், யுத்தத்தின் மூலமே தனி அரசை அமைக்க முடியுமெனவும் வீறாப்புப் பேசி ஆணவமாகக் கதையளந்த புலித் தலைமை ''பேச்சுப் பல்லாக்கு, தம்பிக்கு கால்நடை'' என்பது போல் இப்போது வந்துள்ளது.

புலித் தலைமை இந்தியாவை எதிரியாக்கி, ராஜீவ் காந்தியை மனித குண்டுதாரியை அனுப்பிப் படுகொலை செய்து எதிர்நிலைக்குத் தள்ளி, அதன் ஊடாகத் தென்னாசியாவின் பலம் பொருந்திய நாடு இந்தியாவே தமக்குப் பொருட்டும் அல்ல, நட்பு நாடும் அல்ல என மார்தட்டி வீறாப்புப் பேசி வந்த புலித்தலைமை அண்மைக் காலமாக இந்தியாவைத் தாம் நட்பு சக்தியாகவே பார்ப்பதாகவும் இந்தியாவின் உண்மையான நண்பன் தாங்கள் தான் எனவும் ''அந்தர் பல்டி'' அடிக்கத் தொடங்கியுள்ளனர். ''கேட்கிறவன் கேனயன் என்றால் எருமைமாடு ஏரோப்பிளேன் ஓடுமாம்'' என்பது போல்தான் இருக்கிறது புலித்தலைமையின் இந்தக் கதையும்.

> **புலித் தலைமைதான் யுத்த நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக மீறியதும், கடந்த கால யுத்த நிறுத்தம் தமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விட்டதாகவும், யுத்தத்தின் மூலமே தனி அரசை அமைக்க முடியுமெனவும் வீறாப்புப் பேசி ஆணவமாகக் கதையளந்த புலித் தலைமை "பேச்சுப் பல்லாக்கு, தம்பிக்கு கால்நடை'' என்பது போல் இப்போது வந்துள்ளது.**

இந்தியா ஒருபோதுமே புலித்தலைமையின் இந்த மாயவார்த்தைக்குப் பலியாகாது என்பது தெளிவு. புலித் தலைமை தொடர்பாக எந்தக் கட்சி இந்தியாவில் ஆட்சிக்கு வந்தாலும் நிலைப்பாடு மாறவே மாறாது! இந்தியாவின் நீதித்துறையின் உத்தரவுப்படி பிரபாகரன் இந்திய அரசால் வேண்டப்படுகின்ற ஒரு குற்றவாளி என்பது இந்திய நீதித்துறையின் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டை இந்தியாவின் ஆட்சி அதிகாரத்திலுள்ள எந்தக் கட்சியுமே உதாசீனம் செய்ய முடியாது! இந்தியாவை நோக்கிப் புலித் தலைமை நகர்த்தும் காய்கள் விழலுக்கு இறைத்த நீர்தான்.

இதே போல்தான் சர்வதேச சமூகத்திற்கும் புலிகள் சொல்கின்ற செய்திகள், அறிவிப்புக்கள் வெற்றியளித்துக் கைகூடுவதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை. இலங்கை அரசை யுத்தத்தை நிறுத்துமாறு கோரும் அழுத்தத்தை எந்த நாடுமே இலங்கை அரசு மீது பிரயோகிப்பதற்கான சாத்தியமோ, அதற்கு இலங்கை அரசு உடன்படும் சூழலோ இல்லை என்பது தெளிவு. இராணுவ ரீதியாகத் தோற்ற புலிகள் இப்போது அரசியல் ரீதியாகவும் தோற்பதையே புலித் தலைமையின் இந்த நிலைப்பாட்டு மாற்றங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**— பிரசாத் —**



## மலையகத்து அவலம்

# மலையகத்தில் போஷாக்கின்றி அவதியுறும் கர்ப்பிணிகள்!

**மலையகக்** கர்ப்பிணித் தாய்மார் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினை கொஞ்சம் ஆழமாக பார்க்கப்பட வேண்டியவையாகும். ஓர் கர்ப்பிணித்தாய் சந்திக்கின்ற ஒவ்வொரு பிரச்சினைகளும் அந்தத் தாயின் வயிற்றில் இருக்கும் பிள்ளைக்குத் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. ஓர் குழந்தையானது உடல், உள ரீதியாக ஆரோக்கியமாகப் பிறக்க வேண்டுமாயின், கர்ப்ப காலத்தில் அந்தத் தாயும் உடல், உள ரீதியில் ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும். இதன் காரணமாகவே கர்ப்பிணித் தாய்மார்கள் மீது அதிக அக்கறையைச் செலுத்தி வருகின்ற சுகாதார அமைச்சு, கர்ப்பிணித் தாய்மாருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காகவும், அவர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காகவும், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் 'மிட் வைப்' என்று சொல்லப்படுகின்ற சுகாதார உத்தியோகத்தர்களைச் சேவையில் ஈடுபடுத்தி வருகின்றது. எனினும் தோட்டப் பிரதேசங்களில் கூட்டு ஒப்பந்தத்தின்படி இவ்வாறான உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டியது தோட்ட நிர்வாகங்களின் கடமையாகவே குறிப்பிடப்பட்டிருந்தும் அனைத்துத் தோட்ட நிர்வாகங்களும் கிரமமான முறையில் சுகாதார உத்தியோகத்தர்களின் சேவைகளைத் தோட்டக் கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில்லையென்றே கூறப்படுகின்றது.

அதேபோன்று கர்ப்பிணித் தாய்மாரினதும், குழந்தைகளினதும் போஷாக்கினைப் பேணுவதற்காக ஓர் தாய் கர்ப்பமான காலப் பகுதியிலிருந்து குழந்தை பிறந்து குறிப்பிட்டளவு உடல் நிறையை அடையும் வரை, அதாவது போதிய வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் வரை தேவைக்கேற்ப திரிபோஷா சத்துணவு அரசினால் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் அவை தோட்டப் பகுதிகளுக்கு ஒழுங்கான முறையில் சென்றடைவதில்லையென்பதே பெரும்பாலான தோட்ட மக்களின் ஆதங்கமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள 50 தோட்டங்களில் சுமார் 600இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் இருப்பதாகவும், அவர்களுக்கான திரிபோஷாக்கள் தோட்ட நிர்வாகத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுவதில்லையென்றும் அப்பகுதி மக்களினால் அண்மையில் பிரதிச் சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஷ் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தோட்டங்களின் அனைத்துச் சுகாதார வசதிகளையும் அமைத்துக் கொடுப்பதும், அவற்றிற்குத் தேவையான மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், போன்றவர்களை நியமிப்பது என்பன தோட்ட நிர்வாகங்களின் பொறுப்பு என்றும், மருந்துப் பொருட்கள் உட்பட உபகரணங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் ஒப்பந்தங்களின் மூலம் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குறிப்பிட்ட தோட்டங்களுக்குத் தேவையான திரிபோஷா சத்துணவுகளும் குறித்த மாகாண சுகாதாரக் களஞ்சிய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் அவற்றை எடுத்துச் சென்று மக்களுக்கு விநியோகிப்பதில் தோட்ட நிர்வாகங்கள் அசட்டை செய்கின்றன என்று கூறுகின்ற சுகாதார பிரதி அமைச்சர் அவர்கள், இந்நிலை இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டுமன்றி ஏனைய பல தோட்டங்களிலும் காணப்படுவதாகவும், குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒவ்வொரு தோட்டங்களிலும் இருக்கின்ற கர்ப்பிணித் தாய்மாரைக் கணக்கெடுத்து சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படல் வேண்டும் எனக் கூறப்பட்ட போதிலும், பல தோட்டங்களின் சுகாதார உத்தியோகத்தர்கள், ஒரே பட்டியலை மீண்டும் மீண்டும் அனுப்பி வைப்பதைத் தான் அவதானித்துள்ளதாகவும் கூறுகின்றார். இவ்வாறு தோட்ட நிர்வாகங்களினதும், உத்தியோகத்தர்களினதும் கவனயீனங்களினால் கர்ப்பிணித் தாய்மாருக்கும், பிறந்த குழந்தைகளுக்கும் போஷாக்குணவு கிடைக்காமல் தட்டிக்கழிக்கப்படுகின்றது.

> **எவ்வாறான காரணங்களைப் பட்டியல் இட்டுக் கூறுகின்ற போதும் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணங்களாக அமைவது நிர்வாகச் சீர்கேடுகளும், பொருளாதாரப் பிரச்சினைகளுமேயாகும். இவை இரண்டுமே நடைமுறையில் உள்ள கூட்டு ஒப்பந்தம் என்கின்ற வரையறைக்குள் சம்பந்தப்பட்டு இருக்கின்றது. எனவே மலையக மக்கள் முகங்கொடுத்து வருகின்ற எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் கூட்டு ஒப்பந்தத்தினை விமர்சிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.**

தோட்டங்களில் வாழும் கர்ப்பிணிகளும், சிறுவர்களும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது, போஷாக்குக் குறைபாடு அதிகளவில் உள்ளவர்களாகக் காணப்படுவதற்கு தோட்டங்களின் நிர்வாகச் சீர்கேடுகளும் ஒரு காரணமாக இருக்கின்ற போதும், முழுப் பொறுப்பையும் அவற்றின் மீது சுமத்திவிடவும் முடியாது. இவ்விடயத்தில் தோட்ட மக்களின் அக்கறை எந்தளவிற்கு இருக்கின்றது, போஷாக்கு விடயத்தில் எவ்வாறான அக்கறையை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்பவையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியதாகும்.

ஒரு குழந்தை பிறந்து நான்கு தொடக்கம் 6 மாத காலம் வரைக்கும் அக்குழந்தைக்குத் தேவையான போஷாக்கிற்கு தாய்ப் பால் மட்டும் போதுமானது. எனினும், இக்காலத்தில் போதுமான தாய்ப்பால் கிடைக்காமல் போகும் போது போஷாக்குக் குறைவு ஏற்படுவதுடன், தாய்ப்பாலில் இருந்து மட்டுமே கிடைக்கக் கூடிய சில போஷாக்குகள் கிடைக்காமலே போகின்றது. தோட்டங்களில் பெரும்பாலான தாய்மார் குழந்தை பிறந்து ஒரு மாத காலத்தில் குழந்தைகளைக் காப்பகங்களில் ஒப்படைத்துவிட்டு வேலைக்குச் சென்றுவிடுவதால் குறிப்பிட்ட சில நேரங்களை விட ஏனைய நேரங்களில் குழந்தைக்கு வேறு உணவுகள் ஊட்டப்படுகின்றது. இவற்றை ஊட்டுவதன் மூலம் தாய்ப்பாலில் இருந்து கிடைக்கின்ற நோய் எதிர்ப்புச்சக்தியின் செறிவு குறைவடைகின்றது. இதனால் பக்றீரியா, வைரஸ் போன்றவை குழந்தைகளைத் தொற்றிக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தோட்டங்களில் கர்ப்பிணித் தாய்மாருக்கு என விஷேடமான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது. இத்தொகையானது பெரும்பாலும் வேறு தேவைகளுக்கே பயன்படுத்தப்படுகின்றது. அதேபோன்று அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற திரிபோஷாக்களும் சில தொண்டு நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற உதவிப் பொருட்களையும் இவர்கள் குறைந்த விலைக்கு விற்கப்படுவது ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏற்கனவே பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற இவர்களுக்கு தாங்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுடன் ஒப்பிடுகின்ற போது தமது போஷாக்குப் பிரச்சினை முக்கியமற்றதாகத் தோன்றக்கூடும். ஆனால், பிரசவ காலத்தில் தம்மைப் பராமரிப்பதில் கவனம் செலுத்தாது விட்டால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு விடும் என்பதை ஒவ்வொரு தாய்மாரும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறான காரணங்களைப் பட்டியல் இட்டுக் கூறுகின்ற போதும், எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணங்களாக அமைவது நிர்வாகச் சீர்கேடுகளும், பொருளாதாரப் பிரச்சினைகளுமேயாகும். இவை இரண்டுமே நடைமுறையில் உள்ள கூட்டு ஒப்பந்தம் என்கின்ற வரையறைக்குள் சம்பந்தப்பட்டு இருக்கின்றது. எனவே மலையக மக்கள் முகங்கொடுத்து வருகின்ற எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் கூட்டு ஒப்பந்தத்தினை விமர்சிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனினும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்கின்ற பக்குவமோ அல்லது விமர்சனங்களைச் சுய விமர்சனத்திற்கு உள்ளாக்குகின்ற அக்கறையோ சம்பந்தப்பட்ட எவருக்கும் இல்லாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதே. அதற்காக அதையே கூறிக் கொண்டிருப்பதனால் எதுவும் நடந்து விடப் போவதில்லை.

**ராஜா**

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உள்ள ஒரே ஒரு வழி, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து அடிப்படைத் தேவைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்வதேயாகும். அவற்றிற்கான செலவீனங்களை வேண்டுமானால் அரசு தோட்ட நிர்வாகங்களிடம் இருந்து எந்த வகையிலேனும் அறவிட்டுக் கொள்ளலாம். ஆனால் சேவைகள் அனைத்தும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். பிரதிச் சுகாதார அமைச்சரின் முயற்சியினால் தோட்ட வைத்தியசாலைகள் அனைத்தையும் பொறுப்பேற்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியதே. அவை துரிதப்படுத்தப்படுவதோடு ஏனைய துறைகளும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு சீர் செய்வதன் மூலமே போஷாக்குப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.



மாலைகள் புரண்டசை யும் - பெரு
வரையெனத் திரண்டவன் தோளுடை யார்,
வேலையும் வாளினை யும் - நெடு
வில்லையுந் தண்டையும் விரும்பிடுவார்.

- சுப்பிரமணிய பாரதியார்



# நாட்டுக்கு வந்த காட்டுப் பறவைகள்

**குளத்தின்** மறுகால் பகுதியில் பூலான் செடிகள் சிறுசிறு குன்றுகளாய் மண்டிக் கிடந்தன.

நீரின் செழுமையும், புழு, பூச்சிகள் என்று உணவுகளும் நிறைந்த அந்தப் பகுதியில் சில காட்டுப் பறவைகள் வந்து கூடு கட்டி முட்டையிட்டன. மேல்பகுதியில் கறுப்பாகவும், கீழ்ப்பகுதியில் வெள்ளையாகவும் அந்தக் காட்டுக்கோழிகள் அழகாக இருந்தன.

அடைகாக்கும்போது தாய்க்கோழி 'கொக்... கொக்' என்று சத்தமிட்டுக் கொண்டே இருந்தது. அதைக் கண்ட ஆண்பறவை, ''இப்படி எல்லாம் சத்தம் போடாதே... இது காடல்ல, நாடு. நமது பாதுகாப்புக்கே இந்தச் சத்தம் உலை வைத்துவிடும். நாம் இங்கு வசிப்பதே மனிதர்களுக்குத் தெரியக் கூடாது. மீறித் தெரிந்தால் நம் கதி அதோகதிதான். வேட்டைக்காரர்கள், 'காட்டுக் கோழி நன்றாக இருக்கும்' என்றபடி நம்மை வேட்டையாட வந்துவிடுவார்கள். நமது முட்டைகளைக் கூட விட்டுவைக்க மாட்டார்கள். பஞ்சம் பிழைக்க வந்த நமது இனமே அழிந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை... எனவே ஜாக்கிரதை'' என்றது.

அதைக் கேட்ட தாய்ப் பறவை மறுபேச்சின்றி தன் வாயை மூடிக் கொண்டது.

அங்கு துவைக்க, குளிக்க, மீன் பிடிக்க, ஆடு மேய்க்க என வந்த எந்த மனிதர் கண்ணிலும் தென்பட்டுவிடாமல்



அந்தக் காட்டுக்கோழிகள் கவனமாக இருந்து வந்தன.

ஒன்றைப் பெற வேண்டும் என்றால் ஒன்றை இழந்துதானே ஆக வேண்டும்? உணவும், நீரும் சிரமமின்றிப் பெற அவை தமது சுதந்திரத்தை அடகு வைத்தன.

முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரித்து வெளியே வந்தன. சில மாதங்கள் சென்றதும் தாய்க்கோழி அவற்றை மாலை வேளையில் இரை தேட வெளியே அழைத்து சென்று விடிவதற்குள் தமது கூட்டுக்கு அழைத்து வந்தது.

''ச்சீ... இதென்ன பிழைப்பு? நம் இஷ்டம்போல் இங்கு வாழ முடியாதா?'' என்று குஞ்சுகள் குறைபட்டுக் கொண்டன.

அப்போது மக்கள் தங்களைப் பார்த்துவிட்டால் என்ன ஆபத்து நேரும் என்பதைத் தாய்க்கோழி அவற்றுக்கு எடுத்துக் கூறியது.

அதைக் கேட்ட குஞ்சுகள், ''நாம் புழு, பூச்சிகளோடு நமது உணவை முடித்துக்கொள்கிறோம். ஆனால் இந்த மனிதர்கள் ஏன்தான் தானியங்களையும் சாப்பிட்டுவிட்டு நம்மையும் சாப்பிடுகிறார்களோ?'' என்று அலுத்துக் கொண்டன.

பிறகு சட்டென்று அவை, ''பக்கத்து கரை மேல் பாம்பு ஒன்று வசிக்கிறதே? அதை இங்கே வரவழைத்துக் கொண்டால் நம்மைப் பிடிக்க வரும்

## பாப்பா முரசு சிறுகதை

மனிதர்கள் அதைக் கண்டு ஓடி விடுவார்களே? பின்னர் நம் பக்கமே வரமாட்டார்களே?'' என்றன.

அதைக் கேட்டுப் பதறிய காட்டுக்கோழி, ''அட அசட்டுக் குஞ்சுகளே... மனிதர்கள் நமது வெளிப்பகைவர்கள் என்றால், பாம்புகள் நமக்கிருக்கும் உள்பகை. நமக்குப் பாம்பும், மனிதரும் ஒன்றுதான். புரிகிறதா?''

''ஒரு பகைவரிடமிருந்து தப்பிக்க இன்னொரு பகையாளியை நாமாக விலை கொடுத்து வாங்கிக்கொள்ளக் கூடாது. பேசாமல் என் சொல்பேச்சைக் கேளுங்கள். ஆள் நடமாட்டம் இல்லாத சமயங்களில் வெளியே சென்று வாருங்கள்'' என்றது.

குஞ்சுகளும் சந்தோஷமாய், நிம்மதியாய் தலை அசைத்தன.

# ஆத்திசூடி

## உள்ளம் உடைமை உடைமை

மன உறுதியுடைமையே உண்மையான செல்வமாகும். உறுதிப்பாடு எனும் பண்பைக் குறிக்கும் ஆகுபெயராய் உள்ளம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

-திருவள்ளுவர்

# பாப்பா பாட்டு

## சின்னப் பாப்பா....

சின்னப் பாப்பா சின்னப் பாப்பா
நான் பாட்டுப் பாடுறேன்
செவியைச் சாய்த்து சற்றே
இதனைக் கேட்டுப் பாருங்கள்.

பாதமிரண்டில் சலங்கை கட்டிப்
பரதமும் ஆடி
பழந்தமிழர் இனிய இசையில்
பாடலும் பாடி
ஓடிவந்தேன் ஒரு நிமிடம் நின்று
கேளுங்கள்
ஒரு கருத்தைச் செவியிற் சற்றே
வாங்கிச் செல்லுங்கள்.

சின்னப் பாப்பா சின்னப் பாப்பா
நான் பாட்டுப் பாடுறேன்
செவியைச் சாய்த்து சற்றே
இதனைக் கேட்டுப் பாருங்கள்

வண்ணத்தமிழ் மொழியை
நாங்கள் வளர்த்திட வேண்டும்
தங்கத்தமிழ் தரணி எங்கும்
தளிர்த்திடவேண்டும்
தமிழ்ச்செடிக்கு வெந்நீரை
பாய்ச்சிட வேண்டாம்
தமிழர் நீங்கள் தமிழைப்பேச
கூசிட வேண்டாம்.

சின்னப் பாப்பா சின்னப் பாப்பா
நான் பாட்டுப் பாடுறேன்
செவியைச் சாய்த்து சற்றே
இதனைக் கேட்டு பாருங்கள்.

பல மொழிகள் நீங்கள் இன்று
பேசி வந்தாலும்
பண்புவகை பல விதமாய்
பயின்று வந்தாலும்
ஓரினம் நாம் உறவினர் நாம்
என்று பேசவே
தமிழமுதைத் தினமும் நாங்கள்
பருகிடவேண்டும்.

# தெரிந்து கொள்ளுங்கள்

## ''கார்ஸ்ட்''

**சுலோவேனியாவின்** கிராஸ் பகுதியில் காணப்படும் ஒரு வகை நிலப்பகுதி ''கார்ஸ்ட்'' ஆகும். இது சுண்ணாம்புக் கற்களால் ஆன பீடபூமிப் பகுதியாகும். கரையக் கூடிய சுண்ணாம்புக் கற்கள் மீது ''அமில மழை'' பொழிந்து மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அதாவது தாழ்வான பகுதிகள், ஆழமான குழிகள், பூமிக்கும் மறையும் ஓடைகள், நிலத்தடி நீரோட்டங்கள் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன. இந்தப் பகுதியில் ஓடும் அமிலத்தன்மை வாய்ந்த தண்ணீர், சுண்ணாம்புப் பாறைகளைக் கரைத்து எண்ணற்ற நிலத்தடிக் குகைகளையும் உருவாக்குகிறது.




இந்தப் பகுதி நிலம் விவசாயத்துக்கு ஏற்ற வகையில் வளமானது என்றபோதும் இங்கு வசிப்பது கடினமானது. காரணம் இங்கு மழைநீர் தேங்கி நிற்காமல் நிலத்துக்குள் ஓடிவிடும். நிலத்தடி நீரும்கூட அடிக்கடி மாசுபடுகிறது. தவிர, நிலத்தடிக் குகைகள் திடீரென இடிந்து விழக்கூடும் என்பதால் மனிதர்களை, கால்நடைகளை விழுங்கிவிடும்.



## ஒலியின் வேகத்தை விட...

**ஒலியின்** வேகத்தை முதலில் முறியடித்தது எது? என்ற கேள்விக்கு ''ஜெட்'' விமானம் என்று விடையளித்தால் தவறு. சுமார் 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மற்றொரு பொருள் அதனைச் சாதித்திருக்கிறது. சீனர்கள் உபயோகித்த சாட்டைதான் அது! அந்தச் சாட்டையைச் சுழற்றியபோது... அதன் நுனியிலிருந்து உண்டான ''கிராக்'' என்ற சத்தம் வழக்கமான ஒலியை விட வேகமாகக் காதுகளை வந்தடைந்தது. காற்றில் ஒலியின் வேகம் மணிக்கு 1225 கிலோமீற்றர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.04.2009
**வர்ணம் தீட்டும் போட்டி இல.789**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 787

**பரிசுக்குரியவர்:** ரொட்னி பீச், 7, 2ஆம் மாடி, 2N, சொய்சா தொடர் மாடி, மொரட்டுவ.

**பாராட்டுக்குரியவர்கள்**

1. யோ. சியாசினி, முதலியார் குளம், செட்டிக்குளம், வவுனியா.
2. A. பர்ஹத் பாஷா, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை.
3. உம்.உஸ்.எவ். நஸ்ஹா, எஸ்.எம்.ரி. ஹாஜியார் வீதி, ஓட்டமாவடி-01.
4. A. G. N.நெந்மினி, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
5. ஏ.எம். அல். அம்ஸர், 282, ஓடாவியார் வீதி,ஏறாவூர்-02.
6. வி.விநோஜினி, மைத்திரி போதிராஜா மாவத்தை, கொழும்பு-12.
7. செல்வன் வை. விதுசன், புதுக்குடியேற்றம், நொச்சிமுனை, மட்டக்களப்பு
8. ஆர்.டினோ ராகல், பனிச்சையடி சத்துருக் கொண்டான், மட்டக்களப்பு.

# துணுக்குகள்

1. கண்டம் - ஆசியா
2. தீபகற்பம் - அரேபியா
3. சமுத்திரம் - பசுபிக்
4. தீவு - கிறீன்லாந்து
5. மலை - இமயமலை
6. மலைத்தொடர் - அன்டீஸ்
7. மலைச்சிகரம் - எவரெஸ்ட்
8. நதி - அமேசன்
9. நீளமான நதி - நைல்நதி
10. பாலைவனம் - சகாரா
11. ஏரி - கஸ்பியன் கடல்
12. ஆழமான ஏரி - பைகால்
13. நகரம் - லண்டன்
14. அணை - போல்டா
15. சமவெளி - ரஷ்ய சமவெளி
16. கட்டடம் - எம்பயர்
17. விலங்கு - திமிங்கிலம்
18. பூக்கள் - ராம்லீசியா
19. பூங்கா - உப்பீல்லோ
20. நீர்வீழ்ச்சி - கால்டோர் ஏஞ்சலின்

க.ராதா,
முருகன் கோவில், பேசாலை.

# விடுகதை

1. சிவப்பு மொச்சைக் கோட்டை பகட்டும் பட்டுச் சட்டை; அது என்ன?
2. சின்னச் சின்னக் கத்தி, சிங்காரக் கத்தி. துரைமாரைக் கண்டாலும் விலகாத கத்தி; அது என்ன?
3. சீப்புக்குப் படிவான் இவன், சீரான தோற்றத்துக்கு உதவுவான் அவன் யார்?
4. சுற்றிலும் கல் கட்டு; நடுவிலே வெள்ளிக்கட்டு; இது என்ன?
5. சுறுக்கென்று ஒரு முள்; பொறுக்க முடியாது அதன் வலியை. அது என்ன?
6. சுமையும் சுமந்து தொங்கும்; அடியும் திறந்திருக்கும். அது என்ன?
7. சுட்ட குருவி ஊருக்குப் போகிறது. இது என்ன?
8. சுட்ட நெத்தலி நட்டமாய் நிற்குது. இது என்ன?
9. சுத்திச் சூரமுள்ளு; நடுப்புற நல்ல வெல்லம்; இது என்ன?
10. சுட்டவன் சந்தைக்குப் போறான்; அது என்ன?

**விடுகதை விடைகள்**
1. பட்டுப்பூச்சி
2. முள்
3. தலைமுடி
4. தேங்காய்
5. தேன் கொட்டுதல்
6. உறி
7. பலகாரம்
8. ஓட்டை உருவம்
9. பலாப்பழம்
10. சட்டி, பானை.




# 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாத்தாள் -II (கடந்த வாரத் தொடர்ச்சி)

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**கீழ்வரும் பாடலை வாசித்து இல. 01 முதல் 07 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**


பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலை கைதட்டிக்
குதூகலிக்கப் போகுது.
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்.

01. கவிஞர் நிலவை எதற்கு உவமித்துக் கூறுகின்றார்? (1) ..................
02. கோலக்கடல் அலை கைதட்டிக் குதூகலிப்பது ஏன்? (2) ..................
03. "மங்கை" என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார்? (3) ..................

மேலேயுள்ள பாடலில் குறிப்பிடப்படும்


04. வினைச்சொல் ஒன்றை எழுதுக. (4) ..................
05. பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. (5) ..................
06. அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. (6) ..................
07. இப்பாடல் நாளொன்றின் எப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகின்றது? (7) ..................


**கீழ்வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்படுபவைக்குரிய ஆங்கிலப் பெயரை (ஆங்கில எழுத்துக்களை உபயோகித்து) படத்தின் கீழே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

08.

..................

09.

..................

10.

..................

11.

..................

**கீழே தரப்பட்டுள்ள பாடல்களை வாசித்து இல. 12 முதல் 23 வரையிலான வினாக்களுக்கு விடைகளை எழுதுக.**

சின்னஞ் சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக்களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்.

ஓடி வருகையிலே - கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப் போய்
ஆவி தழுவுதடி.

**கீழ்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒத்த கருத்துடைய வேறு ஒரு சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

12. செல்வம் .................. 13. கலி ..................
14. உலகம் .................. 15. உள்ளம் ..................

**கீழ்வரும் ஒவ்வொரு சொல்லினதும் எதிர்ச்சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16. சின்னஞ் சிறிய .................. 17. ஏற்றம் ..................
18. குளிர் .................. 19. வந்தாய் ..................

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை பாடல் வரிகளிலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

20. Small .................. 21. Parrot ..................
22. World .................. 23. Dancing ..................

**பின்வரும் அட்டவணையின் முதலாவது நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் உட்கொள்வதின் மூலமாக அதிகமாகப் பெறக்கூடிய ஒரு உணவுச் சத்து எதுவென்பதை உரிய கூட்டிலே "சரி" அடையாளத்தை இட்டுக் குறிப்பிடுக. (உமது வசதிக்காக முதலாவது வரிசை பூரணப்படுத்தப்பட்டுள்ளது.)**

| | உணவுக்காக | புரதம் | மாப்பொருள் | கொழுப்பு | விற்றமின் | கனிப்பொருள் |
|---|---|---|---|---|---|---|
| | பாலமா | ✓ | | | | |
| 24. | மீன் வகை | | | | | |
| 25. | அவரைப் பயிர் | | | | | |
| 26. | காய்கறி | | | | | |
| 27. | புதிய பழங்கள் | | | | | |
| 28. | கிழங்குகள் | | | | | |
| 29. | வல்லாரை | | | | | |
| 30. | பசளிக்கீரை | | | | | |

**கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் ( ✓ ) என்ற அடையாளத்தையும், பிழையாயின் (X) என்ற அடையாளத்தையும் அக்கூற்றின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் இடுக.**

31. விளையாட்டுத் திடலில் சிறிய அளவிலான வளையத்திலிருந்து படிப்படியாக பெரிய அளவிலான வளையம் வரை பல வளையங்களின் ஊடாக நுழைந்து வெளியே வருவதற்குப் பயிற்சியைப் பெறவேண்டும். (31) ..................

32. "தீராத விளையாட்டுப் பிள்ளை" என்னும் சிறுவர் பாடலானது நான்கு எண்ணிக்கை தாளத்திற்கு உதாரணமாகும். (32) ..................

33. உடற்பயிற்சிக்காக மிகவும் பொருத்தமானது பகல் 11.00 முதல் 11.30 வரையுள்ள காலமாகும். (33) ..................

34. பாய்தல், விழுதல், படுத்தல் ஆகிய செயற்பாடுகள் மூன்றினாலும் ஒரே அளவான திறன்கள் விருத்தியே நடைபெறுகிறது. (34) ..................

35. ஆடையொன்றின் கிழிந்த பகுதியைத் தைப்பதற்கு குறுக்குத்தையலைப் பயன்படுத்தலாம். (35) ..................

36. நின்ற இடத்திலேயே ஓடுதல் பயிற்சியில் ஈடுபடுவதால், ஓடும்போது உடல் வடிவத்தைப் பேணுகின்ற பழக்கத்தைப் பெற முடியும். (36) ..................

37. கிளியொன்றின் மாதிரி உருவத்தைச் செய்வதற்கு மிகவும் பொருத்தமான மூலப் பொருளாக குருத்தோலையைப் பயன்படுத்த முடியும். (37) ..................

38. "செம்பு நடனம்" கிராமிய நடனங்களுக்கு ஓர் உதாரணமாகும். (38) ..................

39. மனதில் தோன்றும் காட்சி ஒன்றைக் கற்பனை செய்து சித்திரத்தினூடாக முன் வைத்தல் "கற்பனைச் சித்திரம் ஆக்கம்" எனப்படும். (39) ..................

40. முண்டத்தை நிமிர்த்தி வைத்து கைவிரல்களை மடித்து தொடைகளிற் தொடுமாறு வைத்து கால்களை அருகருகே வைத்துச் சமநிலையாக நிற்றலை இலகுவாய் நிற்றல் என்று அழைப்பர். (40) ..................

**கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் முதலாவது நிரலில் குறிப்பிடப்படும் கருவி / பொருள் / முறை எந்த ஆக்கத் தொழிற்பாட்டுக்கு (விடயத்துக்கு) உரியது என்பதைப் பொருத்தமான நிரலில் ( ✓ ) அடையாளத்தை குறித்துக் காட்டுக. (உமது வசதிக்காக முதலாவது வரிசை பூரணப்படுத்தப்பட்டுள்ளது)**

| | கருவி / பொருள் முறை | சித்திரம் | நடனம் | சங்கீதம் | அலங்காரம் | தையல்முறை |
|---|---|---|---|---|---|---|
| | அகலக்கோடுகள் | ✓ | | | | |
| 41. | மேளம் | | | | | |
| 42. | தேங்காய்த்துருவல் | | | | | |
| 43. | சித்தார் | | | | | |
| 44. | வண்ணத் துணித் துண்டுகள் | | | | | |
| 45. | குருத்தோலை | | | | | |
| 46. | உடுக்கு | | | | | |
| 47. | முறிகோடுகள் | | | | | |

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

### வினாத்தாள் II இற்கான விடைகள்

01. பால் /பாலைப்போல / பாலுக்கு
02. நிலவு வானில் வரப் போவதால் குதூகலித்தல்
03. இரவு (கங்குல் மங்கை)
04. போகுது, போகிறாள், பார்க்க, மலர்ந்து, தோன்ற, கண்சிமிட்டி, கைதட்டி, நின்று, குதூகலிக்க, வர
05. பால், நிலவு, வான், கடல், அலை, கை, கண், மாலை, மங்கை
06. கங்குல், நீல
07. மாலைப்பொழுது, மாலை வேளை, மாலை
08. Comb / COMB
09. Elephant / ELEPHANT
10. Eyes / EYES
11. Five / FIVE
12. நிதி, திரு, பணம், திரவியம்
13. துன்பம், அல்லல், துயர், இடுக்கண்
14. பூமி, வையகம், தரணி, அவனி, புவனம், பார், புவி.
15. மனம், சிந்தை, நெஞ்சம், அகம்
16. பென்னம் பெரிய
17. இறக்கம்
18. சூடு
19. போனாய்
20. சின்னஞ் சிறு
21. கிளி
22. உலகம்
23. ஆடித்திரிதல்
24. புரதம் / கனிப்பொருள்
25. புரதம்
26. விற்றமின்
27. விற்றமின்
28. மாப்பொருள்
29. கனிப்பொருள்
30. கனிப்பொருள்
31. X
32. ✓
33. X
34. X
35. ✓
36. ✓
37. ✓
38. ✓
39. ✓
40. X
41. நடனம்
42. அலங்காரம்
43. சங்கீதம்
44. சித்திரம்
45. அலங்காரம்
46. நடனம்
47. சித்திரம்


ஜீவன் - மேக்னா
கிருஷ்ணலீலை

## மினிசினி

- **எதிர்வரும்** ஜுன் 7ஆம் திகதி தன் காதல் நாயகி ஆர்த்தியைத் திருமணம் செய்து கொள்ள இருக்கிறார் ஜெயம் ரவி.

- **தனக்கும்,** தனது இசைக்குழுவில் வாத்தியக் கலைஞராக இருக்கும் ஜெரிக்கும் இடையிலான நட்பு தூய்மையான கலை நோக்கம் கொண்டது என்கிறார் சுருதி கமலஹாசன்.

- **தோரணைப்** படத்தில் இயக்குநருக்குப் பதிலாக எல்லா வேலைளையும் இழுத்துப் போட்டு செய்து கொண்டிருக்கிறார் விஷால்.

- **பட்டாளம்** படம் வெளியானதும் நதியா காய்ச்சல் மீண்டும் தமிழ் நாட்டை ஆட்டிப் படைக்கும் என சத்தியம் செய்கிறார் பட்டாளம் இயக்குநர் றோகன்.

- **பிரபுதேவாவை** நாயகனாக வைத்து தங்கர்பச்சன் இயக்கவுள்ள புதிய படத்தின் பெயர் களவாடிய பூக்கள்.

- **கந்தசாமி** பாடல் வெளியீட்டு விழாவில் ஐம்பது இத்தாலிய அழகிகளின் கண் கவர் நடன நிகழ்ச்சிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாம்.


சத்யா - கார்த்திகா
பாலைவனச் சோலை

## திருமணத்தைத் தள்ளிப் போட்டுவிட்டோம்! -கரீனா

**பாலிவுட்டின்** முன்னணி நடிகை கரீனா கபூரும், நடிகர் சாயிஃப் அலிகானும் காதலித்து வருகிறார்கள். விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் பலமான பேச்சு அடிபட்டது. இருவரும் சாயிஃப் தந்தை பட்டோடி முன்பாக மோதிரமும் மாற்றிக் கொண்டார்கள். ஆனால், திடீரென்று திருமணத்தைத் தள்ளிப் போட்டுவிட்டதாக அறிவித்துள்ளார் கரீனா கபூர். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது: நானும் சாயிஃபும் இப்போது திருமணத்துக்கு அவசரப் படவில்லை. திருமணம் செய்து கொண்டு நடிப்பு வாழ்க்கையின் அற்புதமான தருணங்களை இழக்க நாங்கள் விரும்பவில்லை. கேரியர்தான் முக்கியம். குறைந்தபட்சம் இன்னும் இரு ஆண்டுகளாவது நாங்கள் திருமணம் பற்றிச் சிந்திக்கும் மனநிலையில் இல்லை. திருமணம் நடக்காவிட்டாலும், சாயிஃபின் தொழில் முன்னேற்றத்தில் நானும் ஒரு அங்கமாக இருப்பேன் என்கிறார்.

## ரஜினியின் தாராளம்!

**எலக்ஷன்** டைம் என்பதால் ஆளாளுக்கு "பிரசாரத்துக்கு வா" என்று ரஜினியை அழைக்கிறார்களாம். ஆந்திரா பக்கம் போய் சிரஞ்சீவிக்காக "வாய்ஸ்" கொடுக்கலாமா என்று யோசித்து வருவதாகக் கொளுத்திப் போடுகிறது கோடம்பாக்கம்! எனினும் அமைதியாக இருக்கிறார் ரஜினி. வாய்ஸ் மேட்டரில் எச்சரிக்கையாக இருந்தாலும் வாய்க்கு ருசியாக மெல்லுகிற விஷயத்தில் இப்போதெல்லாம் சிக்கனம் பிடிப்பதில்லையாம் சூப்பர் ஸ்டார். கதைப்படியே கொஞ்சம் சதை போட வேண்டியிருந்ததால், இறைச்சி விஷயத்தில் குறைச்சி சாப்பிட வேண்டாம் என்று முன்பே ஷங்கர் கூறிவிட்டாராம்!


ஆர்யா - த்ரிஷா
சர்வம்

## விஜய்யின் கண்டிஷன்

**வில்லு** படத்தைத் தொடர்ந்து இப்போதெல்லாம் தன்னிடம் கதை சொல்ல வரும் இயக்குநர்களிடம் விஜய் போடும் முதல் கண்டிஷன், கதையிலே நான் செத்துப் போவது போல சீன் வரக்கூடாது என்பதுதானாம். காரணம், பெரிய ஹீரோக்கள் யாரும் செத்துப் போவது போல நடிப்பதை விரும்புவதே இல்லை என்பது ஒன்று. அப்படி எடுத்தாலும், ரசிகர்கள் அவ[illegible] விரும்பாமல் புறக்கணிப்பார்கள் என்பது காலம் உணர்த்திய உண்மை. இப்படி ஒரு கண்டிஷன் போடுவதற்கு இது மட்டும் காரணமில்லையாம். விஜய்யின் அம்மா திருமதி. ஷோபா விஜய் இறந்து போவது போல் நடிப்பதை விரும்பவில்லையாம்.

சி
னி
வி
சி

ஜா...
அதாங்...
பயமாம். அ...
சினிமாவே
போய்விட்ட...
வயதிலேயே...
பண்ணிவிட்ட...
வாய்ப்புகள்...
கிளாமராக
சினிமாவே ...
அந்த சமய...
கதையைக் ...
ஆட்டி விட்ட...
நிஜ கேரக்...
கதையின் ...
ஜாலியான ...
என்கிறார் ...

## இம்ப்ரஸான விஜயகாந்த்

**நட்புக்கு** விஜயகாந்த் அளித்த மரியாதைதான் எங்கள் ஆசான். தயாரிப்பாளர் தங்கராஜ் தயாரித்த படங்களால் பெருத்த நஷ்டம். அவருக்கு உதவும் வகையில் இருபது நாட்கள் கால்ஷீட் கொடுக்க முன்வந்தார் விஜயகாந்த். படத்தை கலைமணி இயக்கியிருக்கிறார். நடிக்க ஆரம்பித்த பிறகு கலைமணியின் கதையில் இம்ப்ரஸான விஜயகாந்த் தனது இருபது நாள் கால்ஷீட்டை மேலும் மூன்று வாரங்களுக்கு நீடித்துக் கொண்டார். இதில் விஜயகாந்துக்கு வங்கி அதிகாரி வேடம். வங்கியில் மக்களுக்காக ஒதுக்கப்படும் பணம் கையாடல் செய்யப்படுவதை கண்டுபிடிக்கிறார் விஜயகாந்த். வில்லனுக்கு எதிரான அத்தனை ஆவணங்களையும் சேகரிக்கிறார். ஒருகட்டத்தில் வில்லனால் ஆவணங்கள் அழிக்கப்படுவதுடன், விஜயகாந்த் மீதே பழி போடப்படுகிறது. அதிலிருந்து விஜயகாந்த் எப்படி தப்பித்து, வில்லனுக்கு தண்டனை அளிக்கிறார் என்பதை சுவாரஸியமாக சொல்லியிருக்கிறார்களாம். விஜயகாந்துக்கு ஜோடியாக அவரது அரசாங்கம் படத்தில் அறிமுகமான ஜெரில் பிரிண்டோ நடித்துள்ளார். படத்தில் இவருக்கு அரசியல்வாதி வேடம். படத்தில் விக்ராந்த், அக்சயா ஜோடியும் உண்டு. இவர்களைத் தவிர சுஜாவும் நடித்துள்ளார். சபேஷ் முரளி இசையமைத்துள்ளனர். ஒளிப்பதிவு ஏ.வெங்கடேஷ்.


பாணா

அங்கம் -06

## ஒரு நடிகையின் கதை

**அடிக்கடி** சண்டை போட்டுக்கிற அளவிற்கு கூட இவர்கள் ஒரு தம்பதியைப் போல ஆகிவிட்டார்கள்! சில சமயம் தெலுங்கு ஷூட்டிங்கில் பிஸியாக இருந்தால் விரலின் போனை அட்டர்ன் செய்யமாட்டார் பட்டம்! உடனே "தே....யா" தெலுங்குகாரன் ஒனக்கு இனிக்கிறானா? என சண்டை போடுகிற அளவிற்கு பொஸஸிவ்னெஸ் ஆகிவிட்டார் விரல்! பதிலுக்கு "நீ எந்த சிறிக்கி கூட இருக்க?" என மெஸேஜ் அனுப்புவார் பட்டம்! ஆனால் இந்த சண்டையெல்லாம் பகலில் தான் இராத்திரியானால் கண்ணீர் கசிய பட்டத்திடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டு மன்மத விளையாட்டை விடிய விடிய நடத்துவார்! பட்டமும் விரலின் வித்தைக்கேற்ப ஆடு பொருளாய் ஆடுவார்! இவர்களின் காதல் மயக்கத்தால் பாதிக்கப்பட்ட "மின்னல்" நடிகை பலபேர் மத்தியில் விரலை வெளுத்துக் கட்டியது.... பட்டமும், வம்பும், பட்டப் பகலிலும் நடத்திய அட்டகாசங்கள் மின்னலான வசீகர நடிகையை எரிச்சல் படுத்தவில்லை! ஆனால் படப்பிடிப்பை நிறுத்திவிட்டு தனது கால் ஷீட்டை வீணடித்துவிட்டு தன்னை பல மணி நேரம் காக்க வைத்து விட்டு இவர்கள் அடித்த லூட்டி வசீகரத்தை எரிச்சல் படுத்தியது! எருமையாக இருந்தாலும் அதனுடைய பொறுமைக்கும் எல்லை உண்டே?! ஒரு நாள் காலை எட்டு மணிக்கெல்லாம் படப்பிடிப்பு! ஏகப்பட்ட ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுகளுடன் வசீகர நடிகை மேக் அப் போட்டு காத்திருந்தார்! ஆனால் 12 மணிக்குத்தான் ஸ்பாட்டுக்கு வந்தார் வம்பு! உள்ளுக்குள் குமைந்து கொண்டிருந்த வசீகரம் வம்பைப் பார்த்ததும் குமுற ஆரம்பித்துவிட்டார்! **(தொடரும்)**


பரத் - ...
தம்பிக்கு எந்த ...



சத்யா - கார்த்திகா
பாலைவனச் சோலை

## இரண்டு கோடி

**நான்** கடவுள் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதே, இந்தப் படம் வெளியானால் ஆர்யாவின் சம்பளம் உயரும் என விமர்சகர்கள் தொலைநோக்குடன் கூறியிருந்தனர். அதே போல தனது சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார் ஆர்யா. மதராசப்பட்டினம் படத்துக்கு இரண்டு கோடி ரூபாய் ஆர்யாவுக்கு சம்பளம் பேசப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. ஆர்யாவின் திடீர் சம்பள உயர்வால் தமிழ் தயாரிப்பாளர்கள் திகிலாகியிருப்பது உண்மைதான் என்றாலும் தெலுங்கு தேசத்தில் நோ ரியாக்சன். குணசேகர் அல்லு அர்ஜுனை வைத்து இயக்கும் படத்தில் நடிக்க ஆர்யாவிடம் கேட்டிருக்கிறார்கள். இங்கு போலவே இரண்டு விரலை காட்டியிருக்கிறார் ஆர்யா. ஒகே பதிலாக கிடைத்திருக்கிறது. மதராசப்பட்டினம் கால்ஷீட் ஒத்துழைத்தால் குணசேகரின் படத்தில் நடிப்பதாக வாக்களித்துள்ளார் ஆர்யா.




பரத் - தமன்னா
கண்டேன் காதலை

...ஷன்

தொடர்ந்து ...டம் கதை ...ரிடம் விஜய் ...தயிலே நான் ...வரக்கூடாது ...ஹீரோக்கள் ... நடிப்பதை ...ன்று. அப்படி ...கள் அவ... ...ர்கள் என்பது ...ர்மை. இப்படி ...வதற்கு இது ... விஜய்யின் ...பா விஜய் ... நடிப்பதை

## ஜாலியான அனுபவம்

**அதாங்க** சிவா மனசுல சக்தி நாயகி அனுயாவுக்கு கிளாமர் என்றால் பயமாம். அதனால்தான் ஆரம்பத்தில் வந்த கிளாமர் வாய்ப்புகளைப் பார்த்து சினிமாவே வேண்டாம் என்ற எண்ணத்தில் இருந்தாராம். இப்போ பயம் போய்விட்டதாம். மும்பையில் பிறந்து, புனேயில் படித்த அனுயாவுக்கு சின்ன வயதிலேயே சினிமா ஆசை இருந்ததாம். அப்பா, அம்மாவும் கூட ஓகே பண்ணிவிட்டனர். அவரது ஆசைப்படியே அவரைத் தேடி பட வாய்ப்புகள் வந்தன. ஆனால் எல்லாமே கிளாமராக இருந்ததால் வேண்டாம்ப்பா சினிமாவே என்ற எண்ணத்திற்கு வந்தாராம். அந்த சமயத்தில்தான் வந்தது எஸ்.எம்.எஸ். கதையைக் கேட்டதுமே சட்டென மண்டையை ஆட்டி விட்டாராம். காரணம், படத்தில் தனது நிஜ கேரக்டரைப் பிரதிபலிப்பது போலவே கதையின் கேரக்டரும் இருந்ததால்தானாம். படு ஜாலியான அனுபவமாக அந்தப் படம் அமைந்தது என்கிறார் அனுயா.

தற்போது ஹரிக்குமாருடன் மதுரை சம்பவம் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் அனுயா. நல்ல கதைதான் முக்கியம். அதற்காக கிளாமரே கூடாது என்றில்லை. தேவைப்பட்டால் கிளாமராகவும் நடிப்பேன் என்கிறார் தமிழ் சினிமாவின் நாடியை அதற்குள் சரியாக கணித்து விட்ட அனுயா.



சூர்யா - தமன்னா
அயன்

## பக்திப் பழங்கள்

**ஒட்டுமொத்த** ரசிகர்களையும் சுத்தவச்சு கிறங்கடிச்சாலும், ஏராளமான கேரள நடிகைகள் பக்தி பழங்களாகவே இருக்கிறார்கள். படப்பிடிப்புக்கு போகிற இடங்களில் எல்லாம், அங்கே உள்ள கோவில்களை பற்றி அறிந்து கொள்வதும், கட் என்று சொல்வதற்குள் ஒரு எட்டு கோவிலை பார்த்துவிட்டு வருவதுமாக அளவு கடந்த பக்தி இவர்களில் கிறிஸ்தவரான மீராஜாஸ்மினுக்கு இந்துக் கடவுள்கள் மீது பக்தி கொஞ்சமே அதிகம். தமிழ் நாட்டில் சுதந்திரமாக கோயில்களுக்கு வந்து போனாலும், சொந்த ஊரான கேரளாவில் சும்மாயிருப்பதில்லை சேட்டன்கள். ஒரு கிறிஸ்துவப் பெண் எப்படி இந்து கோவில்களுக்குள் நுழையலாம் என்று பிரச்சினைக்கு பத்தி கொளுத்தி வைக்கிறார்கள். விளைவு...? ஆ...ஊ... என்ற அச்சுறுத்தல்கள்! சமீபத்தில் தலிபரம்மா ராஜேஸ்வரி கோவிலுக்குப் போய் சாமி கும்பிவிட்டு திரும்பிய மீராவை வசமாக பிடித்துக் கொண்டார்கள் சேட்டன்கள். பெரும் கேள்விகளுக்குப் பிறகு, அந்த கோவிலுக்குப் பத்தாயிரம் ரூபாய் அபாரதம் செலுத்திவிட்டு வந்தாராம்.

## அமெரிக்காவில் ஒரு காதல்

**லேகா** ரத்னகுமார் புதிதாக தயாரித்து இயக்கவிருக்கும் படத்தின் 75 சதவீத போர்ஷன் அமெரிக்காவில்தான்! மீதியைக் குற்றாலத்தில் எடுக்க பிளான் பண்ணியிருக்கிறார்கள். "உன்னாலே உன்னாலே" மாதிரி அருமையான லவ் ஸ்டோரி! பேட்சுலர் பசங்களை எல்லாம், லேடீஸ் காலேஜ் வாசலில் நிக்க வைக்கிற மாதிரியான கதை" என்றார் லேகா ரத்னகுமார். ஹீரோ, ஹீரோயின் யாரு? எனக் கேட்டால் "இவ்வளவு சொல்லிட்டேன், அதை சொல்லமாட்டேனா? வெயிட் ப்ளீஸ்" என்றார்.

முகப்பில்:- ஷாம் - மல்லிகாகபூர்



## மீண்டும் பாலைவனச்சோலை!

**இருபத்தியேழு** வருடங்களுக்கு முன்னால் வந்த படம் பாலைவனச்சோலை. நாலைந்து இளைஞர்களும் ஒரு பெண்ணும் நாகரிகமாக பழக முடியும் என்பதை அற்புதமாக வெளிப்படுத்திய படம். இந்தப் படத்தை அப்படியே மறுபடியும் தமிழில் ரீமேக் செய்ய போகிறார்களாம். ராதாகிருஷ்ணன் தயாரிக்க, திரைக்கதை வசனம் எழுதி எஸ்.தயாளன் இயக்குகிறார். சுஹாசினி நடித்த வேடத்தில் கார்த்திகா நடிக்க, முக்கிய வேடத்தில் நடிக்கிறார் நிதின் சத்யா. முந்தைய பாலைவனச்சோலையில் அத்தனை பாடல்களையும் வைரமுத்துவே எழுதியிருந்தார். இப்போதும் அவரேதான் எழுதுகிறாராம். இரண்டு பாடல்களை அப்படியே எடுத்து பயன்படுத்தப் போகிறார்கள். மேகமே மேகமே... என்ற பாடலும், ஆளானாலும் ஆளு.... என்ற பாடலும்தான் அவை. இகே பாபி என்பவர் இந்த காலத்திற்கு ஏற்ப சில பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறாராம்.

## திரை விமர்சனம் - இன்னொருவன்

**குப்பை** பொறுக்குகிறவன் கோடீஸ்வரன் ஆகிற கதை. துணைக்கு விவேகானந்தரையும் அழைத்துக் கொள்வதால் லாஜிக்கை உரசி காயப்படுத்தாமல் கதை நகர்கிறது. ஆச்சர்யம் என்னவென்றால், சீரான வேகத்திலிருந்து சற்றும் சண்டித்தனம் செய்யாமல் நகர்கிற திரைக்கதை! புதுமுகம் ஆதித்யாவுக்குத் தனது அப்பா விபத்தில் இறந்து போன பேப்பர் மில்லை விலைக்கு வாங்கிவிட வேண்டும் என்பது இலட்சியம். ஆனால் பேப்பர் பொறுக்குகிறவனின் பேச்சை கிரேட் ஜோக்காக நினைத்து வாய் விட்டு சிரிக்கிறார்கள் நண்பர்கள். அவர்களின் சிரிப்பையே நம்பிக்கை ஆக நினைக்கும் ஹீரோ, இலட்சியத்தை எப்படி அடைகிறான் என்பதை சொல்கிறது இரண்டு மணி நேரப்படம். இடையிடையே காதல், கடத்தல், கரன்சி என்று அலட்டினாலும், சில காட்சிகள் தூக்கல்!

புதுமுகம் ஆதித்யாவுக்கு நடிப்பு கை வந்த கலையாக இருக்கிறது. வரவேற்கலாம் பார்க்குக்கு போய் ஆண்ட்டிகளை கரெக்ட் பண்ணி பணக்காரனாகத் துடிக்கும் இவர், திடீரென்று "ஆண்ட்டி" ஹீரோவாக ட்விஸ்ட் அடிப்பது திடுக்கிடும் திருப்பம். இவரது ஒரே சொற்பொழிவில் ஆன்ட்டியின் ஆசைகள் ஏமாற்றமாவது கடைந்தெடுத்த சினிமாத்தனம்! புதுமுகம் மனோஹராவுக்கு குழந்தை முகம். கொய்யாப்பழச் சிரிப்பு பாடல் காட்சிகளில் தாராளம். இவரை கடத்திக் கொண்டுபோய் சித்திரவதை செய்யும் போது அச்சச்சோ என்கிறார்கள் ரசிகர்கள்.

மொத்தப் படத்தையும் தூக்கி சுமக்கும் "கிரேன்" ஆகியிருக்கிறார் எம்.எஸ்.பாஸ்கர். அநாயசமாக நாக்கில் புரளும் சென்னை பாஷையும், அதற்கேற்றார் போல இவரது பேப்பர் கடையில் வேலை பார்க்கும் துணை சாத்தான்களும் தியேட்டரையே துவம்சம் பண்ணுகிறார்கள். 1000 கோடி ரூபாயை லவட்டிக் கொண்டு எஸ்கேப் ஆகும் மணிவண்ணன் கதைக்கு எந்த விதத்திலும் விறுவிறுப்பு சேர்க்கவில்லை. இதே ரகம்தான் வில்லன் தண்டபாணியும். இசை கைகொடுக்கவில்லை என்றாலும், காய்கறிகளை வரிசைப்படுத்தும் அந்தப் பாடலை எழுதிய கைகளுக்கு, அள்ளி அள்ளி கொடுக்கலாம். இன்னொருவனை கொடுத்த இயக்குநரை நம்பி இன்னொரு படத்தை கொடுக்கலாம்!



பரத் - ஷனாகான்
தம்பிக்கு எந்த ஊரு




## விரக்தியின் விளிம்பில்...

நிசப்தமான நிசிப் பொழுதினை
நீளமாக்கும் நினைவுகள்!

கடந்த கால வாழ்வுகளைக் கணநொடியும்
எண்ணாத பொழுதுகள்!

அணுவளவு ஆசைக்குக் கூட
மணிக்கணக்காய்
காத்திருந்த தவிப்புகள்...

எல்லையற்ற கனவுகள் சிதைந்து விட்ட
ஏக்கங்கள்...

ஆயிரம் ஏமாற்றங்களால்
இரணமான உள்ளம்
ஆதனம் தேடிய அலைச்சல்களின்
விரக்தி!

ஆனபோதும் எங்கோ ஒரு
ஓரத்தில் துளிர் விடும்
நம்பிக்கை...

ஏமாற்றங்கள் அத்தனையும்
நிறைவேறும் எனும் ஓர்
எதிர்பார்ப்பு...

**-செல்வி ரேகா ரவிச்சந்திரன்,**
**வயாவிளான்.**







## மானிடா புறப்படு!

மானிடா!
விரிந்தெழுகின்ற உன் - தேடல்களுக்கு
விரைவாக விடை தேடிப் புறப்படு.

புரட்டப்படாமல் உனக்காகக்
காத்திருக்கும் உன் வாழ்க்கைப் -
புத்தகத்தின்
பக்கங்களைப் புரட்ட விரைந்து கொண்டு
புறப்படு.

பாலைவனங்களை - சோலையாக்கி
பாரினில் தடம் பதிக்க
வானமதில் வண்ணமாய் - ஜொலித்திடும்
அந்த நட்சத்திரக் கூட்டத்தோடு
நடந்து கொண்டு கதைபேசும் - காலமதை
வெகு விரைவில் செய்திட
மானிடா புறப்படு.

சுட்டெரிக்கும் சூரியனையும்
சுற்றிக் கொண்டிருக்கும் கோள்களையும்
உயரத்தில் இருந்து கொண்டு
உன்னைப் பார்த்துச் சிரிக்கும்
சிகரங்களையும் நீ தொட்டுவிட
சீக்கிரமாய் புறப்படு மானிடா..

**-ஏ.எல்.மரீனா, கொழும்பு-05.**

## அமைதியே நீ அஸ்தமனமாவாயா?

அன்னை மடியில் தவழ்ந்து
அன்புப் போர்வையினுள் மகிழ்ந்து
"அ" படிக்க பள்ளிக் கூடத்தில் புகுந்து
அவனிதனில் தவிக்கும் குழந்தைக்கு
அமைதியே நீ அஸ்தமனமாவாயா?

பருவமதில் நண்பர் மத்தியிலே நிமிர்ந்து
பக்குவமாய் பல்கலைக்கழகம் சென்று
பறக்கும் பட்டாம் பூச்சிகளாய் வலம்
வரும்
பருவச் சிறார்களுக்கு அமைதியே நீ
அஸ்தமனமாவாயா?

வேலைக்கு விண்ணப்பித்த இளம்
மொட்டுகளாய்
வேதனையைச் சுமந்துவரும்
கருவண்டுகளாய்
வேர் விட்டு ஓங்கி நிற்கத் துடிக்கின்ற
சிட்டுகளுக்கு
வேலையைக் கூட்டிவர அமைதியே நீ
அஸ்தமனமாவாயா?

சாதி மத பேதமில்லை வேற்றுமைக்கு
இடமில்லை
சாந்தி ஒன்றைத் தேடிவரும் நங்கையர்க்கு
சார்ந்து வாழ்வதுவே நியதியாச்சோ?
சாதனைகள் பல சமைப்பதற்கு அமைதியே
நீ அஸ்தமனமாவாயா?

சீதனக் கொடுமைகளோ பல வழியில்
சீர் கெட்ட வாழ்வோ பல மங்கையர்க்கு
சீரி வாழ்வதற்கோ சமூகத்தில்
இடமில்லை - அவள்
சிறப்பான வாழ்விற்காய் அமைதியே நீ
அஸ்தமனமாவாயா?

உடன் பிறப்புக்களோ பல மைல்கட்கு
அப்பால்
உண்டியின்றி உறவுமின்றி உயிர்
பிழைக்க
உலகினிலே தமிழ்த் தாயை
வணங்கியதாலா இந்த நிலை
உறுதியாய் அவள் வாழ அமைதியே நீ
அஸ்தமனமாவாயா.

**-மதனரூபி பாரதிதாசன்,**
**அல்வாய் வடக்கு.**

## காதலி தந்து போன வலி



பனிப்புகையடர்ந்த...
ஒற்றையடிப் பாதையூடாகவே
என் முன்னால் காதலி
பவனி வருவாள்!
அவள் வருகைக்காகவே...
சிநேகிதப் பூக்களோடு - நான்
திருச்சபை கூடுவேன்!
அழகான அந்தத் தருணங்களில்...
காதல் பிச்சை கேட்டு
பார்வைச் சில்லறைகளையே
வாங்கிப் போனேன்!
தூரத்தில் அவள் - மறைந்து
போகையில் தான்..



வார்த்தைகள் என்னிடம்
வரிசையில் வந்து நிற்கும்!
பார்த்த பழக்க தோஷத்தில் - தினம்
ஒற்றையடிப் பாதை அருகே...
உட்கார்ந்திருப்பேன்!
ஒருநாள் - அந்தப்
பாதை வழியாகவே - வந்து
கொண்டிருந்தது
என் காதலியின்
கல்யாண ஊர்வலம்...!

**வி.முகிலன்,**
**நெடுந்தீவு-13.**



## இழப்பு!



**ஹொலிவுட்** உலகின் பிரபல நடிகைகளில் ஒருவரான நதோஷா ரிசேட்சன் என்பவர் மொனட் ரெம்பினாட் என்னும் ஓய்விடத்தில் பனிச்சறுக்கல் விளையாட்டில் கலந்து கொண்ட போது தவறுதலாக விழுந்ததில் தலையில் காயமடைந்தார். இதனால் மூளையில் இரத்தக் கட்டியேற்பட்டு மரணமடைந்துள்ளார்.

45 வயதான இவர் காயமடைந்தவுடன் நியூயோர்க் நகரிலிருந்து வைத்திய நிபுணர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. அவர்களின் அறிக்கையின்படி மூளையில் ஏற்பட்ட கட்டியினால் மூளையின் செயற்பாடுகள் கோமா நிலைக்குத் தள்ளப்பட்ட பின்னரே மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரின் சொந்த இடமான கிரீன்விச் பிராந்திய மக்களினால் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவரின் மரணச் சடங்கில் தாயாரான வனீஸா செட் கிரேவ், சகோதரி ரோல்ரி ரிசேட்ஸ்சன் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டனர். இவரின் இழப்பினால் கலங்கியுள்ள ஹொலிவுட் திரையுலகம் ஒருநாள் தமது அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி அஞ்சலி செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அறிமுகம்



**இலங்கையின்** சின்னத்திரையில் முன்னேறி வரும் நடிகை நிரோஷா. தனது கடும் முயற்சியினாலும் கடுமையான உழைப்பினாலும் இலங்கைத் தொலைக்காட்சி ரசிகர்கள் மத்தியில் தனி இடம்பிடித்துள்ளார். இதுவரை சின்னத்திரையில் மட்டுமே தனது திறமைகளை வெளிப்படுத்தி வந்த நிரோஷா, பெரிய திரையிலும் அறிமுகமாகத் தயாராகின்றார்.


சனத் குணதிலக்கவின் கன்னி முயற்சியில் உருவாகும் "எகமத் எக ரடேக" அதாவது "தனியொரு நாட்டில்" என்ற சிங்கள மொழிமூலத் திரைப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்துவரும் நிரோஷா, இப்படம் வெளிவந்ததுடன் மேலும் புகழின் உச்சிக்குச் செல்வார் என்றும், இப்படமானது அவருக்குத் திருப்புமுனையாக அமையுமென்றும் படத்தின் இயக்குநர் கூறுகின்றார். இப்படத்தில் நிரோஷாவுடன் பல முன்னணி சிங்களச் சினிமா நட்சத்திரங்களும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இணைவு



**பிரேஸில்** நாட்டைச் சேர்ந்த அழகி கிசேல் பண்டசன் அமெரிக்காவைச் சேர்ந்த காற்பந்து நட்சத்திரமான ட்ரோம் ப்ரேடியை கலிபோர்னியாவில் வைத்துத் திருமணம் செய்துகொண்டார். 28 வயதான கிசேல் மஞ்சள் வெள்ளை நிற ஆடையில் மணமகளாகத் தோன்றிய போது மணமகளைப் போன்றே அலங்கரிக்கப்பட்ட அவரின் செல்லப் பிராணிகளான மூன்று நாய்களும் அவரை மணமேடைக்கு அழைத்து வந்தன. ஏற்கனவே பிரஷ்ட்ட் மொய்னாகான் என்பவரைக் காதலித்து வந்த ப்ரோடி, கிசேல் பண்டசனுடனும் காதல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இருந்தாலும் மொய்நாகானுக்குத் தற்போது பிறந்திருக்கும் ஆண் குழந்தைக்குத் தானே தந்தையென்ற ஸ்தானத்தை வழங்கியிருக்கும் ப்ரோடி, சிறிய கால இடைவெளிக்குள் கிசேலையும் மணந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பஸ் நடத்துநர் சூப்பர் ஸ்டாரானது எப்படி !




## சிவாஜிராவ்/ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு:

**படத்தில்** வரும் "நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான் பேரு விளங்க இங்கே வாழனும்" என்ற பாடல் திருமண வீடுகளில் நிரந்தரமாகிவிட்டது. புவனா ஒரு கேள்விக்குறி படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த சுமித்ரா, இந்தப் படத்தில் ரஜினிக்கு அம்மாவாக நடித்திருந்தார்.

1990இல் பொங்கலுக்கு வெளிவந்த இந்தப் படம், 25 வாரங்கள் ஓடி, வெள்ளி விழா கொண்டாடியது.

### மாப்பிள்ளை

ரஜினியின் மற்றொரு வெற்றிப்படம் "மாப்பிள்ளை." தெலுங்குப்படம் ஒன்றைத் தழுவி, வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுத, ராஜசேகர் இயக்கினார்.

திமிர்த்தனமாக நடந்து கொள்ளும் ஒரு மாமியாரை, மருமகன் அடக்கி புத்தி புகட்டிய கதை. (கிட்டத்தட்ட "பணமா, பாசமா?" மாதிரி)

ராஜராஜேஸ்வரி என்ற பணக்கார மாமியாராக, ஸ்ரீவித்யா முதன் முதலாக "வில்லி" முகம் காட்டிய படம்.

### கதை

ராஜராஜேஸ்வரிக்கு 3 மகன்கள். ஒரே மகள். மகள் அமலா வெளியூரில் தங்கி, மருத்துவப் படிப்பைத் தொடர்கிறாள் அந்த ஊரில் வேலையில் இருக்கும் ரஜினிக்கும், அமலாவுக்கும் காதல் ஏற்படுகிறது. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ரஜினியின் தங்கை, பணக்கார ராஜராஜேஸ்வரியின் மகன் ராஜா மீது காதலாகிறாள்.

"காதல்" எல்லை மீறியதில் தவறு நிகழ்ந்துவிட, நிச்சயம் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சத்தியம் செய்கிறான், ராஜா. சொன்னபடி தனது தாயார் ராஜராஜேஸ்வரியிடம் காதலியை அழைத்துப் போகிறான்.

வெகுண்டெழுந்த ராஜராஜேஸ்வரி, மகனின் காதலியையும், அவள் தாயாரையும் தனது செல்வாக்கால் பொலிஸில் மாட்டிவிடுகிறாள். தாயாரும், தங்கையும் ஜெயிலில் இருக்கும் விஷயம், வெளியூரில் இருக்கும் ரஜினிக்குத் தெரியவர, தாயாரையும், தங்கையையும் ஜெயிலில் சந்திக்கிறார்.

தங்கை மூலம் காதலன் யார் என்பதைத் தெரிந்து கொண்ட ரஜினி, ராஜாவைக் கண்டுபிடித்து நொறுக்குகிறார். ஆனால் ராஜா நல்லவன். அவன் தாயாரின் சூழ்ச்சிதான் இவ்வளவுக்கும் காரணம் என்று ரஜினி தெரிந்து கொள்கிறார். ஜெயிலில் இருந்து தாயாரையும், தங்கையையும் விடுவித்து, ரஜினியின் தங்கைக்கு ராஜா ஒரு கோவிலில் தாலி கட்டுகிறான்.

ஆனால் நடந்தது எதுவும் ராஜராஜேஸ்வரிக்குத் தெரியாது! இரகசியமாக நடந்த இந்தத் திருமணத்தை ஊரறியச் செய்யவேண்டும், தங்கை அந்த வீட்டு மருமகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ரஜினி சில முயற்சிகளை எடுக்கிறார்.

அப்போதுதான் தன்னை விரும்பிய அமலாவும், தன் தங்கையின் கணவர் ராஜாவும் அண்ணன் -தங்கை என்று தெரியவர, ராஜராஜேஸ்வரிக்குப் பாடம் புகட்டத் திட்டம் போடுகிறார், ரஜினி. அமலாவை மணந்து கொண்டு, ராஜராஜேஸ்வரி முன்பாகப் போய் நிற்கிறார்.

அதிர்ந்து போன ராஜராஜேஸ்வரி, தனது மருமகன் ரஜினிக்கு அடுக்கடுக்காகப் பல தொல்லைகள் கொடுக்கிறார். "முதல் இரவு" கூட நடக்கவிடாமல் தடுக்கிறார். ஆனால், தடைகள் தகர்க்கப்பட்டு, ரஜினி வெற்றி பெறுகிறார். தோல்வியில் ஆத்திரமான ராஜராஜேஸ்வரி, மருமகன் என்றும் பாராமல் ரஜினியைக் கொல்ல அடியாட்களை ஏவி விடுகிறார்.

ஆனால் அத்தனை பேரும் அடிவாங்கிக் கொண்டு ஓடுகிறார்கள். ரஜினியும் மனைவி அமலாவுடன் வீட்டை விட்டு வெளியேறுகிறார். இந்த நிலையில் ராஜராஜேஸ்வரி தனக்கு பாதுகாப்பு என்று நினைத்தாளோ, அவர்கள் அத்தனை பேரும் அவள் பணத்தை -திரண்ட சொத்தைக் கபளீகரம் செய்வதற்காகவே அவளுடன் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்கிறாள். சுதாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குள் அவர்கள் முந்திக்கொண்டு ராஜராஜேஸ்வரியைக் கொடுமைப்படுத்திச் சொத்துக்களை தங்கள் பெயருக்கு மாற்றித்தரக் கேட்கிறார்கள்.



"மாமியார்" ஸ்ரீவித்யாவுடன் மோதும் "மாப்பிள்ளை" ரஜினி.

ரஜினிக்கு இந்த விஷயம் தெரியவர, எதிரிகளைப் பந்தாடி, மாமியாரைக் காப்பாற்றுகிறார். திருந்திய மாமியார், ரஜினியைத் தனது "மாப்பிள்ளை" என்பதை ஊரறியச் செய்கிறார். ரஜினியின் தங்கையைத் தன் மருமகளாகவும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்,

மாமியார் ஸ்ரீவித்யா -மருமகன் ரஜினி இருவரும் மோதிக்கொள்ளும் ஒவ்வொரு காட்சியும் கலகலப்பானவை. ரஜினி தனக்கே உரிய பாணியில் காமெடியிலும் கலக்கியிருந்தார்.

நிழல்கள்ரவி, சோனியா, லலிதா-குமாரி. (பயணிக்கும்)

# பாதங்களைப் பராமரிப்பதற்கு...



ஓ **தினமும்** இரவில் படுக்கப் போவதற்கு முன்பு பாதங்களை ஒரு பாத்திரத்தில் சூடு தாங்கும் அளவு வெந்நீர், உப்பு, எலுமிச்சைச்சாறு, ஷாம்பூ போட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை ஊற வைத்துப் பிறகு பிரஷினாலே சுத்தம் செய்யவும்.

ஓ **இதை** வாரத்திற்கு இரண்டு அல்லது 3 நாட்களுக்குச் செய்யலாம். பிறகு பாதங்களை ஈரம் போக ஒரு மெல்லிய டவலால் துடைத்து நல்லெண்ணெயை லேசாக சூடு செய்து காலில் தடவலாம்.


ஓ **வெடிப்புப்** பாதம் உள்ளவர்கள் வீட்டில் உள்ள மருதாணி இலையை விழுது போல நன்கு அரைத்து, வெடிப்பு உள்ள இடங்களில் வாரந்தோறும் தடவி வந்தால் வெடிப்பு நீங்கும். பாத விரல்கள் பழுதடைந்து விட்டால் எலுமிச்சம் பழச்சாறு தடவி வரலாம். நம் நகத்தில் டார்க் கலர் பாலிஷ் போடுவதால் நம் நகங்கள் மஞ்சளாக மாறிவிடும். அதனால் பாலிஷ் போடுவதற்கு முன் நெயில் பேஸ் போட்டு பாலிஷ் போட வேண்டும். இப்படிச் செய்து வந்தால் நம் நகங்களை அழகாகப் பராமரித்துக் கொள்ளலாம்.

ஓ **கால்** விரல்களில் நகச்சுத்தி வந்தால் இதைச் சரியாக்க எலுமிச்சைப்பழத்துடன் மஞ்சள் தேய்த்து பத்துப்போட்டு வந்தால் நகச்சுத்தி நீங்கும்.

ஓ **கால்** விரல் நகத்தின் ஓரத்தில் மண் குவிந்து விட்டால் நல்லெண்ணெயை ஒரு விளக்கில் ஏற்றி வைத்து ஒரு தீக்குச்சியை அந்த நல்லெண்ணெயில் வைத்து அந்த விளக்கின் திரியில் சூடு செய்து அந்த விரல் நகத்தின் ஓரங்களில் தடவவும். 2 அல்லது 3 முறை செய்தபின் அதில் உள்ள அழுக்கு எல்லாம் வந்து விடும்.

ஓ **நகத்தின்** ஓரங்களில் பின் அல்லது ஊசியை வைத்து சுத்தம் செய்வதைத் தவிர்க்கவும்.

ஓ **குதிக்கால்களிலும்**, விரல்களிலும் க்ளிசரைன் தடவி அரை மணி கழித்து கழுவி விடலாம். குளிப்பதற்கு முன் தேன் தடவி அரைமணி சென்ற பின் கழுவிவிடலாம். முறையான பயற்சிகள் கால் தசைகள், பாதத் தசைகளை வலுப்படுத்தும்.



ஓ **கால்களின்** அழகை அதிகரிக்க மசாஜ் சக்தி வாய்ந்த முறை. மசாஜ் செய்வது எளிது, பலனளிப்பது, உபரியான கொழுப்பை எரித்து விடும். தசைகளை வலுப்படுத்தும். பல்வேறு உறுப்புக்களின் ஆற்றலையும் அதிகரிக்கும்.

ஓ **காலில்** வெடிப்பு என அவதிப்படுகிறீர்களா? கவலை வேண்டாம்! சிறிதளவு பப்பாளிப் பழத்தை நன்கு மசித்து வெடிப்பு வந்த பகுதிகளில் தடவிவிடுங்கள். உலர்ந்ததும் நீரில் லேசாக நனைத்து, காலை ஸ்கிரப்பர் கொண்டு மிருதுவாக துப்பரவு செய்ய வெடிப்பு குணமாகும்.

ஓ **நாடி** நரம்புகள் முடியும் இடம், பாதங்கள். அவை சோர்வடைந்து இரத்த ஓட்டம் குறையும் பொழுது உள்ளங் காலில் உள்ள அழுத்தப் புள்ளிகளை மசாஜ் செய்தால் இரத்த ஓட்டம் அதிகரித்து உடல் முழுக்க சத்தி கிடைக்கும். பாதங்களில் உள்ள ஒவ்வொரு அழுத்தப் புள்ளியும் உடலின் மற்ற பாகங்களின் நரம்புகளுடன் தொடர்பு உள்ளது. அழுத்தப்புள்ளிகளை அறிந்து அரோமா எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்வதால் சோர்வு நீங்கும், புத்துணர்ச்சி கிடைக்கும்.

ஓ **தரையில்** படுத்துக் கொண்டு, கால்களைத் தனித் தனியாகவும், பிறகு இரண்டு கால்களைச் சேர்த்தும் உயரத் தூக்குங்கள். இந்தப் பயிற்சியை தினமும் ஐந்து நிமிடமாவது செய்யுங்கள்.

ஓ **கால்களுக்குப்** பொருத்தமான செருப்புகளைத் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானது.

ஓ **பிறரது** காலணிகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும். தோல் வியாதிகள் தொற்றும் அபாயம் உண்டு.

ஓ **பெண்கள்** மருதாணி இட்டுக் கொள்வது என்பது காலந்தொட்டே இருந்து வருகிற பழக்கம். இதனால் பாதங்கள் அழகாகத் தோற்றமளிப்பதுடன், பித்த வெடிப்புகலளக் குணமாக்கும் மருந்தாகவும் மருதாணி பயன்படுகிறது.

## ஓர் செய்தி

### பரபரப்பை உண்டாக்கப் போகிறது திருமலைச் சிறுமியின் படுகொலை!



**திருகோணமலையில்** ஆறு வயதுச் சிறுமி ஜூட் வர்ஷா கடத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் முழு இலங்கையையுமே உலுப்பியிருக்கிறது.

1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது இடம்பெற்ற கதிர்காம அழகி பிரேமாவதி மனம்பேரி கற்பழிப்பு, கொலைச் சம்பவம்; 1990 களின் மத்தியில் கைதடியில் இடம்பெற்ற மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி கொலை போன்று, சிறுமி ஜூட் வர்ஷா கடத்திக் கொல்லப்பட்ட சம்பவமும் நாட்டில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

ஆயுத கலாசாரத்தோடு சம்பந்தப்பட்டவையாக இந்த மூன்று சம்பவங்களும் பார்க்கப்படுவதாலேயே அன்ளை கனதியான தாக்கங்களைச் சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கின்றன.

அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தில் 1996 ஆம் ஆண்டு ஜொன் பெனற் ரம்சே என்ற ஆறு வயதுச் சிறுமி கப்பம் கோரிக் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டாள். ஓர் இலட்சத்துப் பத்தாயிரம் டொலர்கள் கோரிக் கடத்தப்பட்ட இந்தச் சிறுமியின் சடலமும் வீதியில் அநாதரவாக வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் முழு அமெரிக்காவையுமே அதிர வைத்தது!

புதுடில்லியில் ஓர் இளம் பெண்ணின் கற்பழிப்பு, தற்கொலை ஆகியவற்றுக்குக் காரணமான ஓர் இளைஞனுக்குக் கீழ் நீதிமன்றமொன்று சில வருடங்களுக்கு முன்னர் ஆயுள் தண்டனையும் அபராதமும் விதித்திருந்தது. சிறையிலிருந்தபடியே இந்திய நிர்வாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெய்திய இந்த இளைஞனை மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது. கடந்த மாதம் இந்த இளைஞன் விடுவிக்கப்பட்டான். இந்தத் தீர்ப்பை எதிர்த்து இந்திய மகளிர் அமைப்புக்கள் போர்க்கொடி உயர்த்தி வருகின்றன. இந்தியாவில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் பல கொலை வழக்குகள் பரவலாக மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. கிரிக்கெட் வீரர் சதாசிவம், டாக்டர் குலரட்ன, போலின் டீ குரூஸ், கோகிலாம்பாள் போன்றவர்களோடு சம்பந்தப்பட்ட கொலை வழக்குகள் மிகவும் பிரபல்யமானவை. நீதிமன்றுக்கு வருமுன்னரேயே இருவரைத் தற்கொலை செய்ய வைத்த ஜூட் வர்ஷாவின் படுகொலையும் பெரும் பரபரப்பை உண்டாக்கலாம்.

## வாயுத் தொல்லையா?



❖ உடல் உஷ்ணம் தணிய...: உடல் அதிக உஷ்ணமுடையவர்கள் எப்போதும் குளிப்பதற்கு முன் உடலில் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயைத் தேய்த்து பிறகு குளித்து வந்தால் உடல் சூடு தணியும்.

❖ வாயுத் தொல்லையா? வாயுத் தொல்லையால் அவதிப்பட்டால் சுக்கு கலந்த சுடுநீரைப் பருக வேண்டும். இதனால் வாயுத் தொல்லை நீங்கி, ஜீரண சக்தி அதிகரிக்கும்.

❖ சிறு காயம் ஏற்பட்டால்...: உடலில் எங்காவது சிறு காயம் ஏற்பட்டால் காயம் பட்ட இடத்தில் தேங்காய் எண்ணெயைத் தடவவும். தேங்காய் எண்ணெயில் உள்ள கிருமிநாசினியால் அடுத்த நாளே ரணம் ஆறிக் குணம் கிடைக்கும்.

❖ குழந்தைகளுக்கு மீன் உணவு: குழந்தைகளுக்கு அவர்களின் 2-ஆவது வயதில் இருந்து மீன் வகைகளைச் சாப்பிடக் கொடுக்கலாம். ப்ரஷ் மீன்களைச் சமைத்து குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். குறைந்த கொழுப்பு, கல்சியம் சத்து உடைய, மென்மையான மீன்களாக அவை இருக்க வேண்டும்.

❖ தண்ணீர் அதிகம் குடியுங்கள்: உடலில் உள்ள தேவையற்ற நச்சுப் பொருட்களை வெளியேற்றத் தண்ணீர் மிகவும் முக்கியம். எனவே தினமும் போதிய அளவு தண்ணீர் குடித்தல் அவசியம். சில வகைப் புற்றுநோயைத் தடுப்பதிலும் தண்ணீரில் பங்கு உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.


## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

முரசு வாசகர்களுக்கான போட்டி -167

ரூபா. 1000/- பரிசு

கேள்வி:-
அமெரிக்காவில் 1996ஆம் ஆண்டு கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் பெயர் என்ன?

167

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ.அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........

ஓ சரியான விடையை எழுதி அனுப்பி வைப்பவர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்.

ஓ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும். (பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

ஓ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
முரசு பரிசுப் போட்டி - 167
தினமுரசு வார மலர்
த.பெ.இல - 1772
கொழும்பு.

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 31.03.2009

பரிசுப் போட்டி இல -165
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

எம். எஸ். எம். சனஹர்,
இல. 106/12, அலாப்தீன் மாவத,
மிரிஸ்வத்த, பாலாங்கொடை.


## உங்கள் பிரச்சினை என்ன?


**சமூகத்தில்** பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து 'உங்கள் பிரச்சினை என்ன?' என்ற இந்தப் புதிய பகுதி மூலம் கலந்துரையாடலாம். அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்கள் மட்டுமல்ல, குடும்பத்தில், அலுவலகத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளலாம். இயன்றவரை உங்கள் பிரச்சினை தீர ஆலோசனைகள் தரப்படும்.

பரீதா,
தெஹிவளை.

**கேள்வி:** எனது மகளுக்கு நான்கு வயதாகிறது. அவள் முன்பள்ளியொன்றில் கல்வி கற்று வருகிறாள். அவள் படிப்பில் ஆர்வமில்லாதவளாக இருப்பதாக அவளுடைய ஆசிரியை கூறுகிறார். அவளிடம் கிரகிக்கும் தன்மை மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் கூறுகிறார். எனது ஒரேயொரு பிள்ளை இவள்தான். ஆசிரியை இவ்வாறு கூறுவதன் அர்த்தம் என்ன? இதற்கு ஏதாவது சிகிச்சை அளிக்க முடியுமா?

**பதில்:**

புரிந்து கொள்ளும் அல்லது கிரகிக்கும் தன்மை குறைவான பிள்ளைகளும் இருக்கிறார்கள். இவர்களிடம் கற்றல் செயற்பாடுகளில் மெத்தனத் தன்மை காணப்படுவதால் பரீட்சைகளில் தோல்வியடைகிறார்கள். முதலில் எந்த அடிப்படையில் ஆசிரியை இந்த முடிவுக்கு வந்தார் என்பதைக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்காவது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை அவதானித்தே இவ்வாறான முடிவுக்கு வர முடியும். தாமதமாகக் கிரகிக்கும் தன்மையுள்ள பிள்ளைகளுக்கு ஞாபகசக்தி குறைவாக இருக்கும். அவர்கள் குறைந்தளவு நேரத்துக்கே ஒரு விடயத்தில் கவனம் செலுத்துபவர்களாகவும் இருப்பார்கள். இவ்வாறான பிள்ளைகளுக்கும் சாதாரணமான பிள்ளைகளுக்கிடையில் வெளித்தோற்றத்தில் வித்தியாசங்கள் தெரிவதில்லை இதனால் சாதாரணமாக சராசரிப் பிள்ளைகளுக்கெனக் கற்பிக்கப்படும் பாடங்களையே இவர்களும் கற்க நேரிடுகிறது. இதனால் ஏனைய பிள்ளைகளுக்கு ஈடாகக் கல்வி கற்பதில் இவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்படுகிறது. அவர்கள் கிரகிக்கும் மட்டத்துக்கு ஏற்றபடியாகப் பாடங்களும் போதனைகளும் அமைய வேண்டும். அவர்களின் திறமைக்கு ஏற்றதாகப் பாடவிதானங்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஆசிரியை சொல்வதை மட்டும் வைத்துக் கொண்டு திடீர் முடிவுக்கு வந்துவிடாதீர்கள். நீங்களும் உங்கள் பிள்ளையின் கற்றல் செயற்பாடுகளை நன்கு அவதானியுங்கள். தாமதமாகக் கிரகிப்பவர்களுக்கும் ஞாபகசக்தி குறைவானவர்களுக்கும் கல்வியறிவு ஊட்ட முடியும். சராசரி மாணவர்களின் அளவுக்கு அவர்களைக் கொண்டு வர முடியாது என்பது உண்மை. இருந்தாலும் மனந்தளராது இயன்றவரை பிள்ளைக்கு உதவியளிக்கும் விதத்தில் செயற்படுங்கள்.



# “உறவுகளைத் தேடுகிறோம்”











வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். அவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றார். அவர்களின் தேவைகள், குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

வவுனியாவில் தங்கியிருக்கும் அமைச்சர், நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் கல்வி, சுகாதாரம், மருத்துவம், தொடர்பாடல், தொழில் வாய்ப்புகள் போன்ற தேவைகள் குறித்து அதிகாரிகளுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார்.

அந்த மக்களுக்குத் தனியே அரசின் உதவிகள் மட்டுமல்லாது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினதும், ஏனைய உதவி நிறுவனங்களினதும் உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவும் முயற்சித்து வருகின்றார்.

வன்னி மக்களின் பிரச்சினைகளுக்கு மட்டுமல்லாது, வவுனியா வாழ் மக்களின் கோரிக்கைகள், தேவைகள் தொடர்பிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உறவுகள், வன்னியிலிருக்கும் தமது உறவுகளின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர். இவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா, இருந்தால் இன்னும் வன்னியில் புலிகளின் பிடியில் தான் இருக்கின்றார்களா, இல்லையெனின் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்துவிட்டார்களா, அல்லது காயமடைந்து விட்டார்களா என்று எதுவும் தெரியாமல் தவிக்கின்றனர். மக்கள் தங்கியிருக்கும் நிலையங்களில் போய் அவர்களைப் புகைப்படங்கள் எடுத்து முரசு பிரசுரித்தால் உறவுகளைத் தேட வசதியாக இருக்கும் என்ற பல கேள்விகள் வந்து சேர்ந்துள்ளன. அந்த வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்த போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களின் ஒரு பகுதியை இவ்வாரம் முரசில் பிரசுரிக்கின்றோம்.

''உறவுகளைத் தேடும்'' எமது உறவுகளுக்கு உதவுவதே எமது நோக்கமாகும். இந்த முயற்சி தொடரும்...









இன்றைய பொழுது கேள்விக் குறியாகாமல் இருக்கச் சுறுசுறுப்பாகத் தொழில் செய்.

என்ன தொழில் செய்வது என்கிறாயா? முந்தைய கட்டுரையைப் படித்துப் பார்.

மூன்றிலேயும் டென்ஷனை வளர்க்கும் சூழ்நிலை உண்டு என்றாலும்,பயங்கரமான டென்ஷன் மனதுக்கு ஏற்படுவதே பகை உணர்ச்சியால்தான்.

குடும்பக் கோபம் தணியும்; தொழிலின் கவலை தணியும்; கடன் கவலை



# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

## நான்காம் பாகம்

பகுதி-74

எட்டு

மனிதனுக்கு இரத்தக் கொதிப்பு ஏன் வருகிறது?

'மென்டல் டென்ஷன்' என்கிறார்கள் டாக்டர்கள்.

இதயத்துடிப்பு அதிகமாவதற்கும் அதுவே காரணம்.

உணர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க மனம் உடலைத் தாக்குகிறது. உடலில் மென்மையான இரத்தம் கொதிக்கத் தொடங்குகிறது. அந்தக் கொதிப்பு அதிகமாகி அதிகமாகி இருதயத்தைக் தாக்குகிறது.

கொழுப்புச் சத்துக்களாலும் இரத்தக் கொதிப்பு அதிகமாகும் என்றாலும், அது இல்லாதவனுக்கும் இரத்தக்கொதிப்பு வருவதற்கு 'டென்ஷன்' தான் காரணம்.

குடும்பம், தொழில், கடன் இந்த தணியும்; ஆனால் பகை உணர்ச்சி மட்டும் சீக்கிரம் தணியாது.

ஒரு தடவை யார் மீதாவது பகை ஏற்பட்டுவிட்டால், அது திடீர் திடீர் என்று தோன்றும்.

கோடைகாலத்து மேகம் போல கூடும்; விலகும்; சமயங்களில் மழைகாலத்து மேகம் போல ஏழு நாட்களுக்கு மூடிக் கிடக்கும்.

எவனையாவது உதைக்க வேண்டும் போல் தோன்றும்; அதற்கான சக்தி இருக்காது. ஆனால் ஆத்திரம் மட்டும் தணியாது.

மூடி வைத்த கண்ணாடிச் சீசாவுக்குள் அடைபட்ட ஆவி கொதிக்கத் தொடங்கினால், சீசா வெடித்துப் போகும்.

உள்ளுக்குள்ளேயே வெந்து கொண்டிருக்கும் பகை உணர்ச்சி எதிரியைத் தாக்காது; உன் உடலைத்தான் தாக்கும்.

பிறருக்குப் பகைவன் என்று தன்னை வரித்துக்கொண்டு விட்டவன், தானே தனக்கு எதிரியாகிறான்.'

இராமன், இராவணனைப் பகையாக நினைக்கவில்லை; அதனால் அவனுக்கு இராவணனை எண்ணித் துடிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை; சீதையை எண்ணி உருகுகிற நிலைதான் ஏற்பட்டது.

இராவணனோ சூர்ப்பனகையின் போதனையால், இராமன் பகைவனே' என்று முடிவு கட்டிவிட்டான். அந்தப் பகை, அவனது மரண பரியந்தம் இருந்தது.

சீதையை அடைய முயன்றான்; தோற்றான்; ஆத்திரம் வளர்ந்தது.

தம்பி விபீஷணன் அவனை விட்டுப் பிரிந்தான்; இன்னும் அது வளர்ந்தது.

அநுமான் வரவால் அது அதிகரித்தது.

அமர்க்களத்து நிகழ்ச்சிகளால் அது நெருப்பாய்க் கொதித்தது.

அப்போது 'அலோபதி' மருத்துவம் இல்லை. இருந்திருந்தால், இராவணனின் இரத்தக் கொதிப்பையும் கம்பன் விவரித்திருப்பான்.

'பகைவனுக்கு அருள்வாய்' என்று சொன்ன ஞானிகளெல்லாம் கருணையால் சொல்லவில்லை; இரத்தக் கொதிப்பு வராமல் இருக்க மருந்து சொன்னார்கள்.

பகைவனே இல்லாமல் இருப்பது எப்படி?

சில விஷயங்களை ஜீரணிக்க வேண்டும்; சில விஷயங்களை அலட்சியப்படுத்த வேண்டும்.

பெற்ற பிள்ளை ஒரு தவறு செய்துவிட்டால், அதை ஜீரணித்துப் பிள்ளையைத் திருத்து.

அடுத்தவன் உன்னைப் பற்றி அவதூறு பேசினால் அதை அலட்சியப்படுத்து.

கத்தரிக்காயை ஜீரணி; அதன் காம்பை அலட்சியப்படுத்து.

மாறாகக் காம்பை ஜீரணிக்க முயன்றால் ஜீரணமாகாது; காயை அலட்சியப்படுத்தினால் பசி அடங்காது.

'போனால் போகட்டும் போடா' என்பது ஒரு பொதுத் தத்துவம்.

கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுடன் அவரது வீட்டில் ஒருநாள் நான் அமர்ந்திருந்தேன். அப்போது அந்த வீட்டுக்கு ஒரு கடன்காரர் ஜப்தி கொண்டு வந்தார்.

''என்ன?'' என்று கேட்டார் கலைவாணர். ''அட்டாச் மெண்ட்'' என்றான் அமீனா.

''ஆகா! ஆகா! உனக்கும் நமக்கும் நல்ல அட்டாச்மெண்ட்'' என்று சிரித்தார். அவர் பதறவில்லை; பயப்படவில்லை; மிகச் சாதாரணமாகவே அதை எடுத்துக் கொண்டார்.

அமீனா கண்ணீர் வடித்தானே தவிர, கலைவாணர் கண்ணீர் வடிக்கவில்லை.

இலண்டன் பாராளுமன்ற உறுப்பினரான ஒரு பெண்மணி, ஒருமுறை பிரதம மந்திரி சர்ச்சிலைப் பார்த்து ஆத்திரத்தோடு கத்தினாள்.

''நான் மட்டும் உமது மனைவியாக இருந்தால், என் கையாலேயே உமக்கு விஷம் கொடுப்பேன்!'' என்று.

ஆத்திரமில்லாமல் சர்ச்சில் பதில் சொன்னார்.

''அம்மணி! உங்களைப் போன்ற மனைவி எனக்குக் கிடைத்தால் விஷத்தைச் சந்தோஷமாகக் குடிப்பேன்!'' என்று.

உன்னோடு வாழ்வதை விட, 'விஷமே மேல்' என்பது அதன் பொருள்.

ஆத்திரமான கேள்விகளை அமைதியாகச் சமாளித்தால் பகைவனே நண்பனாகி விடுவான்.

சமயங்களில் நாமே தவறு செய்து விடுகிறோம்; அதுவே எதிரொலிக்கும் போது ஆத்திரப்படுகிறோம்; இது மனித சுபாவம்.

ஆனால், தர்மன் ஆத்திரப்படவில்லையே!

பாஞ்சாலி துகிலுரியப்பட்ட போது, தர்மன் சபையிலேதான் இருந்தான். அவன் கோழையல்ல; ஆயினும் அமைதியாக இருந்தான். காரணம், நாம் செய்த தவறுகளுக்குப் பிறரை நோவானேன் என்பதே.

வட்ட மேஜை மாநாட்டுக்கு முழந்துண்டு கட்டி காந்தி போனபோது, வெள்ளைக்கார பிரபுக்கள் கேலியாக காந்தியைப் பார்த்து சிரித்தார்கள். காந்தி அமைதியாகப் புன்னகைத்தார்.

இறுதியில் வென்றது அமைதிப் புன்னகையே த்விர, கேலிச் சிரிப்பல்ல.

காரணம் தன்னம்பிக்கையின் உச்சம்.

'துச்சாதனனின் 'தொடையைப் பிளந்து இரத்தம் குடிப்பேன்'

(தொடர்ந்துவரும்)

---

# வீழ்ந்தது அவுஸ்திரேலியா; சாதித்தது இந்தியா!

கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகிய அவுஸ்திரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையேயான 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு அதிர்ச்சித் தோல்வி கிடைத்துள்ளது. மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்கின்ற கணக்கில் அவுஸ்திரேலியா தொடரினைக் கைப்பற்றிய போதிலும், இறுதிப் போட்டியில் சந்தித்த இன்னிங்ஸ் தோல்வியானது



அவுஸ்திரேலியர்கள் தொடர் வெற்றியைக் கொண்டாட முடியாத சூழலை ஏற்படுத்தியுள்ளது.

கேப்டவுனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொன்டிங் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணியினர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களைப் பறிகொடுக்க 209 ஓட்டங்களுடன் அவர்களின் முதல் இன்னிங்ஸ் முடிவிற்கு வந்தது. அதிக பட்சமாக ஹடிச் 55 ஓட்டங்களைப் பெற்றார். தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் நான்கு விக்கெட்டுக்களையும், போல் ஹரிஸ் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணியினரின் முதலாவது விக்கெட் 45 ஓட்டங்களில் வீழ்ந்த போதும் தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். அஸிவெல் பிறின்ஸ 150, கலிஸ் 102, ஏ.பி.டி வில்லியர் 163 ஆகியோர் சதங்களைப் பெற்றுக்கொண்டதோடு மோர்ச்கல் 58 ஓட்டங்களைப் பெற்றார். அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் சார்பில் மைக்கல் ஜோன்சன் 148 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதாயின் 442 ஓட்டங்களைப் பெற வேண்டியிருக்கும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸதிரேலிய அணியினர் இம்முறையும் தொடர்ச்சியான முறையில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு வேகப்பந்து வீச்சாளரான மைக்கல் ஜோன்சன் இறுதிவரை போராடிய போதும் ஏனையவர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்காமையினால் அவரின் முயற்சி கைகூடவில்லை. இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்த ஜோன்சன் 123 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும், அவுஸ்திரேலிய அணி 422 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஒரு இன்னிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்களினால் தோல்வியை சுவீகரித்துக் கொண்டது. இந்த இன்னிங்ஸில் ஆறு விக்கெட்டுக்களை சரித்த போல் ஹரிஸ் மொத்தமாக ஒன்பது விக்கெட்டுக்களைப் பதம் பார்த்து ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தென்னாபிரிக்க அணியினர் அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அவர்களிடம் தொடரை இழந்ததுடன், சர்வதேச தரவரிசையில் முதல் இடத்தையும் பறிகொடுத்த அவுஸ்திரேலிய அணியினர் தென்னாபிரிக்காவிற்கு வந்து முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுத் தொடரை கைப்பற்றியமை அவுஸ்திரேலியர்கள் பழிதீர்த்துக் கொண்டதாவே அமைந்தது.

தென்னாபிரிக்க மண்ணில் வைத்து அவர்களைத் தொடர்ச்சியாக தோற்கடித்தமையினாலும், அவர்களின் முக்கிய வீரர்களான கிறேம் ஸ்மித், கேர்ஸல் கிப்ஸ் ஆகியோர் காயமுற்று விளையாட முடியாமல் இருந்தமையினாலும், சொந்த மண்ணில் வைத்து வாங்கிக் கட்டியமையால் அடங்கிப் போய் இருந்த பொண்டிங் உற்சாகம் பெற்றார். ஜக் கலிஸ் தலைமைக்கு லாயக்கற்றவர் என்றும் 3ஆவது போட்டியிலும் வெற்றி நிச்சயம் எனக் கருத்து தெரிவித்தார். இது தென்னாபிரிக்க சிங்கங்களை சீண்டுவது போன்று அமைந்துவிட்டது. பொன்டிங்கின் கருத்துக்குப் பதிலடியை தென்னாபிரிக்கர்கள் கொடுத்துள்ளனர்.



அதேவேளை சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நியூசிலாந்து சென்றிருக்கும் இந்திய அணியினர் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளனர்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் பந்து வீச தீர்மானித்திருந்தது. அதன்படி முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து 279 ஓட்டங்களையும் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியினர் 520 ஓட்டங்களையும் முதல் இன்னிங்ஸில் பெற்றுக் கொண்டனர். அதன்படி அவுஸ்திரேலியாவைப் போன்றே இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்காக இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய நியூசிலாந்து 279 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. எனினும் மேலதிகமாக 38 ஓட்டங்கள் பெற்றமையால் இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பித்துக் கொண்டது. 39 என்ற வெற்றி இலக்குடன் களம் புகுந்த இந்திய வீரர்கள் விக்கெட் இழப்பின்றி 39 ஓட்டங்கள் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டனர். இதன் மூலம் தோனி தலைமையிலான இந்திய அணி, நியூசிலாந்து மண்ணில் வைத்து வரலாற்று வெற்றி ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

---

# உலகக் கோப்பையை வென்றது இங்கிலாந்து!

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 9ஆவது ஐ.சி.சி. மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி இங்கிலாந்து அணி உலகக் கோப்பையை சுவீகரித்துக் கொண்டது. நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி 166 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து மகளிர் அணி அந்த இலக்கை துரத்தி 46.1 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 167 ரன்கள் எடுத்து கோப்பையை தட்டிச் சென்றது. மூன்றாவது முறையாக இங்கிலாந்து மகளிர் அணி உலகக் கோப்பையை வென்றுள்ளது. ஆட்ட நாயகியாக இங்கிலாந்து வீராங்கனை என்.ஜே. ஷாவும், தொடரின் சிறந்த வீராங்கனையாக இங்கிலாந்தின் எஸ்.சி.டெய்லரும் தேர்வு செய்யப்பட்டனர்.



அதேவேளை 3ஆம் இடத்தை தீர்மானிப்பதற்காக மோதிக் கொண்ட இந்திய மகளிர் அணியினருக்கும், அவுஸ்திரேலிய மகளிர் அணியினருக்கும் இடையிலான போட்டியில் 3 விக்கெட்டுக்களினால் இந்திய அணி வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியினர் 142 ஓட்டங்களைப் பெற்றனர். பதில் அளித்த இந்திய அணியினர் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்ததன் மூலம் மூன்றாவது இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

8 நாடுகள் பங்குபற்றிய இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் சுப்பர் சிக்ஸர் தொடருக்கு தெரிவு செய்யப்படாமல் இலங்கை, தென் ஆபிரிக்க அணிகள் வெளியேற, நியூசிலாந்து, இங்கிலாந்து, இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் என்பன சுப்பர் சிக்ஸர் போட்டிகளில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.


மூன்றாவது

# இடம்பெயர்ந்த மாணவர்களின் பிரச்சினைகள்

"**இன்றைய** மாணவர்களே நாளைய தலைவர்கள், இவர்களே நாட்டை வழிநடத்தப் போகிறவர்கள்" என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆயினும், எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலை மாணவர்களையே அதிகமாகப் பாதித்து வருகிறது.

இனப் பாகுபாட்டால் பாதிக்கப்பட்டு தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழுந்த மாணவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாமையாலும் தவறான வழிகாட்டுதல்களாலும் மாணவர்கள் பிழையான ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளப்பட்டார்கள். உயிரிழப்பு, சிறைக்கூடம், சித்திரவதைகள் மாணவர்களுக்குக் கிடைத்தது. உணர்ச்சிகரமான பாதையில் தமது கல்வியை மாணவர்கள் இழந்தபோது கற்றுத்தேறிய தலைவர்கள் தலைவர்களாகவிருந்தார்கள், இன்றுவரை தமது தலைமையையும் தொடர்கிறார்கள். வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்டத்திற்கு மாணவர்கள் இணைக்கப்பட்டது ஒரு இரகசியமான விடயமல்ல. அரசியல் தலைவர்களின் ஆலோசனையும் ஆதரவும் அதற்கு முற்றுமுழுதாக இருந்தது. தமது சொந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்திற்குரிய தளங்களை ஏற்படுத்திக் கொண்டவர்கள் ஊரார் பிள்ளைகள் கல்வியை நிறுத்திவிட்டு யுத்த களத்தில் நிற்பது பற்றி தியாகம் என்றும், வீரம் என்றும் உள்ளம் உருகிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் உந்துதல் சக்தியாக, எஞ்சியிருக்கும் வன்னிக்களத்திலும் மாணவர்கள் பலியாகிறார்கள். வன்னியில் பாடசாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன, கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கிறது. பிடிவாதமான போரிற்கு மாணவர்கள் அழைக்கப்படுகிறார்கள். இன்னும் போர்வெறிப் பாடல்களே அங்கு ஒலிக்கின்றன. கை, கால்களை இழந்த மாணவர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

வன்னியில் கட்டாய ஆயுதப் பயிற்சிக்கு



உட்படுத்தப்பட்ட, போர்வெறி மூளைச்சலவை செய்யப்பட்ட, முன்பள்ளியிலேயே தமிழீழ வெறியூட்டும் நிகழ்வுகளை நடத்தி ஆயுதப்போருக்குத் தயார்படுத்தப்பட்ட, திசை தவறிய அர்த்தமில்லாத போராட்டத்திற்கு வழிநடத்தப்பட்ட அந்த மாணவர்கள் இன்று தமது உயிரைப் பாதுகாக்க வழியின்றி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

வன்னியில் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து மாணவர்கள் அங்கிருந்து இங்கு, இங்கிருந்து அங்கு என்று இடம்பெயர்ந்து கடைசியில் ஏதோவொரு வழியில் நிரந்தர இடம்பெயர்வு முகாம்களை அடைந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். படகுகள் மூலமும் தரைவழியாகவும் பல இன்னல்களைக் கடந்து யாழ்ப்பாணத்திற்கு தப்பி வந்தவர்கள், கோப்பாய், கைதடி, மிருசுவில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 3000 வரையான இந்த மக்களில் 800இற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர்.

வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் ஓரளவு நிம்மதியடைந்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் இனி ஓரளவு நீண்ட காலத்திற்கு இந்த முகாம்களில் தங்கியிருக்கலாம். உயிரைப் பறிக்கும் குண்டுகள், ஷெல்களிலிருந்து தப்பலாம் அதிலும் முக்கியமாக புலிகள் பிடித்துப் போய்விடுவார்கள் என்ற பயம் இல்லை. வன்னியில் சிக்குண்டிருக்கும் மாணவர்களின் நிலைமை படுமோசமாகியிருக்கும் இன்றைய நிலைமையில் தப்பி வந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள் அயலிலுள்ள பாடசாலைகளில் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கியிருக்கின்றன. போதுமானளவு அரசாங்கமும் இந்த மாணவர்களுக்கான உதவியைக் கொடுத்திருக்கிறது.

பௌதீக வளங்களைப் பொறுத்தவரை குறையில்லாதிருந்தாலும், அது ஒரு முகாமிற்குரிய வசதிகள் மட்டுமே. நீண்ட காலத்திற்கு இந்தச் சூழ்நிலையில் மாணவர்களால் தாக்குப்பிடிக்க முடியும் என்று சொல்ல முடியாது. முன்பள்ளி செல்லவேண்டிய சிறுவர்கள், பாடசாலைக் கல்வியின் ஆரம்பநிலை மாணவர்கள் முகாம் வாழ்வில் வெகுவாகப் பாதிக்கப்படக்கூடும். பழக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து ஏற்பட்ட திடீர் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுமளவிற்கு அவர்களுக்குப் பக்குவம் இல்லாததால் கல்வியில் ஆர்வம் காட்டத் தவறுவார்கள். இந்தச் சிறுவர்களை சூழ்நிலைக்கேற்ப வழிநடத்துமளவு பெற்றோர்களுக்கும் பொறுமை இருக்க வாய்ப்பில்லை.

தப்பி வந்தவர்களின் பாதுகாப்பையும், விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று சொல்லப்படும் யாழ். குடாநாட்டின் பாதுகாப்பையும் ஒருசேர உறுதிப்படுத்த வேண்டிய நிலைமை பாதுகாப்புத் தரப்பிற்கு இருக்கிறது என்பதை ஏனைய மக்கள் புரிந்துகொள்ளுமளவு முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் மக்களால் அல்லது மாணவர்களால் புரிந்துகொள்ள முடியுமா? சுதந்திரமாக நடமாடும் ஏனைய மாணவர்களுடன் கல்வி கற்கும்போது முகாம் மாணவர்களின் மனநிலையில் இந்த நிலைமை தளர்ச்சியை ஏற்படுத்தக் கூடும். பாதுகாப்புப் பிரச்சினையும், மனிதாபிமானப் பிரச்சினையும் நியாயமாக மோதிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் இங்கு நிச்சயமாக உருவாகும். மோதல் நடைபெறாத பிரதேசத்திலும் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குச் சவால் இருப்பதன் காரணம் யுத்தம் அண்மையில் முடிவுறப் போவதில்லை என்ற அனைவரின் கருத்துதான்.

ஆயுத ஒப்படைப்பு சிறுவர் போராளிகள் விடுவிப்பு போன்றன கிழக்கில் உதயத்தை கொண்டுவருவது போல வடக்கிற்கு வசந்தம் வர ஆயுதபரிகரணம் தேவை.

புலிகளின் வல்லாட்சிக்குள் வாழ்ந்து, கடந்த வருடத்தில் ஆரம்பித்த இறுதி யுத்தம் என்று சொல்லப்படும் இந்தப் போரில் சிக்குண்டு பல இன்னல்களுக்கு மத்தியில் தமது கல்வியைத் தொடர்ந்து வந்தவர்களே ஒரு சுதந்திரக் கனவுடன் தப்பிவந்து தஞ்சமடைந்திருக்கும் இந்த மாணவர்கள். இவர்களின் எதிர்காலம் அரசின் கையில் இருக்கிறது. பிரபாகரன் விடாப்பிடியாகத் தொடரும் யுத்தத்தை வெற்றி கொள்வதில் மட்டும் அரசாங்கத்தின் பொறுப்பு முடிந்து விடாது. யுத்தத்தின் வடுக்களாக இந்த மாணவர்களின் எதிர்காலம் அமையக் கூடாது என்பதிலும் தன் கடமையைச் செய்ய வேண்டியிருக்கும். இடம்பெயரும் வன்னி மாணவர்கள் எதிர்கொள்ளப் போகும் சவால்களை முறியடித்து வெல்வதன் மூலமே எமது நாட்டின் சிறந்த கல்வித்தரம் எந்தச் சூழ்நிலையிலும் வீழ்ந்துவிடாது என்பதை நிலைநாட்ட முடியும்.

# நேரிச்சல் வெளி

**யுத்தத்தின்** மூலம் விடுதலையைப் பெற்றுவிட முடியும் என்று நம்புகிறவர்களாக இன்று யார் இருக்கிறார்கள்?

இந்தக் கேள்வியை இன்று ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டு விடை கூறிக் கொண்டாக வேண்டும். அந்தப் பதிலிலிருந்துதான் உண்மையில் மக்களின் அழிவைத் தடுப்பதற்கான மனோநிலையை நாம் கொண்டிருக்கிறோமா அல்லது கள்ள நோக்கங்களை ஒளித்துவைத்துச் சும்மா கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறோமா என்ற விளக்கத்தை



நாம் அறிந்துகொள்ள முடியும்.

வன்முறை நிறைந்திருப்பது சூழலில் அல்ல; நம் மனங்களில். நம்முள்ளே வன்முறையுணர்வு எப்போதுமிருக்கிறது. அதை அவதானித்து விலக்கியபடியிருத்தலும், அதற்குப் பதிலாக நம்மிடமிருக்கும் கருணையுணர்வைத் தேடி அதைப் பொங்கவிடுவதுமே அமைதிக்கு வழி என்றார் ஒரு ஞானி. "அயலானின் கண்களுள் ஆழ்ந்து நோக்கு. அவனுள் இயங்கும் வாழ்வு நீயே எனக் காண்பாய்" என்பது அவரது வார்த்தைகள்.

"உனக்குத் துன்பம் தருகிறவர்களைப் பற்றி யோசித்துக் கொண்டிராமல் உன்னுடைய எந்தத் தன்மைகள் உனது துயரத்திற்குக் காரணமாய் அமைகின்றன என்று யோசி" என்றார் மற்றொரு சிந்தனையாளர். யுத்தத்திற்கும் சண்டைக்குமான நியாயங்களிலிருந்து நாம் யோசிக்க ஆரம்பிப்பதை விடுத்து வாழ்வதற்கான விட்டுக்கொடுப்புகளிலிருந்து சிந்திப்பதை நாம் தொடங்க வேண்டும். இரக்கமும் நட்பும் கொண்டு கூடி முன்னேறுவது எளிதானதா, ஒருவரை ஒருவர் சுட்டுத்தள்ளுவது எளிதானதா என்பதை நாம் சுயமாகச் சிந்தித்தாக வேண்டும். போராட்டம், வாழ்வு ஆகியன பற்றிய நம்முடைய அடிப்படையான மனோபாவமே மாறவேண்டியுள்ளது.

மற்றவர்களுடன் நாம் வாழவேண்டிய வகையைத் திருத்திக் கொள்வது முக்கியமா? ஒருவரை ஒருவர் கொல்வது முக்கியமா? போரின் அவசிய அநாவசியத்தைப் பற்றி முதலில் நாமேதான் தனிப்படச் சிந்தித்து முடிவுக்கு வரவேண்டும். ஒவ்வொருவரும் இதுபற்றித் தீர்க்கமாக யோசித்த பிறகே, வெறுமனே பகையுணர்ச்சியையும், உணர்ச்சியாவேசங்களையும் பொங்கவிட்டுக் கொண்டிருப்பது சரியா என்ற நியாயத்தைப் பேசவேண்டும்.

'யுத்தம் அவசியம்தான்; அது தவிர்க்க முடியாதது' என்ற வல்லடி நியாயத்தை நமக்குள் ஏற்படுத்திக் கொள்வதற்காக நம்மை நாமே கொடிய வெறுப்பாளர்களாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. நமது போரையும் கொலைகளையும் நியாயப்படுத்த எதிர்த்தரப்பை மேலும் மேலும் மிகக் கொடூரமானதாகச் சித்திரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாமும் வெறுப்பை வளர்த்து, எதிர்த்தரப்பையும் பகை வெறுப்பு நிலைக்குத் தூண்டிவிடுவதன் மூலமே யுத்தத்தை நியாயப்படுத்தும் செயல்பாடுகள் தொடர்கின்றன. ஒவ்வொரு தரப்பும், 'முதலில் மாற வேண்டியது எதிர்த் தரப்புதான்' என்ற 'நாயகன் பட நியாயங்களையே' பெரிதாக்கி வைத்துக்கொண்டிருப்பதன் மூலம் காப்பாற்றப்படுவது யுத்தமே தவிர மக்களல்ல.

யுத்தப் பிரதேசத்திலிருந்து தப்பித்து வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்கு வந்து சேர்ந்திருக்கும் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசுவதன் மூலம், யுத்தம் பற்றிய மக்களின் கருத்தைத் தெரிந்துகொள்ள தமிழ்வீறுப் பிரசாரகர்கள் முன்வர வேண்டும்.

'அரசாங்கம் மக்களை அழிக்கிறது, போராளிகளின் இறுதிக்கட்டப் போருக்கு வலுவூட்டுவதற்காகப் புதுக்குடியிருப்பில் மக்கள் தியாக வேள்வி நடத்துகிறார்கள்' என்ற கபட உசார்க் கதை பேசும் உலகத் தமிழர் குரூரத்தை இப்போதாவது உணர்ந்துகொள்ள வேண்டும்.

அரசின் கொலைகள் பிற்போக்கு, போராட்டக் குழுவின் கொலைகள் முற்போக்கு என்ற வாய்பாட்டைச் சொல்லிக் கொண்டு மேலும் மேலும் மக்களை அழிவில் தள்ளுவதற்குச் சிந்தித்துக்கொண்டிருக்கும் 'கண்காட்சி மனிதாபிமானக் கண்ணீரை' விடுத்து, அந்த மக்களைக் காப்பாற்றுவதற்கான 'அறிவை' வெளிப்படுத்த வேண்டும் உலகத் தமிழர்கள்!

வவுனியா முகாம்களிலுள்ள மக்களோடு சென்று கதைக்க வேண்டும். அதுபோல, புதுக்குடியிருப்பில் போருக்குள் சிக்கியிருக்கும் மக்களையும் அங்கிருந்து வெளியேறி வர அழைப்பு விடுக்க வேண்டும். புலிகளின் பிடிக்கு வெளியே இருக்கும் மக்கள் அதிபயங்கரச் சூழலில் வாழ்வதான கட்டுக்கதைகளை விண்ணாணிப்பதன் மூலம், புதுக்குடியிருப்பில் இருக்கும் மக்களை அச்சுறுத்தியும், உசாரேத்தியும் அழிவுக்குள் இருக்கும்படி நிர்ப்பந்திக்கும் ஆவேசங்களை இவர்கள் தணித்துக்கொள்ள வேண்டும். அவர்களைப் பகடைக்காய்களாக்கி தமிழீழத்திற்கான முடிவற்ற போரை நீடிக்கும் கபடத்திலிருந்து உலகத் தமிழர்கள் வெளிவர வேண்டும்.

தமிழீழக்கனவை உள்ளே ஒளித்துவைத்து, வெளியே மனிதாபிமானத்தைப் பொங்கவிட்டுக் கொண்டிருப்பதன் மூலம் அந்த மக்களைக் காப்பாற்றிவிட முடியாது. சர்வதேசம், தமிழ்ப் பயங்கரவாதத்துக்குக் கண்ணை மூடிக்கொண்டு, அதை வசதியாக மறந்துவிட்டு நம்மைப்போலத் தமிழபிமானத்தில் மட்டும் துடிக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. தமிழீழப் போராட்டம் வெறும் பயங்கரவாதமாகச் சீரழிந்து உலகால் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டே அந்த மக்களைக் காப்பாற்றும் வழிமுறைகளை நாம் காணவேண்டும்.

**— சுல்தான் —**

நம்மைக் கைவிட்டுவிட்டதாக உலகை நாம் குறைகூறிக் கொண்டிருப்பதை விடுத்து, நம்முடைய எந்தத் தவறுகளால் இன்றைய தமிழீழப் போராட்டம் இந்தியாவாலும், சர்வதேசத்தாலும் எதிர்க்கப்படுகிறது அல்லது கண்டுகொள்ளாமல் விடப்படுகிறது என்பதை தமிழாவேசம் கடந்த அறிவுடன் நிதானிக்க வேண்டும். இன்றைய நிலையில் வீராவேசமும் வெற்றுச்சவடால் பொங்குகையும் மேலும் மேலும் மக்களை அழித்துக் கொண்டிருப்பதை உலகப்புலித் தமிழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழை, ரோசத்தை, வீரத்தை, ஆவேசத்தைப் பொங்கவிடுவதற்குப் பதிலாக நம்முள்ளே கருணையைப் பொங்கவிட வேண்டும். அதுதான் நம்மை வாழவைக்கும்.

மனதுக்கு நிம்மதி

# நல்லதை நினையுங்கள்!

நஞ்சு என்று சொல்லத்தக்க எண்ணங்கள் சில உண்டு. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடல் நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் காட்டிலும் அதிகம்.

பலர் மன நோய்க்கு இரையாகக் காரணம், மனத்துக்குப் போதிய போஷாக்கு இல்லாமையே.

ஊட்டச்சத்து நிறைந்த எண்ணங்கள் குறையும் போது, உள்ளத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

உடலுக்குப் பயிற்சி தருவது போல் மனத்துக்கும் பயிற்சி தர வேண்டும்.

இல்லாவிடில் மனோ வியாதிக்கு ஆளாகும் அபாயம் உண்டு.

உள்ளம் ஆரோக்கியமாக இல்லையென்றால் போதிய எண்ணப் பயிற்சி இல்லை என்பதே காரணம்.

மனநோய்க்கு இரையாகியுள்ளவர்களில் பெரும்பாலானோர் அந்த நிலையை அடைந்ததற்குக் காரணம் மனத்துக்குத் தினசரி கொஞ்சம் விஷம் கொடுத்து வந்ததுதான் - நச்சு எண்ண வடிவில்.

நச்சு எண்ணங்கள் மனத்துக்குள் எப்படிப் புகுந்துவிடுகின்றன? நீங்கள் அவற்றை நினைப்பதால்!

நஞ்சைப் போலவே நச்சு எண்ணங்கள் கொடியவை.

நச்சு எண்ணங்கள் உடலளவில் உங்களைக் கொல்லலாம்; கொல்லாமலும் விடலாம். உங்கள் முழுமனத்தையும் அழிக்காமல் போகலாம்.

ஆனால் அவை மனத்தின் முக்கியமான பகுதியை - குறிக்கோளை நோக்கி நடைபோடும் பகுதியை - நிச்சயமாக அழித்துவிடும்.

நச்சு எண்ணங்கள் முதலில் மனோசக்தியை - குறிக்கோளை அடையும் வலிமையைத் தாக்குகின்றன. பின்பு அதைக் கொன்றுவிடுகின்றன.

வாழ்க்கையின் எதிர்பாராத மாற்றங்களும் பாதுகாப்பில்லாத சூழ்நிலைகளும் உங்களுக்குத் தெரிந்தவர்களில் பலபேரை ஓரளவுக்கேனும் பாதித்து வருவதை நீங்கள் நேரில் பார்த்திருக்கக்கூடும். அல்லது பத்திரிகைகளில் படித்திருக்கக்கூடும். அவர்களது பரிதாப நிலைக்கு நச்சு எண்ணங்களே காரணம் என்பது உங்களுக்கு வெளிப்படையாகப் புலப்படாமல் இருக்கலாம்.

இந்த நச்சுப் பட்டியலைப் படியுங்கள்.

1. வன்முறை : உலகம் முழுக்கக் கொள்ளை நோய் போல் வன்முறை பரவி வருவதைக் காண்கின்றோம். அன்றாடம் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளின் விவரம் நமக்கு முக்கியமில்லை.

வன்முறையின் பின்னணியில் உள்ள மனோதத்துவம்தான் முக்கியம். உடலுக்கு ஏற்படுத்தப்படும் ஊறு இருக்கட்டும். வன்முறையில் ஈடுபட்டதன் விளைவாக, ஈடுபட்டவர்களின் மனத்திலும் வன்முறைக்கு இலக்கானவரின் மனத்திலும் என்ன வகையான பாதிப்பு ஏற்பட்டது என்பதை ஆராய்வதே நம் வேலை.

வன்முறை, 'தான்' என்ற அகம்பாவத்தின் அறிவிழந்த வெளிப்பாடாகும். சொந்தப் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்ளும் அறிவில்லாதவர்களால் வேறு வழியின்றிக் கடைசிப்பட்சமாகக் கடைப்பிடிக்கப்படும் வெறித்தனமான சமாளிப்பே வன்முறை. வாழ்க்கையை அறிவுபூர்வமாக அணுகக் கூடிய ஆற்றல் முற்றிலுமாக இழக்கப்படுவதன் அடையாளமே வன்முறை.

வன்முறையில் பலவகை உண்டு. அவற்றைப் பட்டியல் போடவோ வர்ணிக்கவோ தேவையில்லை.

மனத்தில் விஷம் கலந்துவிடுகின்ற காரணத்தால் மிகவும் ஆபத்து நிறைந்தவை என்று பொதுவாகக் கருதப்படும் இரண்டு வகைகளை மட்டும் இங்கு ஆராய்வோம்.



அ. வன்முறை மிரட்டல்: அநேகமாக ஒவ்வொரு நாளும் அடி, உதை பற்றிய மிரட்டல்களைப் பற்றி நீங்கள் கேள்விப்படக்கூடும். சாதாரணமான தகராறுகளைக் கூட வன்முறை பற்றிய மிரட்டல்கள் (நேரடியான அல்லது மறைமுகமான) மிரட்டல்கள் அடிக்கடி நிகழக் காண்பீர்கள். முதலில் 'கோரிக்கை' (கோரிக்கையில் மிரட்டல் அடக்கம்)... அடுத்து, சவால்... ''பேச்சுவார்த்தைக்கே இடமில்லை!'' அடுத்து, பகைமை தோய்ந்த மிரட்டல்: ''எங்களது கோரிக்கைக்கு உடனடியாக இணங்காவிட்டால்...''.

எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! இதைவிட ஒரு மோசமான ஓர் அணுகுமுறை இருக்கமுடியாது!

இத்தகைய மிரட்டல் வெற்றிகரமான மனோதத்துவத்தின் அடிப்படைக் கொள்கைக்கே விரோதமானது. அப்படி இந்த மிரட்டல் பலித்து வேண்டா வெறுப்புடன் சில சலுகைகள் தரப்பட்டாலும் அவை உண்மையான சலுகைகளாக இருக்காது. அவகாசம் தேவை என்பதற்காகக் கையாளப்படும் தந்திரமாகவே இருக்கும். ஒரு மனிதனோ அல்லது ஒரு குழுவோ மற்றொரு மனிதனையோ குழுவையோ மிரட்டி நல்லவிதமாகக் காரியம் சாதிக்க முடியாது. எரிச்சலும் விரோதமும் உண்டாகத்தான் செய்யும். மிரட்டலுக்குப் பணிந்ததால் அவமானம் ஏற்பட்டுவிட்டதாக நினைப்பார்கள். சமயம் வரும்போது பழி தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடுதான் உடன்படுவார்கள்.

மிரட்டலுக்குப் பகைமையில்லாமல் பணிவது என்பது இயலாது. மனித இயல்பு அப்படி. மிரட்டுவோமேயானால் பதிலடி நிச்சயம் கிடைக்கும் என்பது உறுதி. எப்போது கிடைக்கும் என்பதுதான் கேள்வி.

மிரட்டல் சம்பந்தப்பட்ட எல்லா மனங்களிலும் நஞ்சு கலந்திருக்கிறது. ஒரு பிரச்சினையைச் சமாளிப்பதற்காக மிரட்டலைக் கருவியாக உபயோகிக்க நஞ்சு கலந்த ஒரு மனத்தால்தான் முடியும். மிரட்டல் என்பது புத்தி மழுங்கிவிட்டது என்பதற்கும் மனம் நோய் வாய்ப்பட்டிருக்கிறது என்பதற்கும் அறிகுறி.

ஆ. வன்முறை பற்றிய எண்ணங்கள்: சீண்டி விடப்படும் போதோ அல்லது பகைமைச் சூழ்நிலையிலோ இந்த வகையான பாதிப்பு ஏற்படக்கூடும். தங்கள் மனத்தில் நஞ்சு கலக்கப்படுகிறது என்ற உணர்வு இல்லாமலேயே பலர் வன்முறை எண்ணங்களில் மூழ்கி விடுவதுண்டு. எரிச்சல், அவமானம், ஆத்திரம், கோபம் இவற்றால் ஆட்கொள்ளப்பட்டு, தொல்லையின் பிறப்பிடம் வன்முறைக்கு இரையாக வேண்டும் என்று அவர்கள் சபிக்கிறார்கள். வன்முறையைப் பற்றி நினைத்த மாத்திரத்திலேயே அவர்களுக்கு ஆனந்தமாய் இருக்கிறது.

2. வெறுப்பு : மனத்தை அழிக்கக்கூடிய விஷயங்களில் அச்சத்திற்கும் வன்முறைக்கும் அடுத்தபடியாக உள்ளது வெறுப்பு. உண்மையாக, அது உள்ளத்தைக் கோணலாக்கி விடுகிறது. நேசிக்கத் தக்க மனிதர்களைக் கூட அது கேடுகேட்ட பேய்களாக மாற்றிவிடும். அவர்களுடைய வெறுப்புக்கு ஆளானவர்களைத் தத்தம் கோணல் புத்திக்குத் தோன்றிய வகைகளில் ஒழித்தே தீருவது என்ற குறிக்கோளுடன் அழிவு வேலைகளில் இறங்குவார்கள் - கொலை, கலகம், வெடிகுண்டு, தீ வைத்தல் போன்ற செயல்களின் மூலம் அந்த வன்முறை வெளிப்படலாம்... அல்லது வேலை நிறுத்தம், கடையடைப்பு, கோஷங்கள், வெறுப்புப் பிரசாரம் - இப்படிப் பொருளாதார வன்முறையாக வெளிப்படக்கூடும். அல்லது சூழ்ச்சி, சதிவேலை, பிறருக்கு தீங்கிழைப்பது போல் மனோசித்திரம் வரைதல் இப்படி எண்ண அளவில் வன்முறையாக வெளிப்படலாம். அல்லது, மற்றவர்களுடைய சுயகௌரவம், மானம், உள்ளம் ஆகியவற்றில் ஆழமாகக் காயம் ஏற்படுத்தக்கூடிய உணர்ச்சிகள் மூலம் வன்முறை வெளிப்படலாம்.

மனோதத்துவம் என்பது நல்லது செய்வதற்காக மட்டும் பயன்படுத்தப்படும் கருவி அல்ல. கசப்பான உண்மை என்னவெனில், சமுதாயத்தில் கலகங்களை மூட்டி, போராட்டங்களைத் தூண்டிவிட்டு, எதிர்ப்பு அணிகளையும் வேலைநிறுத்தங்களையும், கதவடைப்புக்களையும் நடத்தி, வெறுப்புப் பிரசாரத்தைப் பரப்பி, வெறுப்புக் கோஷம் எழுப்புவதையே தொழிலாகக் கொண்ட சிலர் இருக்கிறார்கள். இவர்கள் நல்ல இயல்புடன் பிறந்தவர்களைக்கூடக் கேடு கெட்டவர்களாக மாற்றிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கும் இந்த மனோதத்துவம் துணை போகும் அபாயம் உண்டு.

சமுதாயத்தில் கலவரங்களை ஏற்படுத்துவதையே தொழிலாகக் கொண்ட சில சுயவர்களுக்கு மனோதத்துவத்தின் மூலம் காரியத்தைச் சாதித்துக் கொள்வது சுலபம். அவர்களுக்கு இதனால் ஏராளமான வருமானம் கிடைப்பதில் ஆச்சரியம் இல்லை. அதிருப்தியுடன் இருக்கும் ஒரு கோஷ்டியில் சில முரடர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் தான் மானம் காக்கும் படை என்று புகழ்ந்துரைத்து, வெறுப்புப் பிரசாரம் மூலம் கலகங்கள், நாச வேலைகள், வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் இவற்றை நடத்துகின்ற சுலபமான வேலையை ஒப்படைப்பது எளிது.

இந்த உலகில் வெறுப்பது சுலபம். தனிப்பட்ட மனிதர்களைத் தனிப்பட்ட காரணங்களுக்காக ஏராளமான பேர் வெறுக்கிறார்கள். எண்ணம், உணர்ச்சி, செயல் இவற்றின் வழியாகச் செயல்படக்கூடிய வெறுப்புக்கு நீங்கள் ஆளாகிவிடாத வண்ணம் கவனமாக இருத்தல் வேண்டும். நீங்கள் பிறரை வெறுப்பதையும், பிறர் உங்களை வெறுப்பதையும் தவிர்ப்பதற்கு உதவக்கூடிய பல மனோ தத்துவ உத்திகள் உண்டு.

வெறுப்பை உங்கள் வாழ்க்கையிலிருந்து ஒழித்துக் கட்டிவிட்டால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!

உங்களிடம் இருப்பதாக நீங்கள் ஒப்புக் கொள்ள விரும்பாத இரகசிய வெறுப்புக்கள் உட்பட உங்கள் மனத்தில் இருக்கக்கூடிய எல்லா வெறுப்புக்களையும் ஒழிக்கத் தொடங்குவோம்.

வெறுப்பை ஒழித்துக் கட்டுவது மிக எளிது. இத்தனை நாள் வெறுப்பை ஒழிக்காமல் இருந்துவிட்டோமே என்று நீங்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு அது சுலபமானது. வெறுப்புக்கு இடம் கொடுக்காதிருந்தால் உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொண்ட எத்தனை தண்டனைகளைத் தவிர்த்திருக்கலாம் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஆக, இந்த விநாடி முதல் நீங்கள் வெறுப்புக்கு இடம் தரப் போவதில்லை. நிச்சயமாக நம்புங்கள்! உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் உள்மனத்தில் இந்தத் தீர்மானம் இறுக்கமாகப் பூட்டிக் கொள்வதை உணருங்கள். இது நிரந்தரத் தீர்மானம். நீங்கள் இனி வெறுக்கமாட்டீர்கள். எதையும் வெறுக்கமாட்டீர்கள். யாரையும் வெறுக்கமாட்டீர்கள். இது சத்தியம் என்பதை உணருங்கள்.

எப்போது வெறுப்பு இல்லையோ அப்போது உள்ளம் வெகு தூய்மையாக இருப்பதை உணர்கிறீர்கள். இல்லையா? சுமை நீங்கிய உணர்ச்சி... நிம்மதி... கட்டு அவிழ்ந்த சுதந்திரம்...

வெறுப்பிலிருந்து விடுபட்ட உணர்ச்சியை நன்றாக அனுபவியுங்கள். நீண்ட மூச்சு இழுங்கள். இப்போது மூச்சை வெளியே விடுங்கள். ஹாய்யா இருங்கள். புன்னகை செய்யுங்கள். சிரியுங்கள். மீண்டும் சிரியுங்கள். மறுபடியும் சிரியுங்கள். புதிதாகப் பெற்ற சுதந்திரத்தை ரசித்து மகிழுங்கள். சிரித்துச் சிரித்து உங்கள் வாழ்க்கையை விட்டு வெறுப்பைத் துரத்தி அடியுங்கள்.

நீங்கள் உங்கள் மனத்தில் நஞ்சு சேர்க்க ஒரு போதும் வெறுப்புக்கு இடம் தரப் போவதில்லை என்று தெரிந்து கொள்ளுங்கள்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல 312 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

M.J.பெர்னாண்டோ, 30/6, புனித லூசியா லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
02. M.Z.முஹம்மத், 406/5, துனுவில வீதி, அக்குறணை.
03. யதிகுலராஜா சயந்தன், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
04. செல்வி. கோபிகா பரிமளகாந்தன், கே.கே.எஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
05. திருமதி புஷ்பராணி, சுந்தரலிங்கம், 84/10, பாரதி வீதி, திருகோணமலை.
06. பாலசரஸ்வதி, தங்கவேலு, U",3/3, அண்டர்சன் தொடர்மாடி, கொழும்பு -05.
07. எம்.ஐ.எப்.இஷ்ரா இம்ரான், இல.393, "லாஸ்ட் ஹவுஸ்" யோனகபுர திக்குவல்லை.
08. திருமதி இரா.சாரதா, 170,தெல்பிடிய, அட்டாளை.
09. திருமதி வைடி.மூர்த்தி, 4, முருகன் பிளேஸ், ஹெவ்லொக் வீதி, கொழும்பு -06.
10. சீ.எம்.ஏ.அஸீஸ், 45/4C, ஆர்டன் வனம், ஹேனமுல்ல, சரிக்கமுல்ல.

### குறுக்கெழுத்துப் போட்டி (314)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | ■ | 15 | 16 | 17 | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | ■ | 30 |
| ■ | 32 | 33 | ■ | ■ | ■ |

**இடமிருந்து வலம்**

01. பாலா என்பதன் எதிர்பதம்
07. இது இல்லா விட்டால் சொல்லுப் போகும் என்பார்கள். (திரும்பியுள்ளது)
10. விபத்துக்களின் போது இது ஏற்படும்.
15. அறிஞன் என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது).
21. சிறு குழந்தைகளுக்குப் பாசத்துடன் இதிலும் முத்தமிடுவர். (குழம்பியுள்ளது)
25. நிலத்தைத் தோண்டும்போது எதிர்பாராமல் கிடைப்பது. (குழம்பியுள்ளது)
32. சூழலை மாசுபடுத்துவது.

**மேலிருந்து கீழ்**

01. அருச்சுனன் இதில் சிறந்தவன்.
02. இளமைப் பருவத்தில் முகத்தில் தோன்றுவது. (தலைகீழ்)
04. மனைவியை இழந்தவன். (குழம்பியுள்ளது)
05. நன்றிக்கு உதாரணமானவர். (குழம்பியுள்ளது)
12. மனப்பாடம் செய்தலைக் குறிப்பது. (தலைகீழ்)
15. உறுதி, நம்பிக்கை என்று பொருள்படும். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 312- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரு 1 | ண் 2 | தி 3 | ■ | பு 5 | ரா 6 |
| தீ 7 | ப 8 | ■ | தி 10 | வி 11 | ■ |
| ■ | ஆ 14 | நூ 15 | ■ | ■ | த 18 |
| வே 19 | ■ | ல் 21 | வெ 22 | ■ | வி 24 |
| ன் 25 | க 26 | ■ | ■ | தீ 29 | ■ |
| வி 31 | வி 32 | ட 33 | க 34 | ம 35 | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 31.03.2009 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-314
தினமுரசு, வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், கூப்பன் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.




**எல்லோரும்** ஆச்சரியத்துடன் அதையே பார்த்துக் கொண்டு இருந்த போது, அந்தப் பாம்பு வடிவச் சங்குகள், மானவிக்கிரமன் கைக்குள் போட்டுக் கொண்டவரை நோக்கி ஊர்ந்தன. அவர் சட்டென்று அங்கிருந்து இடம்பெயர்ந்தார். அதற்கு அவர் பிற்பாடு சொன்ன காரணம், பாம்பு ஒன்று அவரைக் கொத்த வந்ததுதானாம்.

அது தன்னை மட்டம் தட்டுவதற்காகச் செய்த வேலை என்று மானவிக்கிரமன் கருதினார்.

அதன் பிறகு மேற்குறிப்பிட்ட இரு குடும்பத்தாருக்கும் இடையிலுள்ள பகை அதிகமானது.

அதற்குப் பழிதீர்த்துக் கொள்ளும் நோக்கத்தில்தான் அவர் மாலினி என்ற ரக்ஷஸை ஏவி, சோபனாவைக் கொன்று, அந்த உடம்பில் மாலினியைப் புகுந்து கொள்ளச் செய்ததும்.

சோபனா வீட்டின் பின் புறத்தை அடைந்தாள்.

சமையற்கட்டின் வாசலருகில் பார்வைக் குறைவான கண்களால், அரிசியிலுள்ள கல்லைப் பொறுக்கிக் கொண்டிருந்தார் அவள் பாட்டி.

''பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது.

''சோபனா.... இதோ இந்த அரிசியில இருக்கிற கல்லைக் கொஞ்சம் பொறுக்கும்மா... வர வர கண்ணே தெரியமாட்டேங்குது!'' பாட்டி, அரிசியுள்ள முறத்தை அவளை நோக்கித் தள்ளினார்.

மனைக்குள் நுழைவதற்கான அனுமதி கிடைத்ததும் சோபனாவுக்குள் இருந்த மாலினி மகிழ்ச்சியடைந்தாள். காரணம் ஒரு ரக்ஷஸ், அனுமதி இல்லாமல் எந்த ஒரு வீட்டுக்குள்ளும் முதன்முறையாக நுழைய முடியாது.

மாலினி வீட்டுக்குள் நுழைந்தாள்.

பாட்டி, அங்கிருந்து நகர்ந்து வீட்டுக்குள் போனார்.

சோபனா முறத்தைத் தன் பக்கமாக இழுத்தாள். பிறகு தன் வலக்கையை

**தமிழில் சிவன்**

முறத்துக்கு மேலாகக் கவிழ்த்துப் பிடித்தாள். அப்போது ஆச்சரியகரமான சம்பவம் ஒன்று நடந்தது.

முறத்தில் அரிசியுடன் கலந்திருந்த நெல் மற்றும் கல் மொத்தமும் உயிர் பெற்றவை போல அவள் உள்ளங்கைப் பகுதியில் வந்து ஒட்டிக் கொண்டன.

மூடிய கையைத் திறந்தவள், தன் கையில் இருப்பதை வாசல் பக்கமாக ஊதினாள். உயிருள்ளவை போல அவை பறந்து வெளியேறின. அவளது சக்தியை நினைத்தபோது அவளுக்கே பெருமிதம் தோன்றியது.

பாட்டிதான் மதிய உணவைச் சமைத்தார். அவரே அப்பாவுக்கும் பரிமாறினார்.

''அம்மா இன்னிக்கு ஏதோ ஒரு விசேஷம் தெரியுதே.... எல்லாக் காய்கறியும் பிஞ்சாகவே இருக்கே!'' சாப்பிடும் போது அப்பா கேட்டார்.

''கோலோத்து லட்சுமிக்குட்டி இந்தப் பக்கம் வந்திருந்தாள், அவதான் குடுத்தா!'' சோபனா கூறினாள்.

அப்பா, அதை நம்பிவிட்டார். சோபனா மனத்துள் சிரித்துக் கொண்டாள்.

பகல் நேரம் கடந்தது.

வீட்டின் முன்புறம் இருந்த சிறு திண்ணையில் திருமேனி விளக்கு ஏற்றினார்.

இரவுச் சாப்பாடு மிகவும் எளிமையாக இருந்தது. இருப்பினும் நாராயணன் நம்பூதிரி அதில் திருப்தி அடைந்தார்.

'தன் மகளுக்கு ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது- அதுவும் ஒரே நாளில்!' அவர் யோசனையில் ஆழ்ந்தார். 'எல்லாம் லட்சுமிக்குட்டியின் பழக்கத்தால் ஏற்பட்டிருக்குமோ?'

வழக்கம் போல் தன் பேத்தியைப் படுக்க வருமாறு அழைத்தார் பாட்டி.

''பாட்டி... நீங்க போய்ப் படுத்துக்குங்க...., நான் பின்னாடியே வர்றேன்.'' மாலினி கூறினாள்.

களைத்துப் போயிருந்த பாட்டி படுத்த உடனேயே நல்ல தூக்கத்தில் ஆழ்ந்தாள். ஆனால், சோபனாவுக்கு உறக்கம் வரவில்லை.

அவள், அன்று முழுவதும் எதையுமே சாப்பிடவில்லை. அவளுக்குத் தேவையான உணவு அந்த வீட்டில் கிடைக்கவில்லை. அவளது தேவை வேறொன்றாக இருந்தது.

நள்ளிரவு நேரம்.

நாராயணன் நம்பூதிரி தென்புற அறையில் படுத்திருந்தவர் திடுக்கிட்டுக் கண் விழித்தார்.

எங்கிருந்தோ ஒரு சத்தம் கேட்டது.

ஓர் அலறல்!

அலறல் கூட அல்ல; பயங்கரமான உயிர் வேதனையை வெளிப்படுத்தும் பயக்குரல்.

அந்தச் சத்தம் எழுந்தது மனிதரிடமிருந்தா அல்லது ஏதாவது மிருகத்திடமிருந்தா என்பது அவருக்கு விளங்கவில்லை! எப்படியிருந்தாலும் அவர்களாக விழிக்காவிட்டால், தூங்குபவர்களை எழுப்ப வேண்டாம் என்று நினைத்தார்.

டார்ச் லைட்டைத் தேடியெடுத்து எரிய விட்டுப் பார்த்தார். பாட்டரி வீக்காகி இருந்தது. அதை அங்கேயே போட்டுவிட்டு சங்கிலி விளக்கையும், தீப்பெட்டியையும் எடுத்துக் கொண்டார். அதைப் பற்ற வைத்தார். கையில் பிடித்தபடி வீட்டின் முன் புறம் வந்தார்.



ஏதோவொன்று கை கால்களைப் போட்டு அடிக்கும் சத்தம். அதுவும் தொழுவத்தின் பக்கமிருந்து கேட்டது. அந்தப் பகுதியை நோக்கி விரைந்தார்.

அங்கே அவர் கண்ட காட்சி மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

ஒரு வேளைக்கு ஐந்து படி பால் கறக்கும் கொழுத்த பசுமாடு, தரையில் கிடந்து துடித்துக் கொண்டிருந்தது.

அதன் கழுத்துப் பகுதியிலிருந்து இரத்தம் சன்னமாக வடிந்து கொண்டிருந்தது.

திருமேனி கையில் இருந்த விளக்குடன் வலப்புறம் திரும்பினார்.

திடுமென்று விளக்கின் திரியை யாரோ இழுத்துவிட்டது போல், அது ஒரு புறமாகச் சரிந்தது!

**அந்தக்** காட்சியைக் கவனித்த நாராயணன் நம்பூதிரியின் உடல் பயத்தால் நடுங்கத் தொடங்கியது. மறு விநாடியே, திரி, விளக்கிலிருந்து நழுவிக் காணாமல் போனது. கண்களையே குத்தினால் கூடத் தெரியாத கும்மிருட்டு, தொழுவத்தைக் கவ்வியிருந்தது.

தரையில் படுத்திருந்த பசுவின் முனகல் இப்போது சுத்தமாக நின்று விட்டிருந்தது.

''என்னப்பா நடந்தது?'' மிக நெருக்கத்தில் சோபனாவின் குரலைக் கேட்டதும் சற்று ஆறுதல் அடைந்தார் நாராயணன் நம்பூதிரி.

''பசுவை ஏதோ ஒண்ணு கடிச்சிருக்கு. அதோ கழுத்து உடை பட்டிருக்கிறதாத் தோணுது.'' நம்பூதிரி திகைப்பை மறைக்க மாட்டாமல் கூறினார்.

''நான் வேணும்னா வேற விளக்கைக் கொண்டு வரட்டுமாப்பா?''

*(தொடர்ந்து மிரட்டுவாள்...)*

---

# ஊமை விழிகள்!

சிறுகதை

**நேரம்** நடுச்சாமத்தைக் கடந்தும் பானுவினுடைய கண்களை மட்டும் இருள் சூழத்தவறியது. புரண்டு புரண்டு படுத்தும் அவள் மீண்டும் மீண்டும் தோற்றுப் போனாள். தனக்கு ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்களையும், தான் காதல் நாடகத்தில் ஏமாற்றப்பட்டு விட்டதையும் எண்ணியபடி, அதை மறக்கவும் முடியாமல் தன்னையே வெறுத்துக் கிடந்தாள். அவள் தன்னைத் தானே வெறுக்கக் காரணம் தான் என்ன?.. இரண்டு வருடங்களுக்கு முன்னதாய் யாழ். நகரிலே அவளுடைய கண்கள் சந்தித்த; அந்த முதலாம் பார்வையிலேயே அவள் மனதினை ஈர்த்தெடுத்த ஒரு ஆண்மகன் தான்! ''பள்ளிக்காதல் உருகும் பனிமலை'' என அவள் மனம் எடுத்தியம்பிய அக்கணப் பொழுதிலே மறந்துவிட்டது. அவன் கண்களை மட்டும் பார்த்த அந்த நொடிப் பொழுதிலே தன் இதயம் பாரமானதை அவள் உணர்ந்தாள். அடுத்த நொடிப் பொழுதே அவனுடைய அழகிய விம்பம் அவள் மனத்திரையில் அழியாவிம்பமாய் பிரதிபலிக்கலாயிற்று. அவளை அவன் கடந்து சென்ற போது மீண்டும் ஒருமுறையேனும் அவன் காந்தப் பார்வை தன் மேல் விழாதா? என ஏங்கினாள். அப்போதே பானுவினுடைய வாழ்க்கையில் ஏமாற்றங்கள் தலைகாட்ட ஆரம்பித்தது. ஆம்! அவன் அவளை பார்க்காமலேயே சென்றுவிட்டான். ஏமாற்றத்துடன் ஏக்கத்தையும் தன் மனதினுள் புதைத்து விட்டாள். மீண்டும் அவனை ஒரு முறையாவது பார்க்க முடியாதா? என பானு தவிக்க ஆரம்பித்துவிட்டாள். அவனுடைய அந்த ஒரு நொடிப் பார்வையுடனேயே தன் எதிர்காலத்தைக் கடத்தி விடுவோம் என எண்ணி வாழத் தொடங்கினாள்.

''வாழ்க்கை ஒரு அழகிய பயணம்'' ஆகையால் ஆண்டுகள் இரண்டு உருண்டோடியது. பானு தனது எதிர்காலத்தை மனதில் கொண்டு தனது மேற்படிப்பிற்காக தந்தையின் ஆசைப்படியும், தாயின் ஆசிகளுடனும் யாழ்.நகரில் பிரபல்யமான அரச கல்வி நிறுவனம் ஒன்றில் இணைந்து தன்னுடைய கல்விப் பயணத்தை இனிதே தொடங்கினாள். காலம் பானுவிற்கு புதிய சூழல் மற்றும் பல புதிய நண்பர்களையும் அறிமுகம் செய்துவைத்தது. இருப்பினும் அவளுடைய மனதில் அவனைப்பற்றிய தேடல்கள் மட்டும் ஓடிக்கொண்டேயிருந்தது. அவள் எவ்வளவு முயன்றும் அவன் கண்களை மட்டும் அவளால் மறக்கவே முடியவில்லை. நாட்கள் பல நகர்ந்தன. பானுவினுடைய வசீகரப் பார்வையும், துடிப்பான சிறு செயல்களும் அவள் பின்னே பல ஆடவரை ஈர்த்தெடுத்தது. ஆனாலும் அவள் உள்ளமும், கண்களும் அவன் ஒருவரின் வருகைக்காகவே காத்துக்கிடந்தன. இரண்டு மாதங்களும் சந்தோஷம் பாதி; தேடல்கள் மீதியுமாகக் கழிந்தன. அவனுடைய புன் சிரிப்பில் அவள் இதயம் துடித்தது. அவன் கண்களில் அவள் ஆயுள் அடைக்கப்பட்டது.

அன்றொரு நாள் வகுப்பாசிரியர் சமூகம் தராத காரணத்தினால் பானுவின் வகுப்பறை முழுவதும் சிரிப்பொலியும், கூச்சல்களுமாய் எல்லோரும் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தனர். பானுவும் அவளின் உயிர்த்தோழிகளான அம்முவும், அனுவும் மிகவும் ஆர்வத்துடன் ஏதோ ஒரு பத்திரிகையினை புரட்டிக் கொண்டிருந்தனர். சக மாணவர்களும் தங்களுடைய வேலைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். திடீரென அங்கு மயான அமைதி பரவத் தொடங்கியது. எல்லோருடைய கண்களும் வகுப்பறையின் வாயிலை மொய்க்கத் தொடங்கியது. எல்லா மாணவர்களைப் போலவும் பானும் யாரது? எனப் பார்க்கும் ஆர்வத்துடன் தன் கண்களை வாயில் பக்கமாகத் திருப்பினாள். அந்தக் கணப்பொழுதில் அவள் மனதில் ஆயிரமாயிரம் பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. பனித்தூறல்கள் அவள் பல நாள் ஏக்கத்தைத் தணித்தது. ஆம்! அன்று பானுவினுடைய வகுப்பறைக்குள் நுழைந்தது, அவள் மனதினுள் இத்தனை காலமாய் சல்லரித்த எதிர்காலக் கனவு என திகைத்தாள். அவன் வகுப்பறைக்குள் வந்த போது எல்லாப் பெண்களின் பார்வையும் அவன் கண்களை உரசிச் சென்றது. அவள் தன்னையே மறந்திருந்தாலும் அக்கணம் அவள் கண்கள் சிவந்தன. அன்று அவளுடைய திடீர் மாற்றங்கள் அனைவரையும் திசைதிருப்பியது. பானுவின் இத்தனை மாற்றங்களுக்கான காரணம் உள்ளங்கவர்ந்த நாயகன் சகமாணவனாய் அவள் வகுப்பறைக்குள் நுழைந்துதான். என்ன செய்வது? இதை யாரிடம் சொல்லிப் புரிய வைப்பது என தெரியாமல் திண்டாடினாள். மற்ற மாணவர்களைப் போல அவளால் சாதாரணமாக அவனுடன் பேசமுடியவில்லை. இருப்பினும் ''சந்தோஷ்'' எனும் அவனுடைய நாமம் மட்டும் ஒருவகையாய் அறிந்துவிட்டாள். தான் மீண்டும் பிறந்ததாய் உணர்ந்தாள். அவள் சோலைக்குள் தென்றல் வீசத் தொடங்கியது. தூக்கத்தை வழிமறித்தாள்.

அவனிடம் அவள் உண்மையாக இருக்க அவள் மனம் எண்ணியும் அவனிடம் தன்னை அறிமுகப்படுத்த அவள் தயங்கினாள். தன்னை அறிமுகப்படுத்தியும்; தன்னையும், தனது காதலையும் ஏற்க மறுத்துவிட்டால்... மறுநிமிடம் அவள் செத்தே போய்விடுவாள். அவர்களுடைய தொலைதொடர்பு நாளுக்கு நாள் விசாலமாகியது. தன்னை மறந்து அவன் தேடல்களை ரசிக்க ஆரம்பித்தாள். அவளுடைய குறும்புத்தனம் அஸ்தமிக்கத் தொடங்கியது. நாளுக்கு நாள் அவனுடைய தேடல்களும் அதிகரித்தது. வகுப்பறையில் அவன் தன்னை நிதமும் தேடும் போது ரசித்த அவள் இதயம் அவன் ஏக்கங்களைக் கண்டவுடன் துடித்துப் போனாள். மனம் கலங்கி கண்கள் குளமாகியது. இருவரும் தங்களை அறியாமலே காதலிக்கத் தொடங்கினர். தொலைபேசி இணைப்பு காதல் பிணைப்பாய் மாறியது. அறிமுகமாகாமலே ஒருத்தரை ஒருத்தர் ஆழமாக நேசிக்கத் தொடங்கினார்கள். தன் புன்சிரிப்பாலும், வசீகரப் பார்வையாலும் ஈர்த்த அவனை தன் உலகம் என நம்பி ஒரு நாள் தன்னை தொலைபேசியில் அறிமுகம் செய்தாள். பெண்களுக்கே உரித்தான நாணத்தில் அவளும் விதிவிலக்கல்ல. அவனும் தன் அந்தஸ்தை விடுத்து அவளையும் அவள் காதலையும் முழு மனத்துடன் ஏற்று மணம் புரிவதாய் வாக்களித்தான். அவனைப் போலவே அவன் மனதும் சுத்தமாய் இருந்தது. தன்னைப் போல ஒருவருக்கும் இப்படி ஒரு காதலன் இல்லை என பெருமைப்பட்டாள். எல்லாக் காதலரைப் போல பல கற்பனைகள், ஆசைகளுடன் அவனுடைய கண்களை நேருக்கு நேராக சந்திக்க விரும்பி முதன் முதலாய் யாழ். பஸ் தரிப்பிடத்தில் அவனை சந்தித்தாள். தன் எதிர்காலம் அவன் கண்களில் தெரிவதாய் உணர்ந்தாள். அவனுடைய பார்வைக்கு ஈடு கொடுக்க முடியாமல் தரையைத் தழுவினாள். இருவரின் கல்விப் பயணத்துடன் காதல் பயணமும் நகர்ந்தது.

அவர்களுடைய எண்ணப் பரிமாற்றங்கள் பல விதமாக வகுப்பறையில் பரிமாறப்பட்டது. தொடர்ந்து இரண்டாம் சந்திப்பு தீபாவளி திருநாளன்று அவன் என்றுமே விரும்பாத நல்லூர் திருவாலயத்திலே அரங்கேறியது. அதே ஆலயத்திலே மூன்றாவது சந்திப்புடன் அவள் கனவுகளும் முற்றுப் பெற்றது. கடைசி சந்திப்பு அதுதான் என பேதை அவளுக்கு அப்போது புரியவில்லை. களிப்புடன் கழிந்த அவள் காதல் வாழ்க்கை களியாட்ட நிகழ்வில் சிதறடிக்கப்பட்டது. வாய் மொழிந்த வார்த்தைகள் யாவும் காற்றிலே சென்றது.

''அவன் தன்னை மறந்து வேறொரு ஆண்மகனை மணக்கும் படியும், தானும் தன் பெற்றோர் சொல்லும் பெண்ணை மணம் முடிக்கப் போவதாகவும்'' கூறியனுப்பினான். என்றாவது ஒருநாள் அவன் மடியிலேயே தன் உயிர் பிரிவது நிச்சயம் என்ற முடிவோடு தன்னை சமாதானப்படுத்தினாள். இடியோசை கேட்டு திடுக்குற்று எழுந்த பானு தான் வாழ்க்கையில் ஏமாற்றப்பட்டதை எண்ணியபடி 'அலரி மரம்' நோக்கி நடக்க ஆயத்தமானாள்... என்றாவது ஒருநாள் தன் காதலிக்காக இன்னோர் தாஜ்மஹால் கட்டுவான் என்ற நம்பிக்கையுடன்...



**இ.தேனுகா,**
**யாழ்ப்பாணம்.**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!

**தவறான** செயல்களை உலகத்திற்கு மறைத்துவிடலாம்; ஆனால் தன் மனதுக்கு மறைக்க முடியாதே. இந்த உண்மையை எவராலும் மறைக்க முடியாது என்பது ஒவ்வொரு நெஞ்சங்களிலும் பதிந்து கிடக்கின்ற உண்மை. ஆயினும் மறைக்க முயன்று, முயன்று தோற்றுப் போனவர்கள்தான் அதிகம். அதிலும் செய்த தவறுகளுக்குத் தண்டனை கிடைத்துவிட்டால் ஓரளவிலாவது மனம் சாந்தியடைய வாய்ப்பிருக்கும் இல்லையேல் அவன் மனமே அவனைத் துன்புறுத்துவது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது என்பதை விளக்க வந்த வள்ளுவப் பெருந்தகை.

**"வானுயர் தோற்றம் எவன் செய்யுந் தன்நெஞ்சம்**
**தானறி குற்றப் படின்"**

தன் நெஞ்சமே குற்றம் என்று அறிந்த செயலைச் செய்தால், வானளாவிய குடிச்சிறப்புகள் இருந்தும் என்ன பயனைத் தரும் என்பதாம்.

---

# மாலை பகையானதே!

தருவது **கற்பகன்**

**அவன்** வருகைக்காகக் காத்திருக்கிறாள் அவள். எதிர்பார்த்த நேரத்தில் அவன் வரவில்லை என்றதும் ஏக்கத்தில் ஆழ்ந்தது மனது. வரவேற்கக் காத்திருந்தும் வரவில்லையென்றால், மனதுக்குள் ஒரு பொருமல், வேதனை அத்தனைக்கும் அவன் வருகை மருந்தாகுமா?

செங்கமலத்தின் முகம் என்றுமில்லாதவாறு வாட்டமுற்றிருந்தது கண்டு, அவள் உயிர்த்தோழி அல்லியின் கேள்விகள் சுடுசரங்களாக இருந்தன. ஆயினும் அவள் பதிலேதும் கூறாமல் மௌனமாயிருந்தது பிடிக்கவில்லையோ தெரியவில்லை. 'உன்பாடு' என்று கூறிவிட்டுக் குளக்கரையை விட்டு எழுந்து சென்றுவிட்டாள்.

கதிரவன் எங்கு சென்றிருப்பான்? செங்கமலத்தின் மனதில் கேள்விக்கு மேல் கேள்வி. அவனோடு கூடி மகிழ்ந்த இனிமையான நாட்களெல்லாம் மனதில் எழுகின்ற நினைவலைகளில் மிதக்கின்றன மறக்கக் கூடியவைகளா அவைகள்? பகல் நேரமல்லா மற்றவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட முடியாதே! என்று அவள் கேட்டதும் "பைத்தியம்" பறைசாற்றிவிட்டா நாம் உறவாடுகிறோம்? அதோ பார் ஆற்றங்கரை மணற்திட்டைக் காட்டினான். கார் காலங்களில் காட்டு வெள்ளம் பெருக்கெடுத்து வரும் போதுமட்டும் அதில் கரைபுரண்டோடும் நீர் வசந்தம் தொடங்கியதும் ஆங்காங்கே மணற்திட்டுகள் தோன்றிவிடும். அவைகளில் ஒன்றைத்தான் செங்கமலத்திற்குக் காட்டினான் அவன். மறுப்பேதுவும் தெரிவிக்கவில்லையவள். வெண்பட்டு மணற்திட்டில் அமர்ந்து கொண்டானவன். அவளோ இன்னும் அவன் முகத்தையே பார்த்த வண்ணம் நின்றிருந்தாள்.

"கமலம்! ஏன் இன்னும் நின்றுகொண்டிருக்கிறாய் இத்தனை பெரிய மணற்திட்டில் உட்காரவா இடமில்லை!" "உட்கார இடமிருந்தாற் போதுமா?" இது அவளது கேள்வி, முறுவலித்தானவன். உறங்குவதற்கு இடங்கேட்கிறாளா இவள்?" மெதுவாக அவள் கையைப் பற்றி இழுத்து அருகில் அமர வைத்தான் அவன், அவன் மடியில் சாய்ந்து கொண்டாள் செங்கமலம்; கதிரவனின் கண்கள் அவள் முகத்தை உற்று நோக்க அவள் கண்ணசைவின் அர்த்தம் புரிந்தது அவனுக்கு. காதல் மயக்கம் அதில் கரைபுரண்டோடியது. காந்தத்தைப் பாய்ச்சுகின்ற அவள் கண்கள் மட்டுமல்ல, அவள் மிருதுவான கூந்தல் அவன் மடியில் இடம்பிடித்த போது அதில் தோன்றிய சுகமோ அப்பப்பா! இதமான சுகத்தின் எல்லையைத் தாண்டி நின்றது. ஆனாலும் அது நெடுநேரம் நிலைக்கவில்லை. அவள் அவன் மடியை விட்டெழுந்து அமர்ந்து கொண்டாள். செங்கமலம் ஏன் எழுந்துவிட்டாய்? அவன் கேள்வியில் தாபம் குடிகொண்டிருப்பதை அவள் அறியாதவள் போல் "காலங்கடந்து கொண்டிருக்கிறது உங்களுக்குத் தெரியவில்லைப்போலும்" 'எதைப் பற்றிக் கூறுகிறாள்'? அவன் மனதில் ஏதோ தைத்தது.



குளக்கரை மணற்பரப்பு தென்றலின் தழுவலுக்கு ஏற்ப அசைந்து கொண்டிருக்கும் சிற்றலைகள் தாளம் போடுகின்ற ஓசையில், வண்டுகளின் ரீங்காரம் அவ்வவ் போது காதில் அலைமோதிக் கொண்டிருந்தன. தென்றலின் தன்மை லேசாக நடுக்கம் தோன்றிய போது செங்கமலம் அவனை இறுகக் கட்டிக் கொண்டாள். இதமான அந்த வேளை கதிரவனுக்கும் அவள் இதழ்களைக் கவ்வ வேண்டும் போலொரு ஏக்கம், தாபம், துடிப்பு அத்தனையும் மேலெழ அவள் அவனோடு சங்கமித்துவிட்டாள். இதமான இன்பம் நலங்குபாடும் தென்றலின் தாலாட்டுக்கிடையில் நடந்தேறி முடிந்துவிட்ட காதற் களியாட்டங்கள் அத்தனையும் ஒவ்வொன்றாக அவள் மனக்கண் முன் தோன்றி மறைகின்றன. கதிரவன் பிரிவுத் துயர் தாழவில்லை இன்னும். நிலவு தோன்றும் நேரம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. உறங்கிவிட்டிருந்த அல்லி சட்டென் றெழுந்தாள். எழுந்ததும் செங்கமலம் வாடிய முகத்தோடு இன்னும் அதே இடத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், "செங்கமலம் இப்படியே இருந்தால் மட்டும் எதுவும் நடந்துவிடாது. சென்றவர் வராமலா போய்விடுவார்?" என்றதும் வரமாட்டார் என்று தெரிந்தால் நான் மாண்டு விடுவேனடி இந்த நீரில் மூழ்கி. அவர் வருவார் என்ற நம்பிக்கையில்தான் இன்று உயிரோடு இருக்கின்றேன். அவள் இதயத்தில் இருக்கின்ற துயரம் நெடுமூச்சாக வெளிப்பட்டது. கண்களில் நீர் ததும்பி நின்றதைக் கண்ட தோழி, செங்கமலம் இத்தனை நம்பிக்கையோடு இருக்கிற போது ஏன் கண்ணீர் விடுகிறாய் தைரியமாயிரு," ஆறுதல் கூறினாள் தோழி. "கண்ணீரில் நீந்துவதுதானே காதற்பாடம் கற்றுக் கொண்டவரின் அனுபவமா இது? என்ற கேள்வி அல்லியின் மனதில் மின்னலாகத் தோற்றி மறைந்தது.

**அம்மை வாழி தோழி! நாம் அழ**
**நீல இருங்கழி நீலம் கூம்பும்**
**மாலை வந்தன்று, மன்ற**
**காலை யன்ன காலை முந்துறுதே.**
**-ஐங்குறு நூறு- 116**

---

சிந்தியா பதில்கள்

✉ மதப் பெரியோர்கள் கொலை போன்ற கடும் குற்றவாளிகளாகக் காணப் படுகின்ற நிலைமை பற்றி சிந்தியாவின் கருத்து என்ன?

*-என்.வசந்தி,*
*திருகோணமலை.*

திருக்கோணேஸ்வர ஆலயக் குருக்கள் தனது மனைவியைக் கொலை செய்து புதைத்ததும், அதற்காக அவருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டதும் உங்களைப் போல் பலரின் சிந்தனையைத் தூண்டிவிட்டுள்ளது.

இவ்வாறான குற்றவாளிகள் குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னர் வகித்த அத்தனை கௌரவப்பட்டங்களும் இரத்துச் செய்யப்பட வேண்டும். இதே மாதிரியான நடவடிக்கையை அரசியல்வாதிகளிடத்திலும் செய்யலாம் என்பது எனது அபிப்பிராயம்.

✉ சிந்தியா, யாழ்தேவி - வவுனியா புகையிரதப் போக்குவரத்து என்றெல்லாம் அவ்வப்போது பேச்சு அடிபட்டாலும், மதவாச்சியோடு தானே எல்லாம் நடக்கிறது.

*-கோ.வடிவேல்,*
*வவுனியா.*

மதவாச்சியில் நடக்கும் போக்குவரத்து அனுமதி மறுப்புக்கள், பாரிய பரிசோதனைகள் என்பன வவுனியா, மன்னார் மக்களுக்குப் பாரிய பிரச்சினைதான். யுத்தம் புதுமாத்தளனிற்குப் போய்விட்டபோதும், மதவாச்சியில் நெருக்கடி குறைந்த பாடில்லை. ஒரு வாரம் நேரடியாக வவுனியாவுக்குப் போகும் புகையிரதம் அநேக நாட்கள் மதவாச்சியில்தான் ஓய்வெடுக்கிறது. புலிகள் ஊடுருவி விடுவார்கள். வெடி பொருட்களைக் கொண்டு போவார்கள். அதைத் தடுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாகக் கூறப்பட்டாலும், மக்களுக்கு இதனாலான நெருக்கடிகளையும் கவனத்திற் கொள்வது உடனடித் தேவையாகும். இதற்குத் தீர்வு காண்பதில் இத்தனை பிரச்சினை இருக்குமாகக் கருதினால் யாழ்.போக்குவரத்து கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கான பயணங்கள் மிகவும் நெருக்கடிமிக்கதாகவே இருக்கப் போகிறது. எவரும் சொல்வது போல் இல்லாமல் அப் பகுதிகளின் இயல்பு வாழ்வு என்பது வெகு தூரத்திலேயே இருக்கிறது என்று நாம் நினைத்துக் கொள்வோம்.

✉ இரு பக்க அழைப்புகளுக்குள் இடர்படும் கிழக்கு மக்களின் நிலைபற்றி சிந்தியா கவலைப்படுவதுண்டா?

*-மா.வேலு,*
*வாழைச்சேனை.*

கவலைப்படுவதுண்டு. அரசியல், பன்முகத்தன்மை, ஜனநாயகம் ஆகிய பண்புகளுக்குப் பழக்கப்படாத மக்களினதும், அரசியல்வாதிகளினதும் நிலைமை கண்டு கவலைப்படுவதுண்டு.

எவனொருவன் சண்டிக்கட்டோடு இருக்கிறானோ அவனுக்குப் பின்னால் போவதுதான் அரசியல் வழிமுறையென்ற பிழையான வழிமுறையைப் புலிகள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகத் திணித்து விட்டார்கள். அதைத் திடீரென்று மாற்றுவது சிரமமானதுதான். இந்த நிலையை நினைத்தும் கவலைப்படுவதுண்டு.

✉ சிந்தியா, அடிக்கடி பொலிஸ் பதிவு செய்வதன் மூலம் புலிகளின் ஊடுருவலைத் தடுத்துவிட முடியுமா?

*-ஆர்.குமாரசுவாமி,*
*கல்கிஸை.*

புலிகளைப் பற்றிய தகவல்களைப் பொலிஸ் பதிவின் ஊடாகத்தான் தெரிந்து கொள்கிறார்கள் என்பது உண்மைக்குப் புறம்பானது. ஏற்கனவே பிடிக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் படைத்தரப்புக்குத் தேவையான தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பொலிஸ் பதிவு என்பது அவர்கள் சொல்வது போல் ஒருவகைப் பாதுகாப்பு ஏற்பாடுதான்.

✉ எதிர்க்கட்சியின் அரசியல் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைச் சொல்வீரா?

*-சு.கமலநாதன்,*
*சிலாபம்.*

பொதுவாக எதிர்க்கட்சிகளின் நிலையே மோசமாகத்தான் இருக்கிறது. கட்சிப் பிளவுகள், உட்பூசல்கள், அதிருப்திகளைத் தந்திரமாகக் கையாண்டு கட்சிக்குள்ளே விரிசலை ஏற்படுத்தி சிதறடிக்கும் சதி மிகக் கச்சிதமாக நடத்தப் பட்டுக் கொண்டிருக்கிறது. மகா ராஜதந்திரமாகக் கருதப்படும் இந்தக் கட்சிகளுக்குள் பிளவை உண்டுபண்ணும் செயற்பாடுகளுக்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் பலியாகியுள்ளன.

✉ சிந்தியா! எமது நாட்டில் எப்போது வெள்ளை வேன் அபாயமில்லாத புதுயுகம் தோன்றும்?

*-என்.ரமேஸ்,*
*வத்தளை.*

அதைச் சொல்வது கடினம். வெள்ளை வேன் இரகசியத்துக்குப் பின்னால் பல மர்ம உருவங்கள் உலவுகின்றன என்பது தெரிகிறது. இல்லையெனின் எப்பவோ இந்த வெள்ளை வேன் அபாயம் மக்களை விட்டுப் போயிருக்கும்.




✉ சிந்தியா, செல்போனில் கதைத்துக் கொண்டு காலத்தை வீணடிப்பதில் ஆண்களா, பெண்களா முதன்மையானவர்கள்?

*-மா.கிரிதரன்,*
*வவுனியா.*

செல்போன் பாவனையில் ஆண், பெண் யாரும் சளைத்தவர்களல்ல. வீதியில் செல்லும் போது ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிகமாக செல்போனில் உரையாடிக் கொண்டு போகிறார்கள். ஆண்களைவிடப் பெண்கள் உரையாடலில் முதன்மையானவர்கள்.

✉ சிந்தியா, தற்போதைய யுத்தம் புலிகளுக்கு முடிவுரை எழுதுகின்ற அதேவேளையில், தமிழரின் பிரச்சினையைச் சர்வதேச மட்டத்திலும் எடுத்துச் சென்றுள்ளது என்று நினைக்கின்றேன். நீர் என்ன நினைக்கின்றீர்?

*-இரா.மகாகணபதி,*
*மன்னார்.*

சரிதான். ஆனால் தமிழர்களின் போராட்ட பலம் எப்படிப் பேரம் பேசும் சக்தியாக மாற்றம் பெறவில்லையோ, அதுபோல் தற்போதைய சர்வதேசப்படுத்தலும் சரியான வகையில் நியாயமானவர்களால் முன்னெடுக்கப்படவில்லை. ஆகையால்தான் இன்று சர்வதேசத்துக்குக் கேட்கும் தமிழரின் குரல்கள், பூபாளமாக இல்லாமல் முகாரியாக ஒலிக்கிறது. அனுதாபம் பெறவேண்டிய எமது அவலக்குரல்கள் அர்த்தமற்றதாகிப் போய்க் கொண்டிருக்கிறது.

✉ ஐ.பி.எல். போட்டிகள் இந்தியாவிலிருந்து வேறொரு நாட்டுக்கு மாற்றப்படுவது தொடர்பான அபிப்பிராயம் என்ன?

*-எஸ்.காந்தரூபன்,*
*நீர்கொழும்பு.*

கோடிக்கணக்கில் பணம் புரளும் விளையாட்டுப் போட்டி அது. இந்தியா தான் ஆரம்பித்தது. தேர்தல் முடியும் வரை காத்திருக்க முடியாது. பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சிக்கலைத் தொடர்ந்து போட்டிகளை இன்னொரு நாட்டில் நடத்த ஆலோசிக்கப்படுகிறது. தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, டுபாய் ஆகிய நாடுகள் பரிசீலனையில் இருக்கின்றன.

இந்திய ரசிகர்களுக்கும் இந்தச் செய்தி ஏமாற்றம்தான். என்ன செய்வது. இவ்வருடத்தில் அதிக போட்டிகள் இருப்பதால் ஏப்ரலில் எப்படியோ ஐ.பி.எல். போட்டிகளை முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பணம் புரளும் இருபது-20 போட்டிகள் என்பதால் நிச்சயம் நடத்துவார்கள். அவர்கள் நிலையில் அது சரிதான். அநேகமான தென்னாபிரிக்காவில் போட்டிகள் நடைபெறலாம்.

✉ சிந்தியா "அருந்ததீ" படம் பார்த்தீர்களா எப்படி இருக்கிறது?

*-எம்.கஜானி,*
*தம்பலகாமம்.*

இது தெலுங்கிலிருந்து தமிழுக்கு டப்பிங் செய்யப்பட்ட படம். பொதுவாக மொழி மாற்றப் படங்கள் பெரியளவில் வெற்றியடைவதில்லை என்ற குறையை அருந்ததீ தகர்த்துள்ளது. கோடி ராமகிருஷ்ணா இயக்கிய இப்படம் "அருந்ததீ" எனப் பெயரிடப்பட்டது. அனுஷ்கா பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கும் இந்தப் படத்திற்கு கிராபிக்ஸ் காட்சிகளின் உதவியும், ஆவிகள் பற்றிய காட்சிகளும் ரசிக்கும் படியாக அமைந்துள்ளது. "யாவரும் நலம்" படம் ஆவிகள் பற்றிய படம் அதை ஓரங்கட்டும் அமானுஷ்ய விடயங்களுடன் "அருந்ததீ" வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது "அருந்ததீ" காட்சிகளில்..

# மூன்று வருடங்களுக்கு முன்னர் ஜெனிவா பேச்சுவார்த்தையை நிராகரித்த புலிகள் இன்று யுத்த நிறுத்தத்துக்கு மண்டியிடுவது ஏன்?

"புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் முன் நிபந்தனையின்றிப் பேச்சுக்குத் தயாரென்று லண்டன் பத்திரிகையான 'சண்டே டைம்ஸ்' க்கு வழங்கிய பேட்டி கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியாகியிருந்தது. 2006 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைகளுக்கு ஜெனீவா சென்றிருந்த புலி இயக்கத் தூது கோஷ்டி அன்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்தால் இன்று இலங்கை அரசின் காலில் விழத் தேவையில்லை" என்கிறார் அரசியல் ஆய்வாளர் செல்வகுமார் நரேந்திரன்.

அப்போது சென்ற தூதுக்கோஷ்டியில் தமிழ்ச் செல்வன், நடேசன், இளந்திரையன், புலித்தேவன் ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் மூன்றாவது தடவையாக யுத்த நிறுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தத் திட்டமிட்டிருந்த தினத்துக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே இந்த யுத்த நிறுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஜெனீவா சென்றிருந்த புலி இயக்கத் தூதுகோஷ்டியில் அங்கம் வகித்த முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டார். இப்போது உயிருடன் இருப்பவர் இப்போதைய அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் மட்டுமே. இளந்திரையனைப் புலிகள் கொன்றுவிட்டனர். புலித்தேவன் காணாமல் போய்விட்டார்.



நடேசன்

இதற்கிடையில் வன்னி யுத்த வலயப் பகுதிக்குள் சிக்கியுள்ள மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனரென்று கூறி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கலந்துரையாட எடுக்கப்பட்ட முயற்சிக்குப் பின்னணியிலும் புலிகளே இருக்கின்றனர் என்கிறார் ஆய்வாளர் நரேந்திரன். மெக்ஸிகோ, ஒஸ்ரியா, கொஸ்ராரிக்கா ஆகிய நாடுகள் இலங்கை விடயத்தைக் கலந்துரையாடலுக்கு எடுக்க வேண்டுமென்று கோரியிருந்தன. இது இலங்கையின் உள் விவகாரமென்று கூறி சீனா வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இதற்கு ரஷ்யா, ஜப்பான், துருக்கி, வியட்நாம், லிபியா ஆகிய நாடுகளும் ஆதரவு தெரிவித்திருந்தன. அமெரிக்காவும் கூட இந்த விடயத்தை கலந்துரையாடலுக்கு எடுக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவளித்திருந்தது. யுத்த வலயப் பகுதிக்குள் மக்களை மனிதக் கேடயங்களாகப் புலிகள் வைத்திருக்காவிட்டால் மக்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்பது ஏன் இந்த நாடுகளுக்குப் புரிய மாட்டேன் என்கிறது என்றும் கேள்வி எழுப்புகிறார் நரேந்திரன்.

யுத்த வலயப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறுவதற்கு வசதியாக அரசாங்கமும் புலிகளும் தற்காலிக மோதல் நிறுத்தமொன்றில் ஈடுபட வேண்டுமென்று பல நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் கோரி வருகின்றன. மனிதக் கேடயங்களாக மக்களைப் பிடித்து வைத்திருக்கும் புலிகள், தப்பிச் செல்ல முனையும் மக்களைச் சுட்டுத் தள்ள முனைகின்றனர். அரசு மோதலை நிறுத்தினால் மக்களை வெளியேற புலிகள் அனுமதிப்பார்களா? அதற்கு அந்த நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் உறுதி அளிக்குமா? என்றும் கேள்வி எழுப்புகிறார் நரேந்திரன்.

## வினோ - மாவை எம்.பி.க்கள் பாராளுமன்ற வளாகத்தில் வாய்த் தர்க்கம்

யுத்த வலயப் பகுதியிலிருந்து தப்பிவந்த மக்களை வவுனியா நலன்புரி முகாம்களில் வைத்து அரசாங்கம் நன்கு பராமரித்து வருகின்றதென வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகாதர லிங்கம் தெரிவித்த கருத்து தமிழர் கூட்டமைப்புக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் இந்தப் பாராட்டை அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து அன்றைய தினமே இருவருக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் பொதுக் காரியதரிசியான மாவை சேனாதிராஜாவுக்குமிடையில் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது. பாராளுமன்றக் கட்டட வளாகத்திலேயே இந்தத் தர்க்கம் இடம்பெற்றது. 'கட்சியின் அனுமதியில்லாமல் எப்படி அரசாங்கத்தைப் பற்றிப் பேசுவீர்' என்று மாவை கேள்வி எழுப்பினார். நான் வன்னி மாவட்ட எம்.பி. எனது மக்களின் குறை நிறைகளைப் பற்றிக் கவனிக்க வேண்டியவன் நான். வன்னி மக்களும் தமிழ் மக்கள் தான் என்று பதிலடி கொடுத்தார் வினோ எம்.பி. நீர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியதும் எமக்குத் தெரியும் என்றார். மாவை எம்.பி. சுமார் ஐந்து நிமிடம் வரை இத்தர்க்கம் நீடித்தது.

## வவுனியாவுக்குத் தப்பி வரும் 60 ஆயிரம் மாணவர்களுக்கு கல்விசார் வசதிகள்

வன்னி யுத்த நிலப் பகுதியிலிருந்து சுமார் 60 ஆயிரம் மாணவர்கள் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்தவர்களையும் உள்ளடக்கியே இத்தொகை கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களுக்குத் தேவையான கல்விசார் நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வன்னி பெருநிலப் பரப்புக் கல்வி அபிவிருந்தி தொடர்பாக ஆராயக் கடந்த 24 ஆம் திகதி வவுனியாவில் கூட்டப்பட்ட மாநாட்டிலேயே இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசினார்.

"பாடசாலை மாணவர்களுக்கு உரிய இலவச சீருடைகள், பாடசாலை தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள பாடசாலைகளுக்குத் தாராளமாக வழங்கக் கூடிய ஏற்பாட்டை கல்வி அமைச்சருடன் இணைந்து மேற்கொண்டுள்ளேன். கணிதப் பாடத்திற்கான பரீட்சையை மீள நடாத்துவதற்கும் க.பொ.த. உயர்தர பரீட்சைகள் உட்பட ஏனைய பரீட்சைகள் தொடர்பில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கல்வி அமைச்சருடன் இணக்கம் காணப்பட்டுள்ளது" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் தொடர்பில் விசேட ஏற்பாடொன்றை மேற்கொள்ளவுள்ளேன். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி அவர்களுடனும் கல்வி அமைச்சருடனும் கலந்துரையாடி அவர்களது இணக்கப்பாடுகளைப் பெற்றுக் கொண்டுள்ளேன் என்றும் சொன்னார்.



பயங்கரவாதிகளின் தாக்குதல்களினால் மரணமடைந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உறவினர்கள் ஒன்று கூடிப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டார்கள். அம்பாறை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொலிஸ் உயரதிகாரிகளும், சமயப் பெரியார்களும், கொல்லப்பட்டவர்களின் நூற்றுக்கணக்கான உறவினர்களும் கலந்து கொண்டார்கள். அம்பாறை பிள்ளையார் ஆலயம், ஜும்மாப் பள்ளிவாசல், புத்தங்கல விகாரை என்பனவற்றிலும் மத வழிபாடுகள் இடம்பெற்றன. (படம்: ஏ.எச்.ஏ. ஹுசைன்)

## கொடப்பிட்டிய ஜும்மா.... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதினேழாம் திகதி அசங்க கைது செய்யப்பட்டான். தற்கொலைக் குண்டுதாரியின் தோற்றத்தைக் காட்டும் உருவப்படம் ஊடகங்களில் வெளியானதை அடுத்துப் பலர் தற்கொலைக் குண்டுதாரி பற்றிய தகவல்களைப் பொலிஸாருக்குத் தெரிவிக்க முன்வந்தனர். அஜித் ஜானக சம்பத் என்ற பிச்சை எடுக்கும் சிறுவனும் தனக்குத் தற்கொலைக் குண்டுதாரியைத் தெரியுமென்று பொலிஸாரிடம் கூறியிருந்தான். மாத்தறையிலுள்ள இராணுவ முகாம்கள் பற்றிக் குண்டுதாரி அடிக்கடி தன்னிடம் விசாரித்ததாக அவன் தெரிவித்திருந்தான். தற்கொலைக் குண்டுதாரி பற்றித் தகவல் தருவோருக்குப் பத்து இலட்ச ரூபா சன்மானம் வழங்கப்படுமெனப் பொலிஸார் அறிவித்திருந்தனர். இதனைப் பெறும் நோக்கில் சிறுவர்கள் பொய்களைக் கூறுகின்றனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். இதுவரை தற்கொலைக் குண்டுதாரி பற்றி ஆதாரபூர்வமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## பிரபாகரன் தண்டிக்கப்படவேண்டும்;...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஆம். நான் உண்மையைத்தான் சொல்கிறேன்" என்று கூறிய அமைச்சர் மேலும் தெரிவித்தார். "புலித் தலைமை தண்டிக்கப்பட வேண்டும். இன்றைய உங்கள் துயரங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் புலித் தலைமையே காரணம். பிரபாகரனும் டக்ளஸ் தேவானந்தாவும் வேறு வேறு அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக நான் இதனைச் சொல்லவில்லை. ஒரு காலத்தில் நானும் ஆயுதம் ஏந்தியவன்தான். அந்தக் காலத்தில் போராட்டம் நியாயமாக இருந்ததால் இயக்கங்கள் ஆயுதம் ஏந்தியதை வரவேற்றோம். ஆனால் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் பொன்னான வாய்ப்பாகக் கிட்டியது. சுய இலாபத்துக்காக அதனையும் குழப்பியடித்து, அதற்குப் பின்னர் கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் குழப்பியடித்தவர் பிரபாகரன். மனித குலத்தின் விரோதியாக மாறிய பிரபாகரன் தண்டிக்கப்பட வேண்டும். தவறாக வழிநடத்தப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்" என்று சொன்னார் அமைச்சர் டக்ளஸ்.

## யுத்த வலயப் பகுதிகளிலிருந்து... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுங்கள். உங்களுக்கு ஆவன செய்து தரப்படும். இது காலவரை நீங்கள் புலித் தலைமையின் கீழ் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வாழ்ந்திருந்தீர்கள். உங்களுக்குப் பேச்சு சுதந்திரம், தொழில் சுதந்திரம், உயிர் வாழும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரமெல்லாம் அங்கு மறுக்கப்பட்டன. இப்போது நீங்கள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்குக் கீழே வந்திருக்கிறீர்கள். இங்கே உங்களுக்கு மேலே குறிப்பிட்ட அனைத்துச் சுதந்திரங்களும் உண்டு. உங்களுக்கு இங்கே இருக்கும் பிரச்சினைகள் சில நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்படும்.

கடந்த காலத் தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் சரியாக இருந்திருக்கவில்லை. இதனால்தான் நீங்கள் இன்று இந்தளவு பிரச்சினைகளை எதிர்கொள்கிறீர்கள். உயிர், உடைமைகளை இழந்து நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். உயிர் இழப்புக்கள் ஈடு செய்யப்பட முடியாதவை. உங்களுக்கான நஷ்டஈடுகள் பெற்றுத் தரப்படும்.

இருக்கின்றவற்றைப் பாதுகாப்பதற்கும், ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கும் ஓரணியில் திரளுங்கள். கடந்த காலங்களில் இரத்தம் சிந்துவதற்கு ஓரணியில் திரண்டீர்கள். இதனால்தான் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டது. ஒரு காலத்தில் போராட்டம் தேவைப்பட்டது. நானும் அந்தக் காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராடியவன்தான். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை - இந்திய ஒப்பந்தம் பொன்னான சந்தர்ப்பமாக வாய்த்தது. அதனைப் புலித் தலைமை தனது சுய இலாபத்திற்காகக் குழப்பியடித்தது. ஈ.பி.ஆர்.எல்.எப். அதனைத் துஷ்பிரயோகம் செய்தது. இந்த ஒப்பந்தத்துக்குப் பின்னரும் பிரேமதாசா, சந்திரிகா, ரணில், இன்றைய ஜனாதிபதி ஆகியோருடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பல சந்தர்ப்பங்கள் கிட்டின. இந்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பிரபாகரன் தனது சுயலாபத்துக்காகத் தட்டிக்கழித்து வந்திருக்கிறார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் கடந்த இருபது வருடங்களாக எங்களை நாங்களே அழித்து வந்திருக்கின்றோம். இருபது வருடங்களாக அழிந்தவற்றை இரண்டு வருடங்களில் எங்களால் தூக்கி நிறுத்த முடியும். அதற்கு நீங்கள் ஓரணியில் திரள வேண்டும். ஜப்பான் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் பாரிய அழிவுகளைச் சந்தித்தது. மக்கள் ஓரணியில் திரண்டு ஐக்கியப்பட்டதால் அந்த நாட்டை விரைவிலேயே மீளக் கட்டியெழுப்பிவிட்டனர்.

பிரபாகரனின் பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளனர். தனது பிள்ளைகளை வெளிநாட்டில் வைத்துக் கொண்டு உங்கள் பிள்ளைகளை யுத்தத்துக்குப் பிரபாகரன் இரை கொடுத்து வருகிறார். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் புலிகள் கொன்றபோது புலிகள் அதனைத் துன்பியல் சம்பவம் என்கின்றனர். இன்று நீங்கள் அனைத்தையும் இழந்து வந்திருக்கிறீர்கள். புலித் தலைமையைப் பொறுத்தவரை உங்கள் இழப்புக்களும் அவர்களுக்கு வெறும் துன்பியல் சம்பவம்தான். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

## புதுமாத்தளனில் புலிகள்... (5ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தலைமை எவ்வழியோ அவ்வழியே இவர்களும். இராணுவத்தின் படைத்துறைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தற்போதைய யுத்தம் தொடர்பாகக் கருத்துக் கூறும்போது இராணுவத்தின் பலத்துக்கு முன்னால் தற்போது எஞ்சியிருப்பது மிகச் சிறிய இலக்குத்தான். என்றாலும் அதை அடைவது சிரமமாக இருக்கின்றது. கடந்த காலத்தைப்போல் படையினர் கடுமையான தாக்குதல்களைத் தொடுக்க முடியவில்லை. நிதானமும், பொறுமையும் அவசியமாகின்றது. ஏன் என்றால் அங்கு மக்கள் இருக்கிறார்கள். மக்களுக்குள் ஒளிந்து கொண்டு புலிகள் தாக்குகிறார்கள். புலிகள் எதிர்பார்க்கும் எதிர்ப்பைப் படையினர் செய்ய முடியாது. மக்களையிட்டு சிந்தித்து மிகவும் மெதுவாகவே நகரவேண்டியிருக்கிறது. ஆகையாலேயே எப்போது இந்தச் சண்டை முற்றுப் பெறும் என்பதைச் சொல்ல முடியவில்லை என்றார்.

இருந்தபோதும் யுத்த சூனியப் பகுதிகளைத் தவிர, ஏனைய பகுதிகளை முற்றாகக் கைப்பற்றி புலிகளை முடக்குவது தொடரும் என்றும் அவர் சொன்னார். ஆகையால் படையினரின் நடவடிக்கை தொடரவே செய்யும். எல்லாமுனைகளும் வீழ்ச்சி கண்டு வருகையில் புலிகள் தமது இரகசிய நடமாட்டம், மறைமுக நகர்வுகள் எல்லாவற்றையும் கைவிட்டு மக்களோடு மக்களாக இருக்கும் சூழல் உருவாகும்.

அத்தகைய நிலையில் புலிகள் வெட்டியிருக்கும் பொறிக் கிடங்குகள் புலிகளுக்கே பொறியாக மாறும். புதுக்குடியிருப்பில் அரங்கேறுமென எதிர்பாக்கப்பட்ட இறுதித் திட்டம், புதுமாத்தளனில் நடக்கும். புலிகள் தமக்காக வெட்டியிருக்கும் பொறிக்கிடங்கில் பொதுமக்களையும் பலிகொடுத்து புதைக்கப் போகிறார்கள் என்பதுதான் வேதனைக்குரிய முடிவாகும்.

**16ஆம் பக்கத்தில் பிரசுரமாக வேண்டிய பட்டாம்பூச்சி தொடர் அடுத்த வாரம் வெளிவரும்.**

## இளந்திரையனைப் புலனாய்வு.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் அரசியல்துறைத் தலைவராக நடேசன் நியமிக்கப்பட்ட தகவலை 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவித்தவரும் இளந்திரையன் தான். புலிகளின் இரண்டாம் நிலைத் தலைவராக விளங்கிய மாத்தயா 'றோ' உளவாளியென்ற குற்றச்சாட்டின் பேரில் 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புலிகளால் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார். 1994 டிசம்பர் மாதம் மாத்தயா சுட்டுக் கொல்லப்பட்டார்.

புலிகள் இயக்கத்துக்குள் பல பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. என்ற போதிலும் மாத்தயாவுக்கு அடுத்தபடியாக உளவாளியென்ற குற்றச்சாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட உயர்மட்டத் தலைவர் இளந்திரையனே ஆவார். இளந்திரையனுடன் மிக நெருங்கிச் செயற்பட்ட மேலும் பதினேழு பேரும் அதே குற்றச்சாட்டின் பேரில் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இடம்பெற்ற மோதல்களையடுத்துப் புலிகளின் பிடியிலிருந்த பல பகுதிகளை இராணுவம் கைப்பற்றிய பின்னர், இவர் இயக்கத்தின் மீது நம்பிக்கை இழந்தாரெனக் கூறப்படுகின்றது. யுத்தத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாமென இவர் தெரிவித்த கருத்தே புலித் தலைமைக்கு இவர் மீது சந்தேகத்தைக் கிளப்பியது. இதன் பின்னர்தான் இளந்திரையன் கருணாவின் கையாளாகச் செயற்படுகிறாரென்ற சந்தேகம் தலைமைக்கு ஏற்பட்டிருக்கிறது.

# இந்த வாரம் உங்கள் பலன்

(26.03.2009 தொடக்கம் 01.04.2009 வரை)

ஞானயோகி, டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:–** மேஷராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் இருந்து வந்துள்ள தொல்லைகள் சற்றுக் குறைந்து காணப்படும். தந்தையின் உடல் நிலை பாதிப்புக்களால் பொருட் செலவுகள் ஏற்படலாம். நண்பர்கள் உறவினர்களின் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். புதிய தொழில் தொடங்குவதற்கான முயற்சிகளில் கால தாமதம் ஏற்படும். குடும்பத்தில் காரணமில்லாத விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் வந்து போகும்.

**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென்மேற்கு
**பரிகாரம்:-** சனிக்கிழமைகளில் ஐயப்பன் வழிபாடு செய்து அன்னதானம் செய்து வரவும்.

**ரிஷபம்:–** ரிஷபராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். புதிய வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் உறவினர்களின் வருகையால் பண உதவியும் மன நிம்மதியும் உண்டாகும். வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்காக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பண உதவிகள் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களால் எதிர்பார்த்து இருந்த ஆதாயம் கிடைப்பதில் சற்றுக் கால தாமதம் ஏற்படும்.

**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

**மிதுனம்:–** மிதுனராசி அன்பர்களே, கேது நன்மை தரும் கிரகமாகும். திருட்டுப் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்து சேரும். கோர்ட் வழக்கு விசயங்களில் முடிவுகள் கிடைக்கச் சற்று கால தாமதம் ஆகும். கணவன்-மனைவி உறவுகளில் சில கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வீட்டைத் திருத்தக் கட்டுவதற்காக நீண்ட நாட்களாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் நிறைவேறும். பொதுத்தொண்டுகளில் எச்சரிக்கையுடன் பணியாற்றுவது நல்லது.

**இராசியான எண்:-** 7
**இராசியான நிறம்:-** கருஞ்சிவப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் விநாயகர் வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:–** கடகராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். புதிய வீடு,வாகனங்கள் வாங்குவது போன்ற புதிய முயற்சிகளில் சில தடைகள் வந்து சேரும். கேட்ட இடத்தில் பணம் கிடைப்பதில் சற்றுக் கால தாமதம் ஏற்படும். நீண்ட தூரப் பயணங்கள் மூலமாக எதிர்பார்த்த காரியங்களில் சில பின்னடைவுகள் ஏற்படும். கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் சற்றுக் குறைந்து காணப்படும். பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் சற்றுக் குறைந்து நண்பர்களால் பொருளுதவிகள் கிடைக்கும்.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** செவ்வாய்க்கிழமைகளில் முருகன் வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:–** சிம்மராசி அன்பர்களே, ராகு நன்மை தரும் கிரகமாகும். கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மன நிம்மதி அடைவீர்கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளில் ஏற்பட்டு இருந்த தடைகள் நீங்கும். பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். நீண்ட காலமாக வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை கிடைக்கும். மனத் தைரியமுடன் எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள்.

**இராசியான எண்:-** 4
**இராசியான நிறம்:-** கறுப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் பிதுர் மற்றும் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:–** கன்னிராசி அன்பர்களே, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். எடுத்துக் கொண்ட காரியங்களை மிகுந்த முயற்சியின் மேல் செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் குறைந்து ஓரளவு மன மகிழ்ச்சி அடையலாம். பொருளாதாரத்தில் இருந்த பிரச்சினைகள் இன்னும் சற்றுக் நீடிக்கும். பிறருக்காக உதவி செய்து மன மகிழ்ச்சி அடைவீர்கள். தாயின் உடல் நிலையில் இருந்து வந்த தொல்லைகள் சற்றுக் குறைந்து காணப்படும். உத்தியோகத் துறையினர்களுக்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படலாம்.

**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:–** துலாராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். அரசு வழக்கு சம்பந்தமாகிய விசயங்களில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவியால் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். காணாமற் போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்து சேரக் கூடும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளுடன் கவனமுடன் நடந்து கொள்வதால் வீண் பிரச்சினைகள் குறையும். ஒரு சிலருக்கு நினைத்த இடங்களில் பணி இடமாற்றம் ஏற்படலாம். காதல் விஷயத்தில் நல்ல செய்திகள் கிடைக்கும்.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை ஆலய வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:–** விருச்சிகராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். நாட்பட்ட பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன் வாங்க முயற்சிப்பீர்கள். வாகனங்களில் எச்சரிக்கையுடன் பயணம் செய்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். மனைவியின் உடல் நலக் குறைவு காரணமாகப் பொருட் செலவுகள் உண்டாகும். கணவன்-மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தேவையற்ற புதிய நண்பர்களின் தொடர்புகளால் மன நிம்மதி குறைய இருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** புதன் கிழமைகளில் மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**தனுசு:–** தனுசுராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பையும் பாராட்டுக்களையும் பெறுவார்கள். புதிய வீடு மாற்றம் செய்யப் போட்டிருந்த திட்டங்கள் நிறைவேறும் திடீர் அதிர்ஷ்டம் மூலம் தனம் வந்து சேரும். பிள்ளைகளால் இருந்து வந்த தொல்லைகள் சற்றுக் குறைந்து மன நிம்மதி அடைவீர்கள். நண்பர்கள் உறவினர்களின் ஆதரவால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்தி வழிபாடு செய்து வரவும்.

**மகரம்:–** மகராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். பங்குத் தொழில் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுப் புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். வெகு காலமாகத் திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்குத் திருமணத் தடைகள் நீங்கித் திருமணம் ஆகும். திடீர் அதிர்ஷ்டமாகிய தந்தை-மகன் உறவுகளில் நல்ல சூழ்நிலை காணப்படும். மற்றவர்களில் பிரச்சினைகளில் அநாவசியமாகத் தலையிட்டு மனக் குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள்.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** புதன் கிழமையில் மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:–** கும்பராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். புதிய செய்தொழில் சம்பந்தமாகிய முயற்சிகளில் சிறிது தடைகள் வந்து விலகும். கணவன்-மனைவி உறவுகளில் சற்றுக் கவனமுடன் நடந்து கொள்வது நல்லதாகும். தந்தை வழிச் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் கிடைக்கும். தனப் புழக்கம் சுமாராகக் காணப்படும்.

**இராசியான எண்:-** 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென்கிழக்கு
**பரிகாரம்:-** வெள்ளிக்கிழமைகளில் மஹாலட்சுமி வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:–** மீனராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். பிரிந்துபோன கணவன்-மனைவி உறவுகளில் கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒன்று சேரக் கூடிய காலமாகும். செய்தொழிலில் நல்ல இலாபம் கிடைத்த போதிலும் சில பிரச்சினைகள் வந்து மிகுந்த பிரயாசத்தின் மேல் சரி செய்துவிடுவீர்கள். நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்களின் திடீர் வரவால் பொருட் செலவுகளும் மன நிம்மதிக் குறைவும் உண்டாகலாம். விபரீதமான எண்ணங்களை நினைத்து வீண் மனக் குழப்பத்திற்கு ஆளாக வேண்டாம்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.




உ

ஓம் சக்தி சிவமயம்

ஓம் அகத்தீஸ்வராய நமஹ

ஓம் ஆதி அகஸ்திய மஹாரிஷியின் திருவருளாலும் அநுக்கிரகத்தாலும் எமது 30 ஆண்டு கால அநுபவத்தின் மூலம் ஆன்மீகம், தியானம், மணிமந்திரம், சித்தமருத்துவம், ஜோதிடத்தின் வழியில் அனைத்து விதமான பிரச்சினைகள் நீங்கி ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வர்யத்துடன் வாழ அணுகவும்.

Contact:

Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar, Muligai Nambi, Mani Manthira, Vaithiya, Jothisa Galagnani
Gnanayohi Dr.p.Esakki, IBAM,RMP, D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur-627759
Thirunelveli District Tamil Nadu India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390 Email:Paramasivan_esakki@yahoo.com
Website:- www.gnanayohi.com Consultation by appointment only.


# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

**வணக்கமுங்கோ.** வைகைப் புயல் வடிவேலுவைச் சந்திக்கக் கிடைச்சுதுங்கோ. என்ன நடந்திருக்குமெண்டு பாருங்கோவன்.

***கா.பூ:-*** வணக்கமுங்கோ வடிவேல் சார்.

வடி :- பேச்சே ஒரு மாதிரி இருக்கே. சிலோன் பயலா நீய்...

***கா.பூ:-*** ஆமாங்கோ. எப்பிடி சுகமாக இருக்கீங்களா?

**வடி :-** ஏதோ இருக்கிறமப்பு. சிலோனில நிலைமை எப்பிடிப் போகுது சொல்லுங்கப்பு.

இங்க இருக்கிறவங்க ஆளுக்கொரு கதையா சொல்லுறாங்கப்பு. டாக்டர் ராமதாஸி ஒரு மாதிரி சொல்லுறாரு. கோபால்சாமி ஒரு மாதிரி சொல்லுறாரு. திருமா ஒரு மாதிரிச் சொல்லுறாரு. யாரு சொல்லுறதை நம்புறதுன்னு ஒன்னுமாத் தெரியமாட்டேங்குதப்பா.

இவ்வளவு நாளும் கலைஞரைய்யா தான் ஈழத் தமிழருங்க விவகாரத்தைப் பேசிக்கிட்டு இருந்தாரு. திடீருனு அம்மா கையில எடுத்திட்டாங்க. இப்ப பிரச்சினை அம்மா பக்கம் தாவினமாதிரித் தெரியுது. அதான்யா ஒண்ணும் தெரியமாட்டேங்குது.

***கா.பூ:-*** வடிவேலண்ண ஈழத்தில என்ன நடக்குதெண்டு ஆரம்பிச்சா நேரம் காணாது. முப்பது வருஷத்துக்கு மேற்பட்ட கதை இப்போதைக்கு நீங்க கேள்விப்பட்டதில பாதி உண்மை. பாதி பொய் எண்டு நினைச்சுக் கொள்ளுங்கோ.

**வடி :-** என்னப்பா இப்புடிச் சொல்லிப்புட்ட? என்னை விடப் பெரிய ஆளா இருப்பிய போல இருக்குதே..

***கா.பூ:-*** உப்பிடிச் சொல்லயில்லையுங்கோ. உங்க தானே தீக்குளிப்பெல்லாம் நடக்குது. அதான் உங்க நடக்கிற விஷயத்தைத் தெரிஞ்சு கொள்ளலாமெண்டு கேட்டன்.

**வடி :-** அது சரி. போடுற மாதிரிப் போட்டு எவுட்டு வாயிலிருந்து புடுங்கலாமுன்னு பிளான் போட்டிருக்கிய. ஓய்யா இந்த வலையில நான்தானய்யா சிக்கின. நம்பித்தானய்யா வாயத் தொறந்தேன். இப்பிடிப் பண்ணிட்டியளே.

***கா.பூ:-***வடிவேலுசார் என்ன சார் இப்பிடிச் சொல்லுறியள். உங்கள மாதிரி ஸ்டாருங்க தீக்குளிப்பு அது இது எண்டு எறங்கினாத்தானே நாலுபேரு திரும்பிப் பாப்பான்.

**வடி :-** ஏன்யா, ஏன்யா என் மேல இப்புடிக் கொலை வெறியோட அலைறிய. என்னைப் பாருங்கய்யா. எரிஞ்சவன் மாதிரித்தானே இருக்கிறன். அது போதாதின்னு எரிச்சு சாம்பலாக்கப்பாக்கிறியக.

யோய் எனக்கென்னவோ ஒன்ன விஜயகாந்துதான் அனுப்பி வச்சிருக்காரு போலை. எப்புடியாவது வடிவேலுவை உசுப்பேத்தி சோலிய முடிச்சிடுங்கனு.

உண்மையச் சொல்லுய்யா. ஒன்ன யாரு அனுப்புனாங்க?

***கா.பூ:-*** என்னை ஆரும் அனுப்பேல்லங்க. நான் தான் வந்தேன். சும்மா பகிடிக்குத்தான் சொன்னேன். இப்ப நெசமாகவே கேட்கிறன். ஏதோ தீத்தக்குளிப்பு மாதிரி தீக்குளிப்புச் செய்யிறாங்களே. அது என்ன ஏதெண்டு தெரியுமா? அதப்பற்றி என்ன நினைக்கிறியள்?

**வடி :-** ஆ... இப்ப ஆரம்பிச்சிங்க பாருங்க இதுதான் கரக்ட்டு... என்மேல நெருப்ப அள்ளிக் கொட்ட நினைக்கிறது தப்பு.

என்ன கேட்டிய தீக்குளிப்பத்தானே? ஆமாய்யா ஒவ்வொரு நாளும் ஒரு பய தீக்குளிக்கிறாங்களாமுனு செய்திதான் படிக்கிறேன்.

அதிலையும் பார்த்தீங்கனா திருமாவளவவுட்டு ஆளுங்கதான் தீக்குளிக்கிறாங்களாம். அப்புடி இப்புடினு பார்த்தாலும் பத்துப் பதினைஞ்சு பேருக்கு மேல செத்துப் போயிருப்பாங்க போல இருக்குதய்யா.

***கா.பூ:-*** அப்பிடிச் செத்து ஏதாவது நன்மை நடந்திருக்குமெண்டு நினைக்கிறீங்களா?

**வடி :-** எங்க நன்மை நடக்கிறது. நாதாரிப் பயலுக தலைவன் சொல்லுறானு தலையில தீயை வைக்கிறாங்க. இத்தன பேரு செத்தாங்களே என்னய்யா ஆச்சு. ஒண்ணுமாகலை. தலைவர்மாருக்குத்தான் மவுசு ஏறி இருக்குது.

பூரா பயலுகளும், உடம்ப ரணகலமாக்கிக்கிட்டு திரியிறாருங்க. தலையிருக்க வால் ஆடக்கூடாது எம்பாங்க. அதுபோலை மத்திய அரசு இருக்குதில்ல. அது பாத்துக்காதா? அதோடை ஆலோசனை நடத்திக் காரியத்தை செய்யிறதை விட்டுப்புட்டு அவனவன் தலைகால் தெரியாம ஆடுறாங்க. ஆடி என்னத்தைக் கண்டாங்க ஒண்ணத்தையுமில்லையே. இந்தப் பாருங்க எலக்ஷன் வந்ததும் யாரோடை கூட்டுச் சேர்ந்தா பதவி புடிக்கலாமுனு இப்பத் திரியிறாங்க. இதுநாள் வரைக்கும் ஈழத் தமிழர் பிரச்சினை பேசிக்கிட்டு அண்ணந் தம்பியாத் திரிஞ்சவங்க பதவினு வரும் போது அடிச்சுக்கிட்டு சாகிறாங்க. இதுதானய்யா தமிழ் நாட்டோட தலையெழுத்து. இதை நம்மளாளை மாத்தவா முடியும்? அதாலதான் அதைவிட்டுப்புட்டு நாம நாலு படம் நடிச்சமா அதில ரெண்டு பேரு நம்ம உதைச்சாங்களா அதப் பாத்துச் சனங்க சிரிச்சாங்களா, நமக்குப் பணம் கெடைச்சிச்சா போதுமடா சாமினு நம்ம பொழுது போயிக்கிட்டிருக்கனும்.

***கா.பூ:-*** ஓகே சார். இந்த வாரம் ஓகே. நேரம் முடிஞ்சு போச்சு பிறகு பாப்பம்.

## யாவும் கலப்படமற்ற கற்பனை

# அட்மிரல் நெல்சன்




**திசை** தெரியாமல் சுற்றிக் கொண்டிருந்த போது, ஒரு நல்ல மனம் படைத்த அதிகாரி நெல்சனுக்கு உணவளித்து, அவன் போகவேண்டிய கப்பலிலும் கொண்டு வந்து ஏற்றிவிட்டார். அந்தக் கப்பலின் கப்டனான அவன் மாமா, வந்த பையனை வரவேற்கவோ கவனிக்கவோ இல்லை. பிரயாணத்துக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக மூழ்கியிருந்தார். பால்க்லாண்ட் பயணம் எதனாலோ இரத்துச் செய்யப்பட்டது. இப்போது தான் காப்டன் ஸக்லிங்கின் கவனம் , தன் சகோதரி மகனிடம் திரும்பியது. வெஸ்ட் இன்டீஸுக்குச் செல்லும் வியா-பாரக் கப்பலில் இளைஞன் நெல்சனை ஏற்றிவிட்டார். மாலுமிகளின் வாழ்க்கை எப்படி என்பதைத் தெரிந்து கொள்ளட்டும் என்று.

இந்தக் கப்பல் பயணத்தில் இளைஞன் நெல்சன் - கடல், கப்பல்கள், அயல் நாட்டுக் கடற்கரைகள் பற்றியெல்லாம் நிறையவே அறிந்துகொண்டு திரும்பினான். இதன் பிறகு, தேம்ஸ் நதியில் சிறு படகுகள், நீண்ட தோணிகள், இவை-களைச் செலுத்தும் உற்சாகமற்ற வாழ்க்கை.

நெல்சனுக்குப் பதினாறு வயது. துருவப் பிரதேசத்துக்குப் பயணப்பட்ட இரண்டு கப்பல்கள் தயாராக இருப்பதாக அறிந்தான் இளைஞன் நெல்சன். அக் கப்பல்களில் ஒன்றில் தன்னைச் சேர்த்து விடுமாறு மாமாவை நச்சரித்து, அதில் வெற்றியும் கண்டான். அம்மாதிரியான அபாயங்கள் நிறைந்த கப்பல் பயணங்களுக்கு உரிய வயதாகவில்லை நெல்சனுக்கு. ஆனாலும் மாமாவின் சிபாரிசில் உள்ளே புகுந்து விட்டான். துருவப்பிரதேசப் பனிப் பகுதிகளில் இரண்டு மாதங்களுக்கு மேல் பயணப்பட்டன அக்கப்பல்கள். ஒருநாள் கடுமையான மூடுபனி. முகத்துக்கு முன்னால் என்ன இருக்கு என்று தெரியாத கடும் மூடுபனி. நெல்சனும் அவன் நண்பன் ஒருவனும் கப்பலை விட்டுக் கிளம்பி, பனிக் கரடியைத் தேடிப் போயிருந்தார்கள். கப்பல் உறைபனியில் சிக்கி நின்றிருந்தது. வெளியே கடல் நீருக்குப் பதில் உறை பனிப் பாறை.

மூடு பனியில், முன்னால் இருப்பது தெரியாத நிலையில், வெள்ளைக் கரடி வேட்டைக்காகச் சென்ற நெல்சனின் நிலை எப்படி? மெல்ல மூடு பனி விலகிய போது நெல்சன் தன் முன்னால் பயங்கரமான ஒரு இராட்சத வெள்ளைக் கரடி பின்னங்கால்களால் நின்றபடி முன்னங்கால்களை உயர்த்தி ஆக்ரோஷமாக....... நெல்சன் தன்னிடமிருந்த துப்பாக்கியால் அதைச் சுட்டான். ஆனால் குறி



தவறிவிட்டது. அதே சமயம் கரடி வெறி கொண்டு தன் கூரான கொக்கி நகங்கள் கொண்ட கையை வீச..... அதன் அடி மட்டும் நெல்சனைத் தாக்கி இருந்தால்? உலகத்துக்கு ஓர் ஒப்பற்ற கடற் போர் வீரர் நெல்சன் கிடைத்திருக்க மாட்டார். என்ன நடந்தது?

கப்பலில் இருந்த பீரங்கி வீரன் நிலைமையை அறிந்து, பீரங்கியை வெடிக்க, அந்த வெடிச் சத்தத்தில் கரடி பயந்து, நெல்சனைத் தாக்குவதை விட்டு ஓடிவிட்டது. கப்பலுக்குத் திரும்பிய நெல்சனை, கப்பல் தலைவன் அவனது அசட்டுத் துணிச்சலுக்காகக் கண்டித்த போது, நெல்சன் கூறினான்: ''சார் நான் என் அப்பாவுக்குக் கரடித் தோலைப் பரிசாகக் கொண்டு செல்ல ஆசைப்பட்டேன்!'' என்று.

வியப்புக்கள் தொடரும்

# ஆலோசனை

**தமிழக** கிரிக்கெட் வீரர் எஸ்.பத்திரிநாத் தன் அனுபவத்திலிருந்து இளம் வீரர்களுக்குக் கூறும் சில ஆலோசனைகள்...

- **பத்து** வயசுலிருந்தே கிரிக்கெட் பயிற்சிகளைத் தொடங்கிடணும்.
- **கிரிக்கெட்** பார்ப்பது வேறு, விளையாடுறது வேறு... இந்த விளையாட்டின் நுணுக்கங்கள் தெரிஞ்சால்தான் சிறப்பா விளையாட முடியும். இதுக்கு முறையான பயிற்சி கட்டாயம் தேவை.
- **சரியான** பயிற்சி முகாம்களைத் தேர்ந்தெடுத்து அதுல உறுப்பினராகுங்க. கிரிக்கெட் கிளப்புகள்லேயும் சேரலாம். இதுதான் முதல் ஸ்டெப்.
- **பாட்டிங்,** பவுலிங்... இது ரெண்டுல உங்களுக்கு எது ஈஸியா வருதோ அதுல தீவிர பயிற்சி எடுக்கலாம்.
- **கிரிக்கெட்** விளையாட்டுப் பயணத்துல முக்கியமான கட்டம் கல்லூரி டீம். இங்கேதான் நிறைய மேட்ச் விளையாடுவோம். அதனால கிரிக்கெட்டை உற்சாகப்படுத்துற கல்லூரியில் சேருங்க.
- **கல்லூரிகளுக்கிடையே** நடக்கும் கிரிக்கெட் போட்டிகளில் சேம்பியனாக இருந்தால், மாநிலக் குழுவில் தேர்வாகும் வாய்ப்புக்கள் அதிகம்.
- **ஒவ்வொரு** முறையும் மைதானத்துல பயிற்சி எடுக்கும்போது விளையாட்டு நுட்பத்துல ஒருபடி முன்னேற்றம் இருக்கும்படி பார்த்துக்கோங்க.

(தொடர்ச்சி 17 ஆம் பக்கம்)



# விநோதக் குழந்தை

**டொலாஹா** எனும் நாட்டைச் சேர்ந்த பெண்மணியொருவருக்கு இயற்கைக்கு மாறான குழந்தையொன்று பிறந்துள்ளது. இக்குழந்தையின் கழுத்துப் பகுதி காணப்படவில்லை. இதன் தலை முழுமையாக உடம்பின் மேற்குப் பகுதிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. கண்கள் வழமைக்கு மாறாக உருண்டையாக வெளியில் தள்ளப்பட்டுக் காணப்படுகிறது. அநேகமாக ஒரு தவளையின் உருவில் காணப்படுவதாக சாரிகோற் நகரின் டொலாஹா பகுதியில் மார்ச் மாதம் 29 ஆம் திகதி பிறந்ததாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.





இக்குழந்தையைப் பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் கூடுவதாகவும், நெரிசலைத் தவிர்ப்பதற்காக அப்பிரதேச பொலிஸாரை வரவழைத்துள்ளதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. இயற்கைக்கு மாறான குழந்தை தொடர்பாக வைத்திய நிபுணர்கள் கூறுவதாவது, இக்குழந்தையின் தாயார் ஆற்றிலோ, குளத்திலோ குளிக்கும் போது தவளையின் கரு முட்டையுடன் சம்பந்தப்பட்டிருக்கலாமென்கின்றார்கள். அந்நேரத்தில் இப்பெண்ணின் உடலிலும் கருத் தங்கும் உணர்ச்சிகள் இருந்திருக்கலாமென்கின்றனர்.

# பாய்ச்சல்



**காற்றைக்** கிழித்துக் கொண்டு பாய்ந்து செல்லும் புல்லட் ரயில் வண்டியொன்றினையே படத்திற் காண்கின்றீர்கள். மணித்தியாலத்திற்குக் குறைந்த பட்சம் 350 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய இப்புகையிரத வண்டிகள் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளின் நகரங்களை இணைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. இதனைத் தொடர்ந்து சீனாவும் தனது இரு பெரும் நகரங்களான பீஜிங்கையும் - ஷங்காய் ஆகியவற்றை இணைப்பதற்கு இப்புகையிர வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளது. இவை 2012 ஆம் ஆண்டிலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1318 கிலோமீற்றர் இடை தூரங்களைக் கொண்ட இவ்விரு நகரங்களுக்கு மிடையில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக உருவாக்கப்பட்டுவரும் புல்லட் ரயில் வண்டியை உருவாக்கிவரும் தொழில்நுட்பவியலாளர்கள் இவை இரண்டு வருடங்களுக்குள் உருவாக்க முடியுமெனக் கூறுகின்றனர். தற்போது இரு நகரங்களுக்குமிடையிலான பயணத்திற்கு சுமார் 12 மணித்தியாலங்களைச் செலவிடும் பிரயாணிகள், குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் நான்கு மணி நேரத்தில் பிரயாணிக்க முடியுமெனக் கூறப்படுகின்றது.






இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16A, ஆம் இலக்கத்தில் டிடி எண்டபிரைஸஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் மார்ச் 28 திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.